
அழகிய
நந்தினி
₹10
பெண்கள் மாத இதழ்
காதல் நிலவு
அகிலா கோவிந்த்

# காதல் நிலவு...!

மதுராவுக்கு அன்று ஒரே பரபரப்பாக இருந்தது. என்னவென்று தெரியவில்லை. ஏதோ ஓர்உணர்வு எதையோ பறிகொடுத்து விட்ட தவிப்பு.

காலை அவசர அவசரமாய் வேலைகளை முடித்து கிளம்பியவள். தோழி நீலா அந்த விஷயத்தைச் சொன்னதும் அப்படியே உட்கார்ந்து விட்டாள். தன் அரிசிப் பற்கள் அத்தனையும் கடிபட கொதித்துப் போனாள்.

அவளால் கொஞ்சமும் அந்த விஷயத்தை ஜீரணிக்க முடியவில்லை.

நம்ப முடியாமல் காது மடல்கள் அதிர பார்த்தவளை நீலாவும் அதிசயமாய்ப் பார்த்தாள்.

## அகிலா கோவிந்த்

நான் சொல்வதெல்லாம் உண்மை மதுரா... என்றாள் திரும்பவும் அழுத்தமாக.

என்னால் கொஞ்சமும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை... மேடம் அவர்களுக்கு இந்த விஷயம் தெரியுமா? என்றாள் மதுரா பிரயாசையுடன்.

நீலா சிரித்தவள்,இந்த ஏற்பாட்டை செய்திருப்பதே மேடம் அவர்கள்தான் என்றாள் சிரிப்பு மாறாமல்.

என்ன மேடம்தான் இதைச் செய்தார்களா? மருதாணி விரல்களை பிசைந்தபடி மதுரா சிவந்தாள்.

நீலா மதுராவின் சிவந்த அழக முகத்தையும் இருபது வயது தங்கச் சிலையாய் பளீரிடும் அவளது வனப்பான உடல் அழகையும் ஒருகணம்மெய் மறந்து ரசித்தவள்,இவள் பயப்படுவதில் அர்த்தம் இருக்கிறது... என தனக்குத்தானே முணுமுணுத்துக்கொண்டு அகன்றாள்.

மதுரா மறுபடியும் தவித்தாள்.

எப்படி இதற்கு மேடம் ரங்கமணி அம்மாள் ஒத்துக்கொண்டார்கள்? என்ற ஆச்சரியம்கேள்வியாய் எழுந்து அவளை வாட்டியது.

மதுரா பயப்படும் விஷயம் இதுதான்.

அவளது அன்பு அனாதைஇல்லத்திற்கு பெரும் பணக்காரரும் இல்ல பராமரிப்பிற்கு நிறைய பணம் மற்றும் நன்கொடைகள் அளிப்பவருமான குருநாதர் தனது மகனுடன் வர இருக்கிறாராம். பெரியவர் குருநாதருக்கு தனது மகனுக்கு மனைவியாய் வருபவள் அன்பு இல்லத்திலிருந்து வர வேண்டும் என்ற ஆசையாம். அதனாலே தன் மகனை கையோடு கூட்டி வந்து மகனை வைத்தே செலக்ட் செய்யப் போகிறாராம் அன்பு இல்லத்து பெண்களை எல்லாம் வரிசையில் நிறுத்தி சந்தையில் மாடு பிடிப்பது போல் அவர்களில் ஒருத்தியை குருநாதருடைய மகன் தேர்ந்தெடுக்கப்போகிறானாம்.என்ன ஒரு அடாவடித்தனம்? இதை மேடம் அவர்களும் அனுமதித்து ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். என்ன ஒரு அநியாயம்?

அதற்கு மேல் பொறுக்க முடியாதவள் போல் நேராய் ரங்கமணி அம்மாளையே தேடிச்சென்று விட்டாள் மதுரா.

மேடம் ரங்கமணி அம்மாள் தனது அலுவலக அறையில் மூக்குக் கண்ணாடியை இடுக்கியபடி கணக்குகளை பார்த்துக் கொண்டிருந்தவள் மூச்சு வாங்க மதுராவைக் கண்டதும் நிமிர்ந்தாள்.

அவளுக்கு எப்போதும் மதுரா மேல் பரிவும், தனிப் பாசமும் உண்டு. தனது களைத்த அறுபது வயது சரீரத்தின் நோவுகளைப் பொருட்படுத்தாமல் அவசரமாய் எழுந்து வந்து மதுராவை பிடித்துக் கொண்டாள்.



என்ன கண்மணி ஆயிற்று? என ரங்கமணி அம்மாள் கனிவாய் வினவியதும், அம்மா, இன்று நம் இல்லத்திற்கு யாரும் வர இருக்கிறார்களா? என்றாள் சாதாரண குரலில்.

ரங்கமணி அம்மாளும் பதட்டம் நீங்கி மூச்சு விட்டவள்,ஆமாம் மதுரா. உனக்குத் தெரியாதா? இன்று நம் இல்லத்திற்கு பெரியவர் குருநாதரும் அவரது மகன் சத்யனும் வர இருக்கிறார்கள்... என்றாள் முகம் மலர்ந்தவளாய்.

சத்யனா?

ஆமாம் மதுரா; பெரியவரின் தொழிற் கூடங்களை அவரது பின்னலை கவனித்துக் கொண்டிருக்கும் அவரது ஒரே வாரிசு ஒரே மகன்!

எதற்கு வருகிறார் அம்மா?

மதுரா கேட்டுவிட்டு கேள்விக்குறியோடு பார்க்க ரங்கமணி அம்மாவின் கனிவுப் புன்னகை மேலும் பெரிதாக்கியது.

மதுரா, அவர்களது கம்பெனி நிர்வாகப் பிரிவிற்கு நம்பிக்கையான ஆள் ஒன்று தேவையாம், அதற்காக நமது அன்பு இல்லத்திலிருந்து ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது பெரியவரின் விருப்பம். அதற்காகவே நமது இல்லத்திற்கு இன்று வர இருக்கிறார்கள்...

அவ்வளவுதானா?

அவ்வளவுதான். ஆனால்.. என்று ரங்கமணி அம்மாள் இழுத்தது அவளை மேலும் வியப்பாக்கியது.

சொல்லுங்கள் அம்மா...

பெரியவர் சத்யனுக்கு மணம் முடித்து வைக்க பெண்ணும் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒருவேளை அவர் கம்பெனிக்கு தேர்ந்தெடுக்கும் பெண் அவரது எதிர்பார்ப்புபடி அமைந்து விட்டாள் அந்தப் பெண்ணையே தனது மருமகளாக்கிக் கொள்ள உள்ளூர விருப்பமிருப்பதாகவும் பெரியவர் தெரிவித்திருக்கிறார். ஆனால் அதுவும அந்தப் பெண் விரும்பினால்... அவள் சம்மதத்துடன்தான்...

ஒருவாறு ரங்கமணி அம்மாள் சொல்லி முடித்து விட்டாள்.

மதுராவிற்கு எல்லாம் புரிந்து விட்டது.

தோழி நீலா சொல்லி அவள் கேள்விப்பட்ட அந்தஅடாவடித்தனமான சந்தையில் மாடு பிடிக்கும் விஷயத்தைத்தான் இவ்வளவு நாசூக்காய் ரங்கமணி அம்மாள் சொல்கிறார்கள் என்பதை தெரிந்து கொண்டாள்.

ஆனால் தோழி நீலாவிடம்பேசுவது போல் எடுத்தெறிந்து அன்பும் கருணையும் கொண்ட ரங்கமணி அம்மாளிடம் பேச முடியாது.... பேசுவது

மதுராவின் வழக்கமும் அல்ல. இயன்றவரை அம்மாளிடம் அவளும் நாசூக்காகவே சொல்லிப் பார்த்தாள்.

ஆனால் ரங்கமணி அம்மாள் விடாப்பிடியாக, நீ ஒன்றும் கவலை கொள்ள, வேண்டாம். எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன் கண்மணி... என்று உறுதிபட பேசியபோது அதற்கு மேல் அவளால் ஒன்றும் சொல்ல முடியாமல் போயிற்று.

பலியாடு போல வழியில்லாம் சம்மதித்தாள் மதுரா.

ஆயிற்று ஒரு வழியாய் கொஞ்ச நேரத்தில் பெரியவரின் கார் அன்பு இல்த்திற்குள் நுழைந்தது. ரங்கமணி அவலாய் வரவேற்க ஓடினாள்.

உள்ளிருந்து பெரியவருக்கு பதில் கம்பீரமாய் தனது ஆஜானபாகுவாய் தோற்றத்துடன் இறங்கியது சத்யன் மட்டுமே!

வந்தவன்வேகமாய் அன்பு இல்லத்தை பார்வையிட ஆரம்பித்தான். சத்யன் வந்ததும் அன்பு இல்ல ஆயாவிலிருந்து மாணவிகளள் வரை அவனை விழுந்தடித்துக் கொண்டு பார்க்கப் போனது மதுராவுக்கு எரிச்சலையூட்டியது.

பெரிய மகாராஜா வந்து சுயம்வரம் நடக்கப் போகிறது போய் முக அழகை காட்டுங்கள்... என்று இகழ்ச்சியாய்த்தான் அந்த உதட்டுச் சாயத்துடன் கிளம்பிய மீனாவை நோக்கிச் சொன்னாள்.

மனச் சலனம் ஏதுமின்றி கர்மமே கண்ணாய் ரங்கமணி அம்மாளின் அலுவலக அறையில் அமர்ந்து தனது வேலையைத் தொடங்கினாள். அன்பு இல்ல வரவு செலவுகள், டோனர்களுக்கு தெரிவிக்க வேண்டிய கணக்குகள்,சேவக நிறுவனங்களுக்கு நிதி கேட்டு கடிதங்கள், என ஒவ்வொன்றாய் கவனம் செலுத்தி மதுரா தயாரித்தாள்.

அப்படியே வேலைகளில் ஆழ்ந்திருந்தவள் தற்செயலாய் நிமிர்ந்தபோது, எதிரே கைகளைக் கட்டியபடி குறுகுறுப்பாய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனைக் கண்டு ஒரு கணம் திடுக்கிட்டு விட்டாள்!

ஆறடி உயரமாய்மேல் நோக்கி வாரிய முடியுடன் திடமான புஜங்களுமாய் மலைக்க வைக்கும் கம்பீரத்துடன் தனது காந்தக் கண்களை வீசிப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்!

யார் நீங்கள்....?

மதுரா துணுக்குற்று கேட்டதும் அவனது முறுக்கேறிய மீசையின் கீழிருந்த உதடுகள் இறுக்கத்தை விடுவித்து மின்னலாய் பற்களைக் காட்டியது. நான்தான் சத்யன்...! என்றான் சத்யன் புன்னகை மாறாமல்.

ஓ... அந்த சுயம்வர மகாராஜாவா...?என உள்ளுக்குள் நகைத்தபடி மதுரா நினைக்கும்போதே, சத்யன் குறுஞ்சிரிப்புடன், அன்பு இல்ல



மாணவிகள் எல்லோரையும் பார்த்து விட்டேன், எனக்குப் பிடித்தது... நான் விரும்புவது யாரைத் தெரியுமா?

சிரித்தபடிட தன் கட்டு விரலை மதுராவை நோக்கிக் காட்டினான் சத்யன்.



# 2



மதுரா பயந்தபடியே நடந்தது.

சத்யன் தன் ஒற்றை விரலால் மதுராவைத்டதான் சுட்டிக் காட்டினான்.

எனக்கு உன்னைப் பிடித்திருககிறது. உன்னைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறேன்... என சொல்லவும் செய்தான்.

மதுரா தன் அரிசிப்பற்களை கடித்தபடி கோபமாய்ப் பார்த்தாள்.

எனக்கு உங்களை சுத்தமாய் பிடிக்கவில்லை..... என்றாள் ஆக்ரோஷமாக.

அதுபற்றி எனக்கு கவலையில்லை... சத்யன் உரக்கச் சொல்லி சிரித்தவன், சந்தையில் மாடு பிடித்து வாங்குகிறவர்கள் ஒருபோதும் மாட்டிடம் அபிப்பிராயம் கேட்பதில்லை கேட்க வேண்டியவர்களிடம்கேட்டால் போதும்:...

அவன் தன்னை மாட்டுடட்டன் ஒப்பிட்டுப் பேசுவது கண்டு மதுரா வெகுண்டு போனாள்.

கோபம் துடிக்க மேலும் மேலும் சிவந்த அவளது முகத்தை சத்யன்வெகுவாய் ரசித்தான்.

அடாடா.... நல்ல அழகுதான்....! சிவந்த முகமும் செவ்விதழுமாக பார்த்துக் கொண்டே இருக்கலாம்போல் அல்லவா இருக்கிறது.

மேலிருந்து கீழ்வரை ரசித்து அவளது அழகில் பார்வையை ஓட்டியபடி சத்யன் பேச தன்னை முன்பின் தெரியாத அந்நியன் ரசிப்பதைக் கண்டு உதடு துடித்து வெடித்துவிடப் போனாள் மதுரா.

நல்லவேளையாய் அதற்குள் ரங்கமணி அம்மாள் ரூமிற்குள் நுழைந்து விட்டாள்.

மிஸ்டர் சத்யன் நீங்கள்.. என்று இழுத்தபடி ரங்கமணி அம்மாள் நுழையவும்மதுரா சாந்தமாகி நிம்மதி பெருமூச்சு விட்டாள்.

சத்யனும் தன்னை பவ்யமாக்கிக்க கொண்டாள். நான் தேர்ந்தெடுத்து விட்டேன் அம்மா.... என்றான் தெளிவான குரலில்.

தேர்ந்தெடுத்து விட்டீர்களா? யார் அது?

ரங்கமணி அம்மாள் ஆவலாய் கேட்க சத்யன் பதில் சொல்லாமல் வேண்டுமென்றே அஃறிணை பொருள் போல் அதுராவைக் காட்டினான்.

மதுராவுக்கு சினம் எகிறிய அதே சமயம் ரங்கமணி அம்மாள், மதுராவையா சொல்கிறீர்கள்? நான் நினைத்தது சரிதான்...! என சொல்லியது மதுராவை திடுக்கிடச் செய்தது.

என்ன நினைத்தீர்கள் நீங்கள்?

சத்யன்,இந்தம அன்பு இல்லத்தில் சுறுசுறுப்பும் அறிவுத்திறமையும் கொண்ட பெண்களில் மதுராவுக்குத்தான் முதலிடம் நான் நினைத்தபடியே அறிவாளி அவள்தான்...!

ரங்கமணி அம்மா;ள கொடுத்த சர்டிபிக்கேட்டுக்கு சத்யன் பலமாய் தலையாட்டினான்.

ஆமாம்... ஆமாம் அறிவாளிதான்! பார்த்தாளே நிறைய அறிவு இருப்பது தெரிகிறது.... சத்யன் வேண்டுமென்றே இகழ்ச்சியாய் குறுகுறுப்புடன் மதுராவின் தலைப்புறம் பார்த்தவாறு பேசினான்.

மதுராவால் நீங்க்ள இவரிடம்.... என்று வெடிக்கப் போனவளை ரங்கமணி அம்மாள் தடுத்தாள்.. நீ கொஞ்சம் பொறு மதுரா, நான் பார்த்துக் கொள்கிறேன்.... என்றுஅம்மாள் கை உயர்த்திச் சொன்னதும் மதுராவால் ஒன்றும் பேச முடியாமல் ஆயிற்று.

ஆயினும் உதடு துடிக்கும் கோபத்துடன் அரிசிப்பற்களை கடித்தபடி சத்யனையே முறைத்தாள்.

சத்யன் அவளது படபடப்பையும் துடிப்பையும் வெகுவாய் ரசித்துவிட்டு ரங்கமணி அம்மாள் பக்கம் திரும்பினான்.

பாருங்கள் அம்மா, நீங்கள் எது பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை. அலுவலகம் அருகிலே கம்பெனியின் கெஸ்ட் ஹவுஸ் ஒன்று இருக்கிறது. நிறை பெண் ஊழியர்கள் தங்கியிருக்கிறார்கள். அங்;கே மதுராவும் தங்கிக்கொள்ளலாம். நல்ல வேலை, நிறை சம்பளம், பிரச்சினை ஒன்றும் வராது. எதற்கும் நீங்கள் யோசித்துக் கொள்ளுங்கள்...

சத்யன் இப்படிச் சொன்னதும் ரங்கமணி அம்மாள் ஏறக்குறைய பதறியே விட்டாள்.



ஐயோ, இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? உங்களது அலுவலகத்தில், உங்கள் கண்காணிப்பில் வேலை செய்ய மதுரா புண்ணியம் செய்திருக்க வேண்டும். தாராளமாய் நீங்கள் மதுராவை கூட்டிப் போகலாம்...

ரங்கமணி அம்மாள் சொல்லிக் கொண்டே போக மதுரா திகைப்பின் உச்சிற்கே சென்று விட்டாள்.

அதைவிட சத்யன் அவள் முன் பவ்யமாய் இருப்பதும் தன்னைச் சீண்டுவதுமான அவனது நடிப்பை கொஞ்சமும் ரங்கமணி அம்மாள் உணராமல் இருக்கிறார்களே... என வருந்தவும் செய்தாள்.

ஆயிற்று, ஒரு வழியாய் சத்யன் ரங்கமணி அம்மாளிடம் பேசி விட்டு எழுந்தான். மதுராவை தயாராக இருக்கச் சொல்லுங்கள். நாளை வந்து அழைத்து போகிறேன் என்றபடி மதுராவைப் பார்த்து விஷமச் சிரிப்பு சிரித்தவாறு விடைபெறப் போனான் போனவனை ரங்கமணி அம்மாள் நிறுத்தினாள்.

சத்யன், அன்பு இல்ல போட்டோ ஆல்பம் ஒன்றை பெரியவர் போன முறையே பார்க்கச் கேட்டார்கள். தருகிறேன் கொடுத:து விடுகிறீர்களா?

கொடுங்கள்அம்மா...

இதோ எடுத்து வருகிறேன்... என ரங்கமணி அம்மாள்அங்கிருந்து அலுவலக அறையை நோக்கிப் போனாள்.

தன்னை பலியாடு போல கசாப்புக் கடைக்காரனான சத்யனிடம் ரங்கமணி அம்மாள் விட்டுவிட்டு செல்வது கண்டு மதுரா எரிச்சலடையத்தான் செய்தாள்.

சத்யன் அவள் நினைத்ததுபோலவே குறும்புச் சிரிப்பும், கெக்கலிப்பு பார்வையுமாய் அவள் பக்கம் வந்தான்.

பிடிக்கவில்லை... பிடிக்கவில்லை... என்றாயே.... இப்போது என்ன நடக்கிறது பார்த்தாயா?

நான் வரமாட்டேன். கண்டிப்பாக வரமாட்டேன்...! என்றாள் மதுரா உறுதியான குரலில்.

சத்யன் அலட்சியமாகச் சிரித்தான்..

உன் அபிப்;பிராயத்தை யார் கேட்டது? வா என்றால் வர வேண்டும், போ என்றால் போக வேண்டும் அதுதான் உன் கதி....

முடியாது... ஒரு போதும் நான் வரமாட்டேன்....

மாட்டேன் என்றால் விட்டு விடுவேனா?

பின் என்ன செய்வீர்களாம்?

சத்யன் குனிந்து கோபம் கொப்பளித்தஅவள் முகத்தை நேருக்கு நேராய் பார்த்ததான்.

உன் தலை முடியை பிடித்து தரதரவென இழுத்துச் சென்று விடுவேன். நாளை நீ வரமாட்டேன் என்று அடம்பிடித்தால் அதுதான் நடக்கப் போகிறது....

சொல்லிவிட்டு சத்யன் அலட்சியமாய் சிரித்தான்.

மதுராவுக்கு ஒரே அதிர்ச்சி! என்ன சொன்னான்?

தலைமுடியைப் பிடித்து தரதரவென....

அதுவும்... மதுராவையா....?



## 3



மதுரா நெருப்புக் கனலாய் தகதகத்துக் கொண்டிருந்தாள். அவளுள் கொதிப்பு அடங்க ரொம்ப நேரமாயிற்று மருதானி விரல்களை பிசைந்தபடி யோசித்தாள்.

என்ன ஒரு திமிர், தலைமுடிய்யை பிடித்து தரதரவென் இழுத்துச் சென்று விடுவானாம்...அவனை சும்மாவிடக் கூடாது... நாக்கைப் புடுங்குகிற மாதிரி நாலு கேள்வி கேட்க வேண்டும்... அவனது கோணல் புத்தியை சரி பண்ணவேண்டும்.

ஆக்ரோஷமாய்உள்ளுக்குள் கர்ஜித்தவளையாரோ உலுக்குவது கண்டு நினைவுக்கு வந்தாள்.

எதிரில் புன்சிரிப்புடன் ரங்கமணி அம்மாள்.

என்ன மதுரா யோசனை?

ஒன்றுமில்லை அம்மா...

நீ ஒன்றும் பயப்படத்தேவையில்லை. அவர்கள் ரொம்ப நல்லவர்கள். உன்னை நன்றாக கவனித்துக் கொள்வார்கள் மதுரா....

மதுராவிற்குதான் பயந்தபடியே நடப்பது கண்டுஅதிர்ச்சியாகத்தான் இருந்தது. இருந்தாலும் அம்மாளிடம் பேசி எப்படியாவதுசத்யனோடு போவதை நிறுத்தி விடலாம் என்ற நம்பிக்கையும் துளிர்ந்தது.

அம்மா...

சொல் மதுரா....



எனக்குஉங்களை, அன்பு இல்லத்தை விட்டு பிரிந்திருப்பது... நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று அதனால்....மதுரா மெல்ல தயங்கியவள், புரிந்து கொள்ளுங்கள் அம்மா, நான் பேசாமல் இங்கேஇப்படியே இருந்து விடுகிறேன்? கெஞ்சும் குரலில் மதுரா கேட்டாள்.

பேரார்வத்துடன் பெரும் பிரயாசையாய் ரங்கமணி அம்மாளைப் பார்த்தாள். ரங்கமணி அம்மாளும் நெகிழ்ந்து போனவளாய் கண்கலங்க அவளை இறுக அணைத்துக் கொண்டாள்.

புரிகிறது கண்மணி. எனக்கு மட்டும் உன்னைப் பிரிந்து இருக்க முடியுமா என்ன?

ஒருகணம் உணர்ச்சிப் பிரவாகத்தில் தத்தளித்த ரங்கமணி அம்மாள துளிர்த்த நீர்த்துளிகளை துடைத்துவிட்டு.

ஆனாலும் நம் சூழ்நிலை இப்படியெல்லாம் செய்யத் தோன்றுகிறதம்மா...என்று பெருமூச்சு விட்டாள்.

சூழ்நிலையா என்ன சொல்றீர்கள் அம்மா?

ஆமாம் மதுரா, நாளுக்கு நாள் ஏறி வரும் விலைவாசியில் நமதுஅன்பு இல்லத்திற்கு தேவையான பொருளாதார தேவைகளும் அதிகரித்துக் கொண்டே போகிறது. நமக்கு வரும் நன்கொடைகளையும், ஸ்பான்ஸர்களையும் வைத்து இல்லத்தைப் பராமரிப்பது சிரமமான விஷயமாகிறது. இந்நிலையில்....

சொல்லுங்கள் அம்மா....

நம் இல்லத்திற்கு நன்கொடைகளும் பெரும் உதவிகளும் செய்து வருபவர் சத்யனின் தந்தை குருநாதர்.

அவர் மனம் வருந்தும்படி நாம் கொஞ்சமும் நடந்து கொள்ளக்கூடாது என்றே தோன்றுகிறதம்மமா.... மேலும்...

திகைப்புடன் தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த மதுராவை ஒருகணம் நோக்கிவிட்டு ரங்கமணி அம்மாள் தொடர்ந்தாள்.

இம்முறை பெரியவரே நேராய் நம் இல்லத்திற்கு வந்த அவரது பெரும் உரத் தொழிற்சாலை நிர்வாகப் பிரிவிற்கு நம்பிக்கையான திறமையான ஆள் தேவை. நமது அன்பு இல்லத்திலிருந்து நீங்கள்தான்அனுப்பி வைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அதனால் நீயே யோசித்துப் பார். நமது அன்பு இல்ல வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருக்கும் அவரது விருப்பத்தை நாம் புறக்கணிக்கலாமா? அதனால்தான் வேறு வழியில்லாமல்...?

சொல்லிய ரங்கமணி அம்மாள் மதுராவின் குழப்பமான முகத்தைப் பார்த்ததும் பேச்சை டக்கென நிறுத்தினாள். பக்கத்தில் போய் பரிவுடன் அவள் தலையைக் கோதினாள்.

என்ன மதுரா, இதில் உனக்கு விருப்பமில்லையா?

மதுராவிற்கு ஒருகணம் என்ன சொல்வதென்று தெரியவில்லை. ரங்கமணி அம்மாள் சொல்லும் அன்பு இல்லச் சூழ்நிலை புரிந்தது. மறுபுறம் தன்னை தலைமுடியை பிடித்து இழுத்துச் சென்று விடுவேன் என திமிராய் சவால் விட்ட சத்யனின் முகம் தோன்றி வாட்டியது.

முடிவு எடுக்க முடியாமல் மதுரா ஒரு கணம் திணறினாள். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, அப்படியெல்லாம் ஒன்று மில்லையம்மா. எனக்கு விருப்பமிருக்கிறது... என்றாள் ஒப்புக்கு.

ரங்கமணி அம்மாள் அதை வேறுவிதமாக புரிந்து கொண்டாள்.

எனக்குப் புரிகிறது கண்மணி, எங்களோடு இவ்வளவு காலம்இருந்து விட்டு திடீரென புதுச்சூழ்நிலையில் கொண்டு போய் விட்டால் எப்படியிருக்குமோ....என அஞ்சுகிறாய். அப்படித்தானே? ஆனால் நீ கொஞ்சமும் கவலைப்படத் தேவையில்லை. அவர்கள் ரொம்பவும் நல்லவர்கள். உன்னை தங்கள் வீட்டு பெண்போல் பார்த்துக் கொள்வார்கள்.

ரங்கமணி அம்மாள் விடவில்லை. என்னென்னவோ சொன்னாள். அவள் மனதை மாற்ற எல்லாவித முயற்சிகளையும் செய்தாள். மதுராவிற்கும் புரியத்தான் செய்தது. மதுராவிற்கு வேறு வழியில்லை. விதியும் இல்லை.

கடைசியில் பலியாடு போல் தலையாட்டினாள். அன்பு இல்லத்தை பிரிந்து மறுநாள் சத்யனுடன் செல்ல அரைமனதுடன் சம்மதித்தாள்.



## 4



மறுநாள் காலை விடிந்ததும் அன்பு இல்லத்தில் சத்யனின் குரல்தான் ஒய்யாரமாய் கேட்டது. கடன்காரன் காலையிலே வந்து விட்டானா...? என்ற பதைப்புடன் தான் மதுரா எட்டிப் பார்த்தாள்.

அலுவலக ரூமில் ரங்கமணி அம்மாளுடன் உற்சாகமாய்அ சத்யன் பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது.



அவனுக்கும் சந்தோஷம்தான். உற்சாகம்தான்... சந்தையில் மாட்டை விலைக்கு வாங்கிப் போவது போல் அல்லவா அவளை வாங்கிப் போகிறான்...?

ஆனால் மதுராவிற்கு...?

அவனுடன் போவதைக் காட்டிலும், பிறந்தது முதல் இவ்வளவு வருடம் வளர்ந்த அன்பு இல்லச் சூழ்நிலையை, தோழிமார்களை பிரிவது மதுராவிற்கு கவலையைக் கொடுத்தது. அவளைப் பொறுத்தவரை அவளதுசொந்த பந்தங்கள் உடன் பிறப்புகள் அவர்கள்தானே! அவர்களை எல்லாம் பிரிந்து தனியான சூழ்நிலையில் எப்படி இருக்கப் போகிறோம்... என வாடவும் செய்தாள்.

போதாக்குறைக்கு உயிர்த்தோழிகள் கலா,மைதிலி, புவனா என எல்லோரும் ஓடிவந்து, அழாத குறையாய் அவளைக் கட்டிக்கொண்டனர். மதுரா எங்களையெல்லாம் மறந்துவிடமாட்டாயே? என அவர்கள் அங்கலாய்த்ததும் மதுராவிற்கு கண்கலங்கத்தான் செய்தது.

என்ன சொல்கிறீர்கள்? உங்களையெல்லாம் மறப்பதா? உங்களை ஒருபோதும் பிரியமாட்டேன். வாரம் ஒரு முறை உங்களை சந்திக்க கண்டிப்பாய் இங்கு வந்து விடுவேன்... கவலைப்படாதீர்கள்... என மதுரா சமாதானப்படுத்தவும் செய்தாள்.

மதுரா இப்படி சொல்லி முடித்ததும்தான் தாமதம் பின்னாலிருந்து வாரம் ஒருமுறையல்ல, வருடத்திற்கு ஒருமுறை... அவளை திருத்தியபடி கனீர்க்குரல்கேட்டது. துணுக்குற்று கோபம் பொங்க மதுரா திரும்பினாள்.

பின்னால் கர்ஜித்தபடி சத்யன்,

சத்யனைக் கண்டதும் மற்ற தோழிகள் பயமான மரியாதை கொண்டவர்களாய் விலகிவிட மதுரா மட்டும் தூண்டில் மீன் போல் மாட்டிக் கொண்டாள்.

சத்யன் கெக்கலிக்கும் பார்வையுடன் அவள் பக்கம் வந்தான்.

நேற்று என்னமாய் சவடால் அடித்தாய்... பார்... இன்று குதிபோட்டுக் கொண்டு கிளம்பிவிட்டாய்? என்றான் இகழ்ச்சியாக.

நான் ஒன்றும் குதி போட்டுக் கிளம்பவில்லை... என்றாள் மதுராவும் ரோஷமாக.

பின்?

மேடம் சொன்னார்கள் என்பதற்காக மட்டும் வருகிறேன்... சொன்னவள் சத்யனிடம் தொனித்த கம்பீரத்தையும் மிடுக்கையும் வியப்பாகவே பார்த்தாள். அவன் கண்களில் காந்தமும்,உடம்பில் ஒருவித ஈர்ப்பும் இயல்பாய் ஓடுவது அவளை திகைக்க வைத்தது.

அவள் உணராமல்,ஓஹோ.... என்றான் சத்யன் அலட்சியமாய்.

மறுபடியும் சிலிர்த்தாள் மதுரா.

ஆனால் ஒன்று நிச்சயம்....

என்ன?

எனக்குப் பிடிக்கவில்லை என்றால் உடன் அடுத்த நிமிடமே இங்கு திரும்பி வந்து விடுவேன்...

மதுரா சொன்னதும் சத்யன்சிரிப்பை பெரிதாக்கினான்.

என்ன சிரிக்கிறீர்கள்?

அது நடக்காத காரியம்...

ஏன்?

உன்னை விட்டால்தானே?

மதுரா முறைக்க சத்யன் சிரிப்பைக் கூட்டினான்.

என்னிடம் வந்த பெண்கள் அவ்வளவு சுலபத்தில் தப்பித்ததாக சரித்திரம் கிடையாது...

அதையும் பார்த்து விடுவோம்... என்றாள் மதுரா விடாப் பிடியாக.

ம்ம்... பார்த்து விடுவோம்...! மர்மச் சிரிப்பொலி மாறாமல் சத்யன் நகர்ந்தான்.

மதுராவிற்கு முதல் முறையாய் பயமான கிலி பரவியது.

என்னிடம் வந்த பெண்கள் தப்பித்ததில்லை... என்று சொன்னானே சரியான பெண் பித்தனாய்இருப்பானோ?

நகம் கடித்தபடி யோசித்தவளை மேற்கொண்டு யோசிக்க விடாதபடி ரங்கமணி அம்மாள் வந்து விட்டாள்.

உன் உடைமைகள் எல்லாவற்றையும் பேக் செய்து விட்டாயா மதுரா?

ஆமாம் அம்மா.. என்றபடி மதுரா தன் பெட்டிகளை காட்டினாள் கூடவே அவளுள் நப்பாசை துளிர்க்க ரங்கமணி அம்மாளை கெஞ்சலுடன் பார்த்தாள்.

அம்மா...

சொல் மதுரா...

நான் கண்டிப்பாக போக வேண்டுமா? வேறு வழியே இல்லையா?

கெஞ்சும் குரலில் கேட்ட மதுராவை ஒரு கணம் திகைத்து நோக்கிய ரங்கமணி அம்மாள் அவள் தங்களையெல்லாம் விட்டுப் பிரிந்திருக்க மனம் கலங்குகிறாள் என்றே நினைத்தாள்.

மதுரா, நீ எதற்கும் பயப்பட வேண்டாம்...



ஆறுதலாய் அவள் பக்கத்தில் வந்து அணைத்தாள் ரங்கமணி அம்மாள்.

மதுரா, நீ எத்தனை நாளைக்குத்தான் இந்த அன்பு இல்லத்திலே சிறைபட்டிருக்க முடியும்?உனக்கும் ஒரு நல்ல ஒளிமயமான எதிர்காலம் வேண்டாமா? அதற்குத்தான் இந்த ஏற்பாடு...!

ஒளிமயமான எதிர்காலமா? என்னமா சொல்கிறீர்கள்? மதுரா துணுக்குற்றுக் கேட்டாள். ரங்கமணி அம்மாளின் பேச்சு அவளுக்கு எதையோ உணர்த்துவது போல் இருந்தது.

ஆனால் மதுரா திகைத்துக் கேட்டதும் ரங்கமணி அம்மாள் சுதாரித்துக் கொண்டாள்.

அது ஒன்றுமில்லை கண்மணி எல்லோருடைய வாழ்க்கையிலும் திருப்பு முனையாக ஏதாவது ஒன்ற நிகழும் அப்படி ஒன்று நிகழ்ந்தால் அதுவே அவர்களது பிரகாசமான எதிர்காலத்திற்கு வழிகாட்டியாய் அமையும். அதைத்தான் நான் சொல்ல வந்தேன்.... என்று சமாளிக்கவும் செய்தாள்.

மதுராவிற்கு தோழிகள் முன்பு சொன்னது திடுமென ஞாபகத்திற்கு வந்தது.

பெரியவர் அன்பு இல்லத்திலிருந்து வெறும் வேலைக்காக ஆளை தேர்ந்தெடுக்கவில்லை. தேர்ந்தெடுக்கும் பெண் பிடித்துவிட்டால் அவளையே தன் வீட்டு மருமகளாக்கிக் கொள்ள வேண்டும் என்பதும் அவரது திட்டம்... தோழிகள் கூற்றுப்படி ரங்கமணி அம்மாள் சொன்ன ஒளிமயமான எதிர்காலம் இதுவாகத்தான் இருக்குமோ?

அப்படி வேலைக்குப் போய் சத்யனை மணந்து கொள்வதுதான் டர்னிங்பாயிண்ட்டாய் அவளது பிரகாசமான வாழ்க்கைக்கு வழிகாட்டுமா?

நிச்சயமாய் இராது. அந்த திமிர்க்காரனுக்கு கழுத்தை நீட்டுவதற்கு பதில் ஏதாவது ஒரு கழுதைக்கு கழுத்தை நீட்டலாம்.

மேலும் யாரோ முடிவெடுத்து யாரோ தாலிகட்ட மதுரா ஒன்றும் தலையாட்டி பொம்மை இல்லை. அவளுக்கு மூளை என்று ஒன்று இருககிறத அதை வைத்து யோசிப்பாள், யோசித்து முடிவெடிப்பாள்...?

மதுரா தனக்குத்தானே பேசியவள் கடைசி வாக்கியங்களை உரக்கவே உச்சரித்து விட்டாள்.

பக்கத்திலிருந்த ரங்கமணி அம்மாள் திடுக்கிட்டு உலுக்கி, என்ன யோசனை? என்ன முடிவு...மதுரா? என கேட்கவும்தான் அவளுக்குஉணர்வே வந்தது.

அதெல்லாம் ஒன்றுமில்லையம்மா.. என்று அவசரமாய் சமாளித்தாள்.

சரி கிளம்பு மதுரா. சத்யன் உனக்காக காத்துக்கொண்டிருக்கிறார்...

ரங்கமணி அம்மாள் மதுராவை துரிதப்படுத்தியதோடு அவள் கிளம்புவதற்காக ஒத்தாசைகளையும் செய்தாள்.

ஆயிற்று, ஒருவழியாய் மதுரா ரங்கமணி அம்மாளிடம் தோழிகளிடம் கண்ணீர் மல்க விடைபெற்று சத்யனுடன் கிளம்பினாள். சத்யன் தனது பளபள காரில் அவளை ஏற்றிக்கொண்டான். கார் கிளம்பியது.

கார் அன்பு இல்ல காம்பௌவுண்டை விட்டு வெளியேறி முன்னேற.... திரும்பித் திரும்பி அன்பு இல்லத்தை பார்த்த மதுராவின் கண்களில் தாரை தாரையாய் கண்ணீர் பெருகி வழிந்தது.

அதை உற்றுக் கவனித்த சத்யன். அடடா, என்ன ஒரு நடிப்பு! என்றான்அலட்சியமாக.



# 5



சத்டயனின் கிண்டல் குரல் கேட்டதும் தான் மதுராவிற்கு சுருக்கென்றது.இப்படி ஒரு திமிர்க்காரனுடன் பயணம்செய்கிறோம் என்ற உணர்வே வந்தது.

என்ன சொல்கிறான்... நடிப்பா? இவ்வளவு வருடம் பிறந்து வளர்ந்து அவள் உயிரோடு கலந்து விட்ட அன்பு இல்லத்தை, அவள் துயத்தோடு பிரிய முடியாமல் பிரிந்து வருவது அவனுக்கு நடிப்பாகத் தெரிகிறதா?

கோபம் பொங்கியவளாய் அவன் பக்கம் திரும்பினாள்.

உணர்வற்ற மரக்கட்டைகளுக்கு உணர்ச்சிகளில் தவிப்பது நடிப்பாய்த்தான் தெரியும்... என்றாள் ஆக்ரோஷமாக.

ஆமாம்... நான் மரக்கட்டைதான்... என்றபடி கைகளை விரித்து சத்யன் சிரித்தான். மரக்கட்டைகள் ஒருபோதும் கண்களை கசக்குவதில்லை. பிழியப்பிழிய அழுவதில்லை.....

மறுபடி தான்அழுவதை அவன் கிண்டலடிப்பதுகண்டு மதுரா அவசரமாய் கண்களை துடைத்துக் கொண்டாள்.

கர்ச்சிப் வேண்டுமா?



அவசரமாய் பாக்கெட்டுக்குள்ளிருந்து கர்ச்சிப் எடுத்து கரிசனமாய் நீட்டினான்.

மதுரா முறைக்கவும் சிரித்தபடி உள்ளே வைத்தவன் அட இப்போதுதான் உன்முகம் பளிச்சென பிரகாசமாக இருக்கிறது... என்றான் சிரிப்பு மாறாமல்.

மதுராவிற்கு அவனிடம் பேச்சைக் கொடுத்தால் வம்பு என்று தோன்றியது. பேசாமல் காரின் வெளியே பராக்கு பார்க்க ஆரம்பித்து விட்டாள்.

அவள் மனநிலையை சத்யன் புரிந்து கொண்டானோ என்னவோ அவனும் ஒன்றும் பேசாமல் காரை செலுத்தினான்.

கொஞ்ச நேரம் சென்றிருக்கும்.

மதுரா ஞாபகம் வந்தவளாய் திருமபி, இன்னும் எவ்வளவு நேரமிருக்கிறது? என்றாள்.

சத்யன் கடிகாரத்தைப் பார்த்தவன், எண்பது கிலோ மீட்டர்கள், ஏறக்குறைய இரண்டு மணி நேரம் ஆகலாம்.. என்றான் அதே தொனியில்.

ஆனால்... வழியெல்லாம் மனித நடமாட்டமில்லாத காட்டுப் பகுதியாய் அல்லவா தெரிகிறது? என்றாள் தன் வியப்பைக் காட்டியபடி.

ஆமாம்... காட்டுப்பகுதிதான். முட்கள், புதர்கள், காட்டுச் செடிகள் என வழி நெடக அவைகள்தான். வழியில் சின்ன ஊரோ, கிராமமோ கூட கிடையாது...

சத்யன் சொன்னதோடு நிறுத்தாமல் அவளை உற்றுப் பார்த்தான்.

உனக்கு பயமாக இருக்கிறதா?

என்ன பயம்?

மதுரா தோள்களை குலுக்கிக் கொண்டாள்.

சத்யனின் இதழ்களில் குறுஞ்சிரிப்பு அரும்பி விரைந்தோடியது.

தனிமையான இடம் காட்டுப்பகுதி. உன்னை நான் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.

ஒஹோ... என்றபடி திரும்பிசத்யனைப் பார்த்தவள் தெரிந்த அவனதுபளபளப்டபான சிகையில் தனது விரல்களை அலைய அசைப்படுவதைக் கண்டு தனக்குத்தானே அதிர்ந்தாள்.

என்ன ஒஹோ?

நான் ஒன்றும் பயந்தவள்அல்ல. என்னைப் பாதுகாத்துக் கொள்ள எனக்குத் தெரியும....

அப்படியா?

சத்யனின் குரல் ஏளனமாய் ஒலிக்கவும், கராத்தே ஓரளவு பயின்றிருக்கிறேன். கைப்பையில் சிறிய பேனாக் கத்தி இருக்கிறது. தேவைப்பட்டால் அதற்கு வேலை கொடுத்து விடுவேன்.... என்றாள் மதுரா வெடுக்கென்று.

அட...!

சத்யன் தோள்களை குலுக்கி பெரும் வியப்பு காட்டினான்.

ஆமாம்... உன் பெயர் என்ன சொன்னாய்?

அதற்குள் மறந்து விட்டதா? என்ன ஒரு ஞாபக சக்தி....

மதுரா இகழ்ச்சியாய் சொன்னதைச் சொல்வதைக் கூட சத்யன் வெகுவாய் ரசித்தான்.

மோசமான ஞாபக சக்திதான்...! ம்ம்... சொல்... உன் பெயரென்ன?

மதுரா....

தெளிவாய் நிதானமாய் அவள் உச்சரித்து முடித்ததும் சத்யனும் திரும்ப, ம...து...ரா... என உச்சரித்துப் பார்த்தான்.

மதுரா.... மது.. அழகான பெயர்... கிக்கான போதை. எனக்கு ரொம்பவும் பிடித்தமான விஷயம்....

அவன் சொன்னதின்அர்த்தம் மதுராவிற்கு உரைத்தது.

ஓ...அந்த பழக்கம் வேறு உண்டா? ....என்றாள்.

உண்டு... சிகரெட், மது எனக்கு தினமும் வேண்டும். அது இல்லாமல் என்னால் ஒருநாள் கூட இருக்கமுடியாது. அவன் பெரும் ஜம்பமடித்து சொல்ல மதுராவுக்கு வந்ததே கோபம்.

எல்லாம் பணத்திமிர்...! என்றாள் ஆவேசமாக.

ஆமாம் பணத்திமிர்தான். கொழுப்புதான்! இல்லாவிட்டால் அன்பு இல்லத்திலிருந்து உன்னை அடிமையாய் இப்படி வாங்கிச் செல்வேனா...?

நான் ஒன்றும் உங்கள்அடிமையில்லை..... என்றாள் மதுரா இகழ்ச்சியாக.

சத்யன் பதில் சொல்லாமல் சிரித்தான்.

என்ன சிரிக்கிறீர்கள்?

நீ அடிமைதான், உனக்கு விலங்கு கையில் பூட்டப் போவதில்லை. கழுத்தில் தாலி என்ற பெயரில் பூட்டப் போகிறேன்..!

அப்படி நீங்கள் செய்தால் என் கை ஒன்றும் பூப்பறித்துக்கொண்டிருக்காது....

பின் என்ன செய்யுமாம்?



கொலையே செய்யும்...! மதுரா தன் பிஞ்சு விரல்களை அனைத்தும் பிரித்துக் காட்டினாள்.

கொலையா? இந்த கைகளா? அதுவும் என்னையா? என்றபடி சத்யன் வெடுக்கென அவளதுவிரல்களை பிடித்தான். சர்வ சாதாரணமாய் தன்இடக்கை விரல்களோடு இறுக்கி பிணைத்துக் கொண்டான். திடுமென ஏற்பட்ட அவனது ஸ்பரிசம் மதுராவின் உடல் முழுவதும் அதிர்வாய் பரவியது.

மூளை அவசரமாய் கட்டளையிட்டும்சத்யனின் கைபிணைப்பை விலக்க மனமில்லாமல் ஒரு கணம் மெய் மறந்து விட்டாள் மதுரா.



## 6



மதுராவிற்கு ஒரு கணம் உணர்வே இல்லையென்றுதான் சொல்லவேண்டும்.

உணர்வு வந்தபோது கார் சாலை ஓரமாய் நின்றிருப்பதும் சத்யன் குறுஞ்சிரிப்புடன் அவளையே பார்த்துக் கொண்டிருப்பதும் புரிந்தது. இன்னமும் மதுராவின் விரல்கள் சத்யனின் பிணைப்பிலிருந்து விடுபடவில்லை. சத்யன் விடுவிக்கவும்இல்லை.

என்ன இது... காதலன் போல் கை கோர்த்துக் கொண்டு...? முழு நினைவு வந்த மதுரா கையை வெடுக்கென பிடுங்கிக் கொண்டாள். தன் நிலை மறந்து விட்ட அவமானமும் கோபமுமாய் வெகுண்டு அவனைப் பார்த்தாள்.

ஏன் காரை நிறுத்திவிட்டீர்கள்?

சத்யன் சிரித்தான்.

நான் தொட்டதும் உனக்கு ஷாக் அடித்தது. நீ ஒரு மாதிரியாய் ஆகிவிட்டாய். அதான் நிறுத்திவிட்டேன்..

அப்படியெல்லாம் ஒன்றுமில்லை...

அவசரமாய் சொன்னாலும் மதுராவை அவன் கண்டுபிடித்து விட்டான் என்ற அவமான உணர்வு பிடுங்கித் தின்றது. எதனால் அப்படி நிகழ்ந்தது? முதல் முறையாக அவளது கையில் ஒரு ஆணின் ஸ்பரிசம் பட்டதாலா? இல்லை சத்யனைப் பற்றி அவளையறியாமல் அவளுள் ஏற்பட்ட உணர்வுகளாலா?

அப்படியெல்லாம் ஒன்றுமில்லை... என்று தனக்குத்தானே அவசரமாய் சொல்லிக்கொண்டவள், முதலில் காரை எடுங்கள்.... என்றாள் கோபமாக.

எடுக்க மாட்டேன்....

சத்யன் அடம்பிடித்தது மதுராவை எரிச்சல்படுத்தியது.

இப்போது எடுக்கப் புரிந்து கொள். காரை உனக்காக நிறுத்தவில்லை.... என்றான் சத்யன் புதிரை விடுவிப்பது போல்.

பின் எதற்காக?

சத்யன் அமைதியாய் காரின் சிதோஷ்ண மீட்டரைக் காட்டினான். அதன் முட்களைப் பார். நடுப்பகுதியைத் தாண்டிவிட்டது. அப்படியென்றால் காரின் எஞ்சின் சூடாகி விட்டது என்று அர்த்தம்....

அப்படியானால் காரை எடுக்க முடியாதா?

எடுமுக்க முடியும் சிறிது நேரம் எஞ்சினுக்குஓய்வு கொடுக்க வேண்டும். ஓய்வு கொடுத்தால் உஷ்ணம் குறைந்து எஞ்சின் சரியாகிவிடும்... காரை எடுத்து விடலாம்...

சொல்லியபடி சத்யன் கார் கதவை திறந்து வெளியே இறங்கினான். மதுராவிற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இறங்கவா... வேண்டாமா? என்று ஒரு கணம் யோசித்தாள்.

பின்... என்ன தயக்கம்? என்பது போல் விருட்டென அவளும் இறங்கினாள்.

சாலையின் இருபுறமும் பெரிய பெரிய மரங்கள் இடைவெளியின்றி சூழ்ந்திருக்க,அடர்ந்த காட்டுப்பகுதிக்குள்இருப்பது போன்ற உணர்வையே ஏற்படுத்தியது. வினோதமான பறவைகளின் ஒலிகளும், வண்டுகளின் ரீங்காரமும் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது.

அதையெல்லாம் ரசித்துப் பார்த்தபடி சத்யனை நோக்கி திரும்பிய மதுரா துணுக்குற்றாள். அவள் இயற்கையை ரசித்தது போல் சத்யன் அவளை மேலிருந்து கீழ்வரை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மதுராவிற்கு சினம்எகிறிற்று. இங்கு என்ன பார்வை? என்பது போல் முறைத்தாள்.

அவளை ரசித்துப் பார்த்த சத்யன் சிரித்தான். நிஜமாகவே நீ அழகிதான்...! பேரழகி! தேன் தடவிய குரலில் முணுமுணுத்தான்.

மதுராவிற்கு ஜிவ்வென பறப்பது போல் இருந்தது. அவன் சொன்ன பேரழகி வார்த்தை உடம்பில் இனிமையாய் புகுந்து அவளை ஒரு ஆட்டு ஆட்டியது. ஆனாலும் மற்றொரு மனம் சிலிர்த்துக் கொண்டது.



இவன் என்ன ரசிப்பது? இவன் என்ன சொல்வது? என்பது போல் மேலும்அவள் முறைக்கவும் சத்யன் பார்வையை திருப்பியவன் எதிரே சற்றுத்தள்ளி மரங்களுக்கிடையே தெரிந்த புராதானக் கோவிலைக் காட்டினான்.

அதோ தெரிகிறது பார், புராதானக் கோவில் ஒன்று. பல நூறு ஆண்டுகளுக்கு முந்தையது. பல அற்புதமான சிற்பங்கள் அதில் இருக்கின்றன. வா பார்த்து வரலாம்...

சொல்லிவிட்டு சத்யன் நடந்தான்.

மதுராவிற்கு ஒன்றும் தோன்றவில்லை. அப்படி என்ன இருக்கப் போகிறது... என்றுதான் பின் தொடர்ந்தாள்.

இருவரும் ஒற்றையடிப் பாதை வழியாக நடந்து கோவிலை அடைந்தபோது சத்யன் சொன்னது எவ்வளவு உண்மை என்பது புரிந்து கொண்டாள். கோவில் முழுக்க நுண்ணிய வேலைபாடுகளுடன் பலவித அழகான சிற்பங்கள். தூண்களில் விதவிதமான சிலை வடிவங்கள்.

ஒருகணம் அவைகளின் கலைத்தன்மையை மெய்மறந்து பார்த்த மதுரா, எவ்வளவு அழகாக இருக்கிறது? இங்கு அடிக்கடி வந்திருக்கிறீர்களா? என்றாள்.

சத்யன் அவளுக்கு முன்பாக நடந்து பெரிய பாறை ஒன்றில் செதுக்கியிருந்த பழைய தமிழ் எழுத்துக்களை பார்த்துக்கொண்டிருந்தவன், வந்திருக்கிறேன், எனக்கு சிற்பக்கலையில் நாட்டம் உண்டு. மேலும் சங்ககாலத் தமிழ் பற்றி ஆராய்ச்சி ஒன்றும் செய்து கொண்டிருக்கிறேன்... என்றான் அவளை அதிர வைத்தவாறு.

மதுரா திகைத்துத்தான் போனாள்.

சங்கத் தமிழ் ஆராய்ச்சியா? என்ன சொல்கிறான்? பேசுவது சத்யன்தானா? என்பது போல் வியப்புடன் அவனைப் பார்க்க... பக்கத்தில் வரும்படி சைகை செய்தான் சத்யன்.

பார்.. அந்தக் கால தமிழ் கல்வெட்டுக்கள்.... இதில் என்ன எழுதியிருக்கிறது தெரியுமா?

என்ன எழுதியிருக்கிறது?

பொறிமயில் ஆலின வெபாங்கர் எழிலி, சிறுதுவலை சிந்தின... என்ற சங்கப்பாடலை இதில் எழுதியிருக்கிறார்கள்....

அப்படியானால்?

மதுராவின் அழகிய நெற்றி புரியாமல் சுருங்குவதை கவனித்த சத்யன், இரு அர்த்தம் சொல்கிறேன். மயில்கள் ஆடின. அடர்ந்த சோலையில்

மேகங்க்ள சிறு நீர்த்துளிகளை சிந்தின. முல்லைப் பூக்கள் அரும்பின. தலைவர் வரும் கார்காலம் இது என தலைவி புரிந்து கொள்கிறாள்.....

.....

மதுரா,இந்த சங்கப்பாடல்களில் தலைவன் தலைவி காதலைப் பற்றி அவர்கள் கொள்ளும் ஊடலைப் பற்றி எவ்வளவு அழகாகச் சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா? அது என்னை ரொம்பவும் ஈர்த்து விட்டது. அதனால் அது பற்றி உடன் புத்தகங்களை வாங்கி ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்துவிட்டேன்....

நல்ல ஆராய்ச்சிதான்...

மதுரா இகழ்ச்சியாய் சொல்ல... பதிலுக்கு சத்யன் அடக்க முடியாத சிரிப்பு சிரித்தான்.

என்ன ஒரு சிரிப்பு! பார்த்து... முகம் வெடித்துவிடப்போகிறது?

மதுரா மறுபடியும் கிண்டல் தொனியில் சொல்ல சத்யன் அதை பொருட்படுத்தாது நேருக்குநேராய்அவளைப் பார்த்தான்.

மதுரா, என்னுடைய தலைவன் தலைவி காதல் பற்றிய ஆராய்ச்சி உன் விஷயத்தில் எனக்கு ரொம்பவும் உபயோகமாக இருக்கிறது....

என் விஷயத்திலா?

மதுரா துணுக்குற்றுப் பார்க்க.. சத்யன் மெல்ல புதிர் விடுவித்தான்.

உன் உள்மனதிடில் என்னைப் பற்றி என்ன ஓடுகிறதென் தெரியும்....

என்ன ஓடுகிறது?

வேறென்ன? என்னுடைய நினைவு என்னுடைய முகம். என்னை பற்றிய கனவு....!

மண்ணாங்கட்டி....!

சொல்லியபடி பற்களைக் கடித்தாள்மதுரா. என்ன ஒரு கர்வம்? என்ன ஒரு அகம்பாவம்? இவனை கண்டுதலையை விரித்துப் போடாத குறையாய் நான் நிற்கிறேனாக்கும்!

மண்ணாங்கட்டிதான்! அழகான மண்ணாங்கட்டி! சத்யன் அவளது பாணியிலே விளக்கம்கொடுத்தான்.

ஊர் உலகத்தில் பார்க்காத ஆண் நீங்கள் அதான் சொக்கி விட்டேன் சொக்கி!

அதற்கு மேல் மதுரா அங்கு நிற்கவில்லை, விடுவிடுவென காரை நோக்கி நடந்தாள்.

கண்டுபிடித்து விட்டேன் என்றதும் வேகத்தைப் பார்!

சிரிப்பு மாறாமல் முணுமுணுத்தபடி சத்யன் பின் தொடர்ந்தான்.



மதுரா பேசாமல் காரிலேறி உட்கார்ந்து கொண்டாள்.

சத்யனும் ஒன்றும் பேசாமல் காரில் ஏறி ஸ்டார்ட் செய்தான்.

கொஞ்சதூரம் சென்றதும் சத்யன் ஏதோ நினைத்தவனாய் அவள் பக்கம் திரும்பினான்.

உன்னைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே?

என்னைப் பற்றியா? மதுரா துணுக்குற்றுப் பார்த்தவள் நெற்றியைச் சுருக்கினாள்.

ஆம் உன் பெற்றோர் பற்றி... உன் பூர்வீகம் பற்றி....? சத்யனின் குரல் தயக்கமாய் ஒலிக்க கடகடவென சிரித்தாள் மதுரா.

என்னைப் பற்றி சொல்ல ஒன்றும்இல்லை.... நான் ஓர் அனாதை. பெற்றோர் யார் என்று தெரியாமலே அன்பு இல்லத்தில் வளர்ந்துவிட்ட அனாதைஅவ்வளவுதான்!

ஐ....ஆம்...ஸாரி...

முதல் முறையாய் அவனது முகத்தில் கனிவும் இரக்கமும் ஓடுவதை மதுரா கவனித்தாள். ஆனால் அவளுக்காக யாரும் இரக்கம் கொள்வது அவளுக்குப் பிடிக்காத விஷயமாயிற்றே! சட்டென அவனைப் பார்த்தவள், இதிடில் வருத்தம் சொல்வதற்கு ஒன்றுமில்லை. பெற்றவர்களை மதிக்காத இந்த காலத்து பிள்ளைகளைவிட நாங்கள் அனாதைகள் எவ்வளவோ மேல். மேலும் எங்கள் மேடம் ரங்கமணி அம்மாள் காட்டிய அன்பிற்கு எதுவும் ஈடாகாது...அதனால் சந்தோஷமாகத்தான் வளர்ந்தோம்....

அவள் பேச்சிற்கு ஆமோதிப்பவனாய் தலையாட்டினான் சத்யன்.

மதுராவிற்கும்திடும்மென ஞாபகம் வந்தது.

அமாம் உங்களைப் பற்றி... உங்கள்குடும்பம் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே?என்றாள்.

நானா...? நான் சரியான மரக்கட்டை! என்றான் சத்யன் கொஞ்சமும் சிரிப்பு மாறாமல்.



## 7



சத்யன் மரக்கட்டை என்றதும் மதுரா தன்னையறியாமல் சிரிக்கத்தான் செய்தாள். அதற்குள் கார் சத்யனின் ஊரை அடைந்திருந்தது.

அழகுநகர் ஊர் சிறியதாய்இருந்தாலும் நகரம் போல் அதிக வளர்ச்சியடைந்திருந்தது. ஊரின் நடுநாயமாக சத்யனின் அலுவலகம், தொழிற்சாலையும் சுற்றிலும் குவார்ட்டர்ஸ் வீடுகள், பச்சை வயல்கள், பெரிய பெரிய ஆலமரங்கள், நீண்ட அழகான புல்வெளிகள் ஓடியாடிப் பறக்கும் வெண்ணிறப்பறவைகள், பின்னணியில் நீலமான வானம்... என பார்க்கும் காட்சிகள் எல்லாம் ரம்மியமாய் மதுராவுக்கு ரொம்பவும் பிடித்துப்போனது.

சத்யன் காரை நேராக தன் பங்களாவை நோக்கியே ஓட்டினான். அவன் முகத்தில் அசாத்திய சுறுசுறுப்பு வந்து ஒட்டிக்கொண்டது.

மதுரா, இன்று முழுவதும் என் வீட்டில், என் குடும்பத்தாரோடு தான் நீ தங்குகிறாய். நாளை முதல்தான் உனக்கு குவார்ட்டர்ஸ் வாசம்....

அதுரா அவன் சொல்வதைக் கேட்டு சங்கடமாய் நெளிந்தவள்,எதற்கு வீண் சிரமம்... என முணுமணுத்தாள்.

ஷஇது பெரியவரின் உத்தரவு... என சொல்லி அவளது வாயை அடைத்தான் சத்யன்.

சத்யனின் பங்களா தொழிற்சாலைக்கு வலது கோடியில் பல ஏக்கர் பரப்பை ஆக்கிரமித்துக் கொண்டு இருந்தது. நடுவில் பங்களா சுற்றிலும் அடர்ந்த சோலை போல் மரங்கள். விதவிதமான மலர்ச்செடிகள், புல்வெளித் தோட்டங்கள். சத்யனின் தந்தை நல்ல ரசனை உள்ளவர் போலும்... என மதுரா வியக்க... அவளை மேலும் மேலும் வியக்க வைத்தவாறு... பங்களா வாசலிலே அவள் வருகைக்காக காத்திருந்தார் குருநாதர்.

பெரியவர் என சொல்லப்படும் சத்யனின் தந்தை குருநாதரை அவள் பலமுறை அன்பு இல்லத்தில் பார்த்திருக்கிறாள். பேசியிருக்கிறாள். எப்போதும் அவர் முகத்தில் ஓடும் கனிவும் அன்பும்அவளை வியக்க வைத்திருக்கிறது.

பெரிய கோடீஸ்வரராய் இருந்தாலும் கொஞ்சமும் பண கர்வம் இல்லாமல் எல்லோரையும் மதித்து பேசும்அவரது பண்பு, அன்பு இல்லத்து மேல் அவர் காட்டும் அதீத அக்கறை எல்லாம்மதுராவிற்கு குருநாதர் மேல் உள்ள மரியாதையை ரொம்பவும்கூட்டியிருந்தது.

தன்னை வீட்டிற்கு வரவேற்க அவர் வாசலிலே காத்திருப்பது கண்டு ஒரு கணம் மெய்சிலிர்த்துதான் போனாள் மதுரா. கைகூப்பி வணக்கம் சொல்லியபடி இறங்கிய மதுராவை முகம் மலர வரவேற்றார் குருநாதர்.

வாம்மா... சத்யன் எல்லாவற்றையும் சொன்னான். நிஜமாகவே நீ லக்ஷ்மிகரமாய் மகாலக்ஷ்மி மாதிரிதான் இருக்கிறாய்... வா...... வா...!



வாய் நிறையகுருநாதர் சொல்ல... மதுரா ஒருகணம் துணுக்குற்று சத்யனைப் பார்த்தாள். என்ன தான் லக்ஷ்மிகரமாய் இருப்பதாய் சத்யன் சொன்னானா? என்பது போல் திரும்பி அவனைப் பார்த்தாள்.

சத்யனோ தந்தை முன் பயப்படும் பிள்ளையாய் பவ்யமாக நடமாடிக் கொண்டிருந்தான். என்ன ஒரு நடிப்பு!வியந்தபடி மதுரா நுழைந்தாள்.

சத்யனின் பங்களா அவள் நினைத்திருந்ததை விட பெரிதாகத்தான் இருந்தது. பெரிய பெரிய அறைகள், விசாலமான ஜன்னல்கள், விதவிதமான அலங்காரப் பொருட்கள், விளக்குகள், என நிறைந்திருக்க... எல்லாவற்றையும் பிரமிப்புடன் பார்த்தபடி மதுரா நடந்தாள்.

குருநாதர் அவளை உள்ளே அழைத்துச் சென்று சோபாவில் உட்காரச் சொன்னார்.

பணியாளிடம் சைகை செய்ய... அவன் தயாராய் உள்ளிருந்து பழச்சாறு எடுத்து வந்து மதுராவிடம் நீட்டினான். தயக்கமாய் குருநாதரை பார்த்தாள் மதுரா.

களைப்பு நீங்க... குடிக்கக் கொள்ளம்மா....

மதுரா பழச்சாறை வாங்கிக் கொண்டாள். சத்யனை அதற்குள் காணவில்லை. விறுவிறுவென உள்ரூமிற்கு சென்று விட்டான் போலும்!

சுற்றிலும் தன் பார்வையை ஓட்டிய மதுராவின் மனதில் திடுமென சந்தேகம் துளிர்த்தது.சத்யனும் குருநாதரையும் தவிர அந்த வீட்டில் வேறு யாரும் இருப்பது போல் தெரியவில்லையே!

மதுராவின் துணுக்கு பார்வையை வைத்தே அவளது நினைப்பை குருநாதர் கண்டுபிடித்துவிட்டார். இருக்கிறார்கள். எனது மனைவி மங்களமும் சுட்டிப்பெண் வசுதாவும் கோயில் பூஜைக்கு சென்றிருக்கிறார்கள். இப்போது வந்து விடுவார்கள்! என்றார் அவள் புதிரை நீக்குவது போல்.

கொஞ்ச நேரத்தில் அவர் சொன்னது போலவே மனைவியும் மகளும் வந்துவிட மதுராவை அவர்களுக்கு குருநாதர் அறிமுகப்படுத்தி வைத்தார். அவர்களுடைய அன்பிலும் உபசரிப்பிலும் மனமகிழ்ந்து ஒரு கணம் திணறித்தான் போனாள் மதுரா.



# 8



மறுநாள் தனக்காக ஒதுக்கப்பட்ட ஹாஸ்டல் ரூமிலிருந்து சீக்கிரமாக விழித்து சீக்கிரமாகவே கிளம்பவிவிட்டாள் மதுரா குருநாதர் குரூப்ஸ் இண்டஸ்ட்ரியல் அண்ட் எக்ஸ்போர்ட் யூனிட் என்ற எழுத்துக்கள் மின்ன இருந்த பிரம்மாண்ட கட்டிடத்திற்குள் நுழைந்தாள்.

ரிசப்ஷனில் அவள் பெயரைச் சொன்னதும் ஆவலாய் வந்து இன்முகமாய் வரவேற்றாள் அந்த நடுத்தரப்பெண். நீ...நீ... மதுராதானே? முதலாளி எல்லாவற்றையும் நேற்றே சொல்லி விட்டார். வா... உனக்கு வேலை தயாராயிருக்கிறது.... என்றவளை மதுரா வியப்பாய் பார்த்தாள்.

என்ன பார்க்கிறாய்? நான் கவிதா. லேபர் அசோசியேஷன் செகரட்டரி... என்று தன்னையும்அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

அதற்குப் பின் கவிதா மதுராவிற்கு கம்பெனி பற்றிய எல்லா விவரங்க்ளையும் விலக்கிவாள்.

நம் கம்பெனி மூன்று யூனிட்களாக, பிரிவுகளாக இயங்குகிறது. முதல் பிரிவு கைவினைப் பொருட்க்ள உற்பத்திப் பிரிவு. பல குடிசைத்தொழில் கலைஞர்களின் நெடுநேர உழைப்பில் உருவான கலைநயமிக்க வேலைப்பாடுகளை வாங்கி சேகரித்து அப்படியே வெளிநாடுகளுக்கு நாம் ஏற்றுமதி செய்கிறோம். மற்றொரு பிரிவு நாமே வேலையாட்களை, பணி நிபுணர்களைக் கொண்டு விதவிதமான ரெடிமேடு துணிகளை உற்பத்தி செய்யும் பிரிவு இப்பிரிவில் கவுன்கள், சிறுவர் சிறுமியருக்கான சட்டைகள் என பலதரப்பட்ட ரெடிமேட் பொருட்களை உருவாக்குகிறோம். மூன்றாவது முழுக்க முழுக்க ஏற்றுமதிப் பிரிவு வியாபாரிகள்... ஆக இப்படி மூன்று யூனிட்களாக செயல்படுகிறது நம் கம்பெனி....

கவிதா மூச்சு விடாமல் சொல்லி முடித்தவள் மதுரா வியப்புடன் விழிப்பதை அலுவலகத்தை கண்டு மிரண்டு விட்டாள் என எண்ணிக் கொண்டவள், எதையும் பார்த்து மிரண்டு விடாதே.இதிலெல்லாம் உனக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை. உனது பிரிவு அக்கவுண்டிங் செக்ஷன்தான். அங்குதான் முதலாளி உனக்கு வேலை போட்டுக் கொடுத்திடிருக்கிறார். வா....! என்றபடி கவிதா அழைத்துச் செல்ல முத்துப்பல் சிரிப்புடன் மதுரா அவளைப் பின் தொடர்ந்தாள்.



முன்னாள் நடந்த கவிதா நடக்கும் மதுராவின் இயற்கையான அழகை பிரமிப்பாய் பார்த்தாள். இருபது வயதிலும், பதினாறு வயது கவர்ச்சியாய் அந்த முகம், நளினமான உடலமைப்பு, செக்கச் செவேல் என்று சொல்லும்படி நிறம், ஒருமுறை பார்த்தாலே அகல விடாதபடி சிறை போட்டிடும் அந்த படபடக்கும் மான் விழிகள், நொடிக்கொருதரம்தவழ்ந்தோடும் அந்த முத்துப்பல் வரிசையின் அழகுப் புன்னகை, அந்த மதுராவின் அடக்கமான எளிமையான இயற்கை அழகைக் கண்டு வியந்தவள் நிச்சயம்இவள் பேரழகிதான்.. என முணுமுணுத்தும் கொண்டாள்.

பின் கவிதா அக்கவுண்டிங் செக்ஷனில் மதுராவுக்கு வேலையை சொல்லி அவளை இருக்கையில் உட்கார்த்தி வைத்தாள். மதுரா வேலையைக் கண்டு மலைக்கவில்லை. சுளுவாய்த்தான் இருந்தது.

வழக்கமான முன்பு படிப்பு முடிந்ததும் சில கம்பெனிகளில் தற்காலிகமாய் அவள் செய்த கணக்கு குமாஸ்தா வேலைதான். ஒவ்வொரு நாள் வரவு செலவு கணக்குகளை குறிப்பேட்டில் பதிவு செய்து,இறுதியில்அன்றைய கணக்குகளை டேலி ஆகும்படி பார்த்துக் கொள்ள வேண்டியது எனஅவளுக்கு அத்துப்படியாகிப்போன சமாச்சாரங்கள்தான்.

காதுமடல்கள்அதிர, தான் சொல்வதற்கு படபடவென அழகாக தலையாட்டியவளை கவிதா புதிராய்ப் பார்த்தாள். என்ன இதெல்லாம் உனக்குத் தெரிந்து போன விஷயங்கள்தானா? என்று கவிதா வியக்க, நான் ஒரு ஆடிட்டரிடம் கொஞ்ச நாள் உதவியாளாராய் பணி புரிந்திருக்கிறேன்...என்று கூறி அவளை மேலும் மலைக்க வைத்தாள் மதுரா.

அன்று ஒருவாறு வேலை கற்றுக் கொள்வதில், அலுவலகத்தைப் பிரமிப்பாய் பார்ப்பதிலே மதுராவுக்கு பொழுது கழிந்துவிட்டது வேலையும் அவளுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது.

அவளது அக்கவுண்டிங் செக்ஷனில் கவிதாவும்இரண்டு கெண்களும்தான். அவர்களைவிட கவிதாதான். ஒருகணம் கவிதாவைப் பார்க்கையில் அவள் நன்றியுடன் நினைக்கும் சிறுவயதில் பாடம் சொல்லிக் கொடுத்த வேலம்மாள் டீச்சர் ஞாபகம்தான் மதுராவிற்கு வந்தது. அதேசாயல்.. சுறுசுறுப்புடன் அவளது நடை உடை பாவனை இருந்தது. ஒரு கணம் பழைய பால்ய நினைவுகளில் மூழ்கிப் போனவள் சட்டென சுதாரித்து உணர்வுக்கு வந்தாள். வேலைகளில் கவனம் செலுத்த ஆரம்பித்தாள்.

இரண்டு நாள் மதுராவுக்கு எவ்வித பிரச்சினையுமில்லாமல் கழிந்தது. அவளை விரட்டி குதிரையேறத் துடிக்கும் சத்யன் கூட வரவில்லை.

எங்கே இந்த செக்ஷனிற்கு சத்யன் வரவே மாட்டாளோ? என்ற தவிப்பு கூட அவளையறியாமல் எழுந்து விட்டது.

பொறுத்துப் பார்த்தவள் அடக்க முடியாமல் கவிதாவிடம் கேட்டேவிட்டாள்.

என்ன... நீ... எம்.டி. சத்யன் சாரைப் பற்றி கேட்கிறாயா? அவர் விஷயமே தனி! என்றாள்.

தனி என்றால்...? மதுரா இழுத்தபடி பார்த்தாள்.

ஆள்... பயங்கர சுறுசுறுப்பு, ஒரு இடத்தில் நிற்க மாட்டார். கடும் உழைப்பாளி.... என்றவள் விடாது. அவரது முயற்சியால் மட்டும் கம்பெனிக்கு சென்ற வருடம் கூடுதலாய் ஐந்து கோடி லாபம் என்றால் பார்த்துக் கொள்ளேன்...! என்று கூறி மதுராவை வியக்கவும் வைத்தாள்.

மதுராவிற்கு ஒரகணம்ஆச்சரியமாகத்தான்இருந்தது.அவளை எள்ளி நகையாடி சீண்டாத குறையாய் பேசும்சத்யன் மறுபுறத்தில் கடும் உழைப்பாளியாய் பெரும் சாம்ராஜ்யத்தை உருவாக்குபவனா? என்றுமலைக்கவும் செய்தாள்.

அதோ... அந்த கண்ணாடி பளபளப்பில் இருக்கும் ஏ.கூ.அறைதான் சத்யன் சாருடையது.அவர் குஷன் சீட்டில் கம்பீரமாய் உட்கார்ந்திருக்கும்அழகே அழகு... என்றெல்லாம் கவிதா சொல்லி மதுராவின் பரபரப்பை நிஜமாகவே அதிகமாக்கிவிட்டாள். மதுராவையும் சத்யனையும் பற்றிய நினைப்பிலே அன்று முழுவதும் ஆழ்ந்திருந்தாள்.

மதுரா அதே பரபரப்புடன் மீனுக்காக காத்திருக்கும்கொக்கு போல இருக்க கொங்கணராய் அவளைத் தேடி வந்தான் சத்யன். வந்தவன் சீட்டில் உட்கார்ந்ததும் முதல் வேலையாய் மதுராவை அழைத்து. என்ன என்னைக் காணாமல் ரொம்பவும் தவித்து விட்டாயாமே! என்றான் கிண்டல் குரலில்.

அப்படியெல்லாம் ஒன்றுமில்லை... என்றாள் மதுரா சிலிர்த்துக் கொண்டவளாக.

எனக்கு தகவல் வந்தது.....

விடாப்பிடியாய் சத்யன் சொல்லவும் மதுரா குழம்பினாள். தான் விசாரித்ததை கவிதா ஒருபோதும் இவனிடம் சொல்லியிருக்கமாட்டாள். பின் யார் சொன்னது?

சொன்னது வேறு யாருமல்ல.... உன் முகம்தான்! என்று அதற்கு பதில் சொன்னான் சத்யன்.

என்ன... என் முகமா?

வியந்த மதுராவிடம், ஆமாம்..... என்னைக் கண்டதும்தானே கூம்பிப்போன உன் முகம் சூரியனைக் கண்டது போல் பிரகாசிக்க



ஆரம்பித்தது. அதை வைத்துத்தான் எல்லாவற்றையும் கண்டுபிடித்தேன்...! என்றான் பெரிய புதிர் விடுவிப்பவன் போல்.

மதுரா உள்ளுக்குள் கண்டுபிடித்துவிட்டானே... என்று தவித்தாலும்அதை வெளிக்காட்டிக்கொள்ள விரும்பாதவளாய் அங்கிருந்து அகல முயன்றாள். சார்..... வேலை இருக்கிறது... கிளம்புகிறேன்...! என்றபடி அங்கிருந்து அகன்றாள்.



# 9



அடுத்து வந்த நாட்கள் வேலையிலவ் சுறுசுறுப்பாகி மதுராவுக்கு அது ரொம்பவும் பிடித்துப் போயிற்று. ரங்கமணி அம்மாளும் போன் போட்டு அவளுடன் பேசினாள்.

என்ன மதுரா வேலை பிடித்திருக்கிறதா?சூழ்நிலை எப்படி இருக்கிறது? என்றெல்லாம் கவலையோடு விசாரித்த அம்மாளுக்கு உற்சாகமாய் தலையாட்டியபடி பதில் சொன்னாள் மதுரா.

அதற்கு அடுத்த நாள் பெரியவர் குருநாதரே மதுராவைத் தேடி வந்தார்.

என்ன வேலை பிடித்திருக்கிறதா? எதுவானாலும் என்னிடம் சொல் அம்மா? என்று கனிவாய் விசாரித்தார். கைகூப்பிய மதுராவும் அவருக்கு தன் நன்றியைத் தெரிவித்தாள்.

பின் குருநாதர் திரும்பி சத்யனை அவள் முன்னிலையிலே அழைத்து. சத்யன், மதுராவுக்கு கம்பெனி பற்றி சகல விஷயங்களையும் கற்றுக் கொடுக்க வேண்டியது உன் பொறுப்பு.... என கட்டளையிட்டவும்செய்தார்.

மதுராவைப் பார்த்து மர்மப் புன்னகையை புரிந்து கொண்டே கண்டிப்பாக.... என்றான் சத்யன்.

தந்தை முன் அவன் காட்டும் பவ்யமரியாதை அவளை வியப்படைய வைத்தது.

குருநாதர் சென்று விட்டார்.

தன் இருக்கைக்குத் திரும்பிய மதுரா வேலைகளில் கவனம் செலுத்தினாள். இடையிடையே அவளையறியாமல் அவளது பார்வை சத்யனின் ரூமை நோக்கிச் சென்றது.

கண்ணாடிக் கதவுகளின் உள்ளே சத்யன் விறுவிறுவென பைலை புரட்டுவதும்... நொடிக்கொருதரம் சிணுங்கும்போனில் பேசுவதுமாய் இருக்கும் அவனது பணியான வேகத்தைக் கண்டாள்.

சந்தேகமில்லை. சத்யன் கடின உழைப்பாளிதான். தன்னை சீண்டி விளையாடி அடிக்கடி மனதை நோகடித்தாலும் அவனது மறுபுறம் குணத்தின் மறுபக்கம் வித்தியாசமாய்த்தான் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள்.

மதுரா வேளைகளில் ஆழ்ந்து கவனிக்காத சமயம் சத்யன் அவளுக்குத் தெரியாமல் கவனித்தான். சிரத்தையாய் அவள் வேலை பார்க்கும் அழகை ரசித்து விட்டுப் போனான்.

மதுரா அன்று வேலை முடிந்ததும் அவளாக முந்திக்கொண்டு சத்யனிடம், நான் பஸ்ஸில் போய்க் கொள்வேன். நீங்கள் போகலாம்.... என்று சொல்லிவிட்டாள்.

சத்யன் காரில் ஏறப்போனவன் நின்று புருவம் உயர்த்தி அவளைப் பார்த்தான்.

அவன் ஏதாவது மறுத்துச் சொல்வான் என்று எதிர்பார்த்தவளுக்கு சப்பென்று போயிற்று.

சத்யன் எதுவும் சொல்லாமல், சரி... உன் இஷ்டம்... என்பது போல் தலையசைத்தவாறு காரில் ஏறிக் கொண்டான்.

அன்று இரவு ஹாஸ்டல் ரூம் மொட்டை மாடியில் நிலா வெளிச்சத்தில் நட்சத்திரங்களை ரசித்துக் கொண்டிருந்தாள் மதுரா.அதை கவனித்து பூனையாய் இருட்டோடு இருட்டாய்அங்கு சத்யன் தோன்றினான்.மேலும் ஓசைப்படாமல் நடந்தவன்அவள் பக்கம் வந்ததும், டகென அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

திடீரெனத் தன் முழு பலம் கொண்டு இறுக அணைத்த சத்யனைக் கண்டு மதுரா திடுக்கிட்டுத்தான் போனாள். சத்யனின் கரங்கள் மலைப்பாம்பாய் அவள் உடலை இறுக்கின. அந்த ஆண்மையின் திடீர் ஸ்பரிசத்தில் ஒருகனம் தன்னிலை மறந்து துவண்டுதான் போனாள்.

விறுக்கென திமிறிய அவளது உடம்பு அணைத்தது சத்யன் என்றதும் உடன்பாட்டுப் போயிற்று. சத்யன் இறுக அணைத்தவன் சும்மா இருக்கவில்லை. மெல்லக் குனிந்து அப்படியே அவளது சிவந்த கன்னங்களில் முத்தமிடவும் ஆரம்பித்தான்.

அந்த முத்த சிலிர்ப்பில் மதுரா சிலிர்த்தவள் கண்கள் சொருக மயக்கத்துடன் அவன் நெஞ்சில் சாய்ந்தும் கொண்டாள்.



அவள்அப்படி தன் கரங்களில் துவண்டு கொண்டிருப்பதை சத்யன் வெகுவாய் ரசித்தான், சட்டென கொஞ்சமும் எதிர்பாரா சமயத்தில் விடுவித்தான், விலகி நின்றான்.

தன்னை அணைத்தவனோடுமதுரா மெய்மறந்து கிடந்தவள் அவன் திடீரென அப்படி விடுவித்து தள்ளி நின்றதும்தான் சுயநினைவுக்கு வந்தாள். எதிரே எதையோ கண்டுபிடித்துவிட்ட திருப்தியில் நின்ற சத்யனைக் கண்டு தவிக்கத்தான் செய்தாள்.

சத்யன் அவளை லேசில் விடுவதாய் இல்லை. குறுஞ்சிரிப்புடன் அவளை நெருங்கி வந்தவன், எல்லாவற்றையும் கண்டுபிடித்து விட்டேன்... என்றான் சிரிப்பு மாறாமல்.

மதுரா வெட்கம் பிடுங்கித் தின்றவளாய் தவித்தவள், எப்படி சத்யன் அணைத்ததும் தான் சுயநினைவு இழந்துபோனோம் என்று அதிர்ச்சியாய் யோசித்தாள்.

அவன் சத்யன்.... எப்படி... என்ன தைரியத்தில் திடுமென அணைத்தான்? அப்படி அவன்அணைத்தானென்றால் முதலிலே சுதாரித்து விடுங்கள் என்று விடுவித்துக் கொண்டிருக்கலாமல்லவா?

அதைவிட்டு விட்டு எப்படி அந்தஅணைப்பில் தன்னை மறந்து அவன் கரங்களில் துவண்டு கொண்டு... எப்படி நடந்தது இது? எவ்வளவு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டிய விஷயம்? புலன்கள் நொடியில் தறிகெட்டு... எல்லாவற்றையும் மறந்து காணாததை கண்டது போல் உடம்பு சத்யனை அணைத்துக் கொண்டதே?

வெட்கிப் போனவளாய் மதுரா முகம் சிவக்க சத்யன் விடாப்பிடியாய், நான் சொன்னது கேட்கவில்லை...? உன்னைக் கண்டுபிடித்துவிட்டேன்.... என்றான் மறுபடியும்.

மதுராவினுள் இனம்புரியா படபடப்பு தோன்றி மறைந்தது.



## 10



மறுநாள் பெரியவர் தன்னை சந்திக்கும்படி அழைத்ததும் மகிழ்ச்சியோடு கிளம்பினாள் மதுரா. பெரியவர் குருநாதர் சத்யனிடம் எல்லா அலுவலக பொறுப்புகளையும் ஒப்படைத்து விட்டு தனக்கென்று ஆசிரம பாணியில் குடில் ஒன்றை அமைத்து இறைபணியில் ஈடுபட்டு வந்தார்.

அந்தப் பெரியவரின் குடிலுக்குள் நுழைந்தவளை இன்முகமாய் வாசலிலே வந்து வரவேற்றார் குருநாதர்

அன்பாய் உட்காரச் சொல்லி உபசரித்தார்.

உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும் அம்மா.... என்ற பீடிகையுடன் விஷயத்தை ஆரம்பித்தார்.

பேச்சை ஆரம்பித்த குருநாதரின் முகத்தில் பயமும் ஒருவிதகலவரமும் உருவானதைக் கண்டு மதுரா திடுக்கிடத்தான செய்தாள்.

அம்மா... இந்த விஷயம் யாருக்கும் தெரியாது. உன்னைத் தவிர வேறு யாரிடமும் நான் சொல்லப் போவதில்லை. நீ தான் இந்த விஷயத்தில் எனக்கு உதவி செய்ய வேண்டும். செய்வாயா அம்மா?

சொல்லியபடி சிறு குழந்தை போல கை கூப்பி கெஞ்சிய பெரியவரைக் கண்டு மதுரா திடுக்கிட்டுத்தான் விட்டாள்.

பதறியவளாய், ஐயா நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கட்டளையிடுங்கள். உடனே செய்து முடிக்கிறேன். நீங்கள் இப்படி என்னிடம் கெஞ்சுவதை என்னால் தாங்க முடியவில்லை...! என்றாள் உணர்ச்சிகள் முழுவதையும் தன் குரலில் அடக்கி.

குருநாதர் பெருமூச்சு விட்டுக்கொண்டு, விஷயம் அப்படிப் பட்ட சிறுமையானதும்மா. அதனால்தான் கெஞ்சுகிறேன்... என்றாள்.

சிறுமையானதா?

ஆமாம்மா....! வாலிப வயதில் நான் ஒரு தவறு செய்து விட்டேன். அது இப்போது விசுவரூபமெடுத்து எனனை வாட்டுகிறது....

என்ன நீங்கள் தவறு செய்தீர்களா? நம்ப முடியாமல் உலக அதிசயமாய்க் கேட்ட மதுராவை புன்னகை மாறாமல் குருநாதர் பார்த்தார்.

உனக்கு இது ஆச்சரியமாகத்தான் இருக்கும்... ஏனெனில் நான் இப்போது போட்டிருக்கும் கௌரவமான வேஷம்அப்படி அது ஒரு பெரிய கதை அதை கள்ளங்கபடமற்ற உன்னிடம் சொல்லவே வெட்கத்தில் வாய் கூசுகிறதம்மா....

குருநாதர் நிறுத்திவிட்டு கண்கலங்க ஒரு நிமிடம் தயங்கியவர், ஆனாலும் வேறும் வழியில்லை உன் உதவியைப் பெற நான் எல்லாவற்றையும் சொல்லித்தான் ஆகவேண்டும்.... என்றபடி 'தன் நீண்ட உரையை ஆரம்பித்தார்

அம்மா, நீ பார்க்கும் குருநாதர் இன்று கௌரவமாய் தான தர்மம் பண்ணிக்கொண்டு அமைதியாக வாழ்பவர். ஆனால் சுமார் முப்பது வருடங்களுக்கு முன் நான் சாதாரண மனிதனாய் எல்லா ஆசாபாசங்களுக்கும் உட்பட்டுத்தான்இருந்தேன்.அப்போதுதான் அது நடந்தது.....



அம்மா நான் சொல்லப்போகிற விஷயம் உனக்கு அதிர்ச்சியாய் இருக்கும். ஆனால் உண்மை அதுதான் எனக்கு சத்யன் மட்டும் மகனில்லை இன்னொரு வாரிசும் எனக்கு இருக்கிறான்.....

என்ன சொல்கிறீர்கள் இன்னொரு வாரிசா? நிஜமாவா அய்யா?

நிஜம்தான். இந்த விஷயம் என்னைத் தவிர சத்யனுக்கோ எனது மனைவி மகாலக்ஷ்மிக்கோ... வேறு யாருக்கும் தெரியாது.... அவ்வளவு ரகசியமாக வைத்திருக்கிறேன்.....

.....................

அவன் பெயர் பாஸ்கர். அவனுக்கும் சத்யனைப் போலவே வயசுதான். ஆனால் சத்யனுக்கு நேர் எதிரான குணம். எனக்கும் சரோஜா என்ற பெண்ணுக்கும் ஏற்பட்ட தொடர்பால் பிறந்தவன்.....

சரோஜாவா?

ஆமாம்மா.... நான் சொன்ன வாலிப பருவத்தில் பணத்திமிரில் எனக்கு ஏற்பட்ட தொடர்பு அது. சரோஜா எனது தேயிலை தோட்டத்தில் சாதாரண கூலியாய் சேர்ந்த பெண்தான்.அவளது அழகும் வசீகரமும் என்னை ஈர்த்துவிட எளிதில் அவளிடம்மயங்கி விட்டேன்.எனது எஸ்டேட் பங்களாவில் அவளை தங்க வைத்து நான் அங்கு செல்லும் சமயமெல்லாம் தாலிகட்டாத மனைவியாய் அவளுடன் குடும்பமே நடத்த ஆரம்பித்துவிட்டேன். அப்படி எங்கள் தொடர்பில் பிறந்தவன்தான் இந்த பாஸ்கர்....

பாஸ்கர் பிறந்ததும் சரோஜா வைரறிய என்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்த ஆரம்பித்தாள். எனக்கோ என் கௌரவமும், அந்தஸ்துமே பெரிதாய் தெரிந்தது. சரோஜாவின் வேண்டுகோளை தட்டிக்கழித்து வந்தேன். ஒருநாள் பொறுத்துப் பொறுத்துப் பார்த்த சரேஜா மனம் உடைந்து பாஸ்கரை சொல்லாமல் கொள்ளாமல் அனாதை இல்லம் ஒன்றில் சேர்த்துவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டாள்....

என்ன தற்கொலையா?

ஆம்.... எஸ்டேட் பெரிய கிணறு ஒன்றில் வாழ்வை முடித்து விட குதித்துவிட்டாள். விஷயம் கேள்விப்பட்டு பதறி அவளைக் காப்பாற்ற ஓடி வந்தேன்.... ஆனால் அதற்குள் எல்லாம் முடிந்துவிட்டது. சரோஜா இந்த உலகத்தை விட்டே போய் விட்டாள். பாஸ்கர் என்ன ஆனான் என்றுதேட ஆரம்பித்தால்... அதையும் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.....

ஆனால் அனாதை இல்லம் ஒன்றில் சேர்த்து விட்டு விட்டதாய் சொன்னீர்களே அய்யா?

ஆமாம். உண்மைதான்! சரோஜா வாழ்க்கையை வெறுத்து பாஸ்கரை அனாதை இல்லம் ஒன்றில் சேர்ந்திருந்தாள். ஆனால் எந்த ஊரில், எந்த அனாதை இல்லத்தில் சேர்த்தாள் என்பது தெரியாதே....? அதனால் ரொம்பவும் தவித்தேன். ஊர் ஊராகப் போய் தேடினேன். ஒவ்வொரு அனாதைஇல்லமாய் ஏறி இறங்கினேன். அப்படித்தான் உங்களது அன்பு இல்லத்திற்கும் பாஸ்கரைத் தேடி வந்தேன்... என் நல்ல நேரம் பாஸ்கர் அங்கே இருந்தான். சரோஜா அன்பு இல்லத்தில் ரங்கமணி அம்மாளிடம் தான் பாஸ்கரை கொடுத்துவிட்டுப்போயிருக்கிறாள் என்பதும் புரிந்தது....

என்ன அன்பு இல்லத்திலா? எனக்கு எப்படித் தெரியாமல் போயிற்று....? என்று வியந்தவளை கனிவாய்ப் பார்த்தார் குருநாதர்.

அப்போது நீ சிறு வயது குழந்தையம்மா. பாஸ்கரும் அப்போது ஐந்து வயதுச் சிறுவன்தான். அவனை அன்பு இல்லத்தில் பார்த்ததும் என் மனது பொறுக்கவில்லை. என் வாரிசை செல்வச்செழிப்புடன் வாழ வேண்டியவன் இப்படி அனாதை போல் வாழ்வதா என்று தவித்துப் போனவனாய் உடனே பாஸ்கரை அன்பு இல்லத்திலிருந்து என்னுடன்அழைத்து வந்துவிட்டேன் ஆனால்.....

சொல்லுங்கள் ஐயா.....

உண்மையை ஒத்துக்கொண்டு பாஸ்கரை என்னுடனே வளர்க்க எனக்கு தைரியம் இல்லை. அதனாலே அவனுக்காக யாருக்கும் தெரியாமல் வீடு ஒன்றை வாடகை பிடித்து வேலையாட்களின் துணையோடு வளர்க்க ஆரம்பித்தேன். ஆனால் அதுவே அவனுக்கு எமனாகவும் போயிற்று....

என்ன அப்படியா.?

ஆமாம்மா... பாஸ்கர் வளர வளர தன் சூழ்நிலையை புரிந்து கொண்டான். தன்னை ஊரறிய ஏற்றுக்கொள்ளாத என்னை வெறுக்க ஆரம்பித்தான். பின்அவனது வெறுமை கூடிய வாழ்க்கையே அவனுக்கு வெறுப்பாயிற்று. தான் தோன்றித்தனமய் தன் இஷ்டத்திற்கு ஒரு வாழ்க்கைப் பாதையை உருவாக்கிக் கொண்டான். எல்லா கெட்டப் பழக்கங்களும் அவனை தொற்றிக்கொண்டன. முக்கியமாய் மதுப்பழக்கம் மதுவிற்கு நிரந்தர குடிகாரனாகவும் ஆகி விட்டான்.....

என்ன பாஸ்கர் குடிகாரா? .

ஆமாம். அதுவும் நிரந்தக் குடிகாரன். அந்தக் குடியால்அவனுக்கு தீராத வியாதியும் வந்துவிட்டது.....

வியாதியா?



ஆமாம் அதிக குடிப்பழக்கத்திற்கு அடிமையானதால் உடம்பு கெட்டு மிகவும்மோசமாகிவிட்டது. உயிருக்கு ஆபத்தானநிலையில் இப்போது அவன் இருக்கிறான்..........

நிஜமாகவா?

நிஜம்தான். வாழ்க்கையை அனுபவிக்க வேண்டிய வயதில் உலகை வெறுத்து தள்ளாடும் குடிகாரனாய் மாறி உயிரை விட நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறான்....

நீங்கள் எப்படியாவதுஅந்த மதுப்பழக்கத்தை நிறுத்த முயற்சி செய்தீர்களா அய்யா?

மதுரா ஆவலாய் கேட்க உதடுகளைப் பிதுக்கி வெறுமையாய் புன்னகைத்தார் குருநாதர்.

முயற்சி செய்தேன். ஆனால் அவன் பாஸ்கர் பிடிவாதக்காரனம்மா. நான் எத்தனையோ வழிகளில் தடுத்துப் பார்த்தேன். தடுக்க தடுக்க மேலும் குடிக்கத்தான் செய்தான் அவன். கடைசிவரை அவனை திருத்த அவனது குடிப்பழக்கத்தை நிறுத்த என்னால் முடியவில்லையம்மா.....

குருநாதர் மௌனமாகிவிட்டார்.

மதுராவும் மௌனமானாள். கூடவே அவளுள் அதிர்ச்சியான திகைப்பும் ஏற்பட்டு விட்டது.

குருநாதருக்கு பின் இப்படியொரு கதைஇருக்குமென அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அதைவிடஇந்த விஷயத்தில் அவர் தன்னிடம் என்ன உதவி கேட்க முடியும் என்பது அவளுக்குஅதிர்ச்சியாய் இருந்தது.

குருநாதர் அவளையே உற்றுப் பார்த்தவர், என்னம்மா, இப்படியொரு இழிபிறவியாய் நான் இருப்பேன் என்று நீ நினைக்கவில்லை இல்லையா? என்றார் வேதனை பொங்க.

மதுரா அதை அவசரமாய் மறுத்தவள், அப்படியெல்லாம் இல்லை. இந்த விஷயத்தில் உங்களுக்க எப்படி உதவ முடியும் என்னால் என்ன செய்ய முடியும்.... என்றே யோசிக்கிறேன் அய்யா... என முடிக்கவும் செய்தாள்.

குருநாதர் பெருமூச்சு விட்டவர், உன்னால் ஒரு உதவி ஆகவேண்டும். எனக்காக செய்வாயா அம்மா? என்றார் பீடிகையுடன்.

சொல்லுங்க ஐயா...

பாஸ்கரை ஊருக்கு ஒதுக்குப்புறமாய் ஒரு வீட்டில்தான் குடிவைத்திருக்கிறேன். அவனுடைய நிலைமையும் ரொம்பவும் மோசமாகிவிட்டது. பாதி சுயநினைவு இழந்தவனாய்த்தான் நடமாடிக்

கொண்டிருக்கிறான். அவனை பரிசோதித்த டாக்டர் கொடுத்த மருந்துகளைக் கூட ஒழுங்காய் அவன் சாப்பிடுவது கிடையாது. எனக்கிருக்கும் வேலைகளில், யாருக்கும் விஷயம் தெரிந்துவிடக் கூடாது என்ற பயத்தில் அவனை அடிக்கடி போய் கவனித்து வர முடியவில்லை. எனக்காக நீ அங்கு தினம் ஒரு முறை சென்று அவன் நிலைமையை கண்காணித்து எனக்குச் சொல்லவேண்டும். இதுதான் நீ செய்ய வேண்டிய உதவி முடியுமா அம்மா?

குருநாதர் ஆவலாய்க் கேட்க, அதற்கு மறுபேச்சின்றி, கண்டிப்பாக செய்கிறேன் ஐயா.... என்றாள் மதுரா உறுதியான குரலில்.

அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம்....

சொல்லுங்கள்....

இந்த பாஸ்கர் விஷயம் சத்யனுக்கோ என் குடும்பத்தாருக்கோ, யாருக்கும் தெரிந்து விடக்கூடாது. எந்த சந்தர்ப்பத்திலும் விஷயம் வெளிவந்து விடாமல் ரகசியமாக இருக்கவேண்டும். உன்னால் உறுதி கூற முடியுமாம்மா?

அதற்கும் பலமாய் தலையாட்டி மதுரா உறுதி கூறினாள். குருநாதர் பெரும் நிம்மதியடைந்தவராய் கண்கலங்க எழுந்து கொண்டார். சரி அம்மா, நான் கிளம்புகிறேன். நாளை உன்னை பாஸ்கர் இருக்குமிடத்திற்கு அழைத்துச் செல்கிறேன். வரட்டுமா? குருநாதர் விடைபெற்று கிளம்பினார்.



# 11



மறுநாள் சொன்னது போலவே மாலை அலுவலகம் முடிந்ததும் ஹாஸ்டல் ரூமிலிருந்து யாருக்கும் தெரியாமல் அவளை பாஸ்கரிடம் அழைத்துச் சென்றார் குருநாதர்.

பாஸ்கரை அவர் தங்க வைத்திருந்த வீடு ஊருக்கு வெளிப்புறமாய் நிறைய மரங்கள் சூழ்ந்த இடத்தில் அமைந்திருந்தது. பாஸ்கரை கவனிப்பதற்கென்றே இரண்டொரு வேலையாட்களையும் ஆயா ஒருத்தியையும் குருநாதர் ஏற்பாடு பண்ணியிருந்தார்.

இவர்களையெல்லாம் அவன் பொருட்படுத்துவதே இல்லை....! என்று சொன்னபடி மதுராவை உள்ளே அழைத்துச் சென்றார் குருநாதர். வீட்டினுள் முகப்பு தாண்டிய பெரிய ஹாலில் நடுநாயகமாய் பாஸ்கர் சேரில் தொய்ந்து போய் கிடந்தான். அவன் முன்னால் காலியாகிப் போன மது



பாட்டில்களும் கோப்பைகளும் இரைந்து கிடக்க... சத்தம் கேட்டு மெல்ல நிமிர்ந்தான் பாஸ்கர்.

மதுரா அவனை உற்றுப் பார்த்தாள்.

பாஸ்கருக்கும் சத்யனைப் போல முப்பதுக்கு உட்பட்ட வயதுதான். நெடு உயரமில்லாமல் குட்டையாய் கனத்த சரீரத்துடன் பாதி முகத்தை தாடி மறைத்திருக்க... தூக்கத்திலிருந்து விழிப்பவன் மெல்ல கண்களை இடுக்கி ஓரிரு நிமிடம் இருவரையும் பார்த்தான். பின்பு முன்பு போல மூடிக் கொண்டான்.

மதுரா புரியாமல் குருநாதரைப் பார்க்க இப்படித்தானம்மா... எப்போதும் கண்திறந்து ஒரு பார்வை பார்ப்பான். அத்தோடு சரி... வாயைத் திறந்து அவன் பேசுவதே கிடையாது....

என்ன பேச மாட்டாரா?

ஆமாம் அவன் பேசி ஒரு வருடமாயிற்று. ஜடம் என்று சொல்வார்களே... அதுபோன்றுதான் அவன் உணர்வில்லாமல் நடந்து கொண்டிருக்கிறான். அவனுக்கு தெரிந்து எல்லாம் மதுப்புட்டி ஒன்றுதான். அதைக் கொடுத்தால் மடமடவென்று குடித்துவிடுவான்... பசிக்கும் நேரத்தில் உணவை எடுத்து வைத்தால் சாப்பிடுவான். மற்றபடி மற்ற எல்லா சமயங்களிலும் இப்படித்தான் சேரில் கண்கள் சொருக உட்கார்ந்திருப்பான். அவன் அப்படி எந்த உலகத்தில் இருக்கிறான் என்பது அவனுக்குத்தான் வெளிச்சம்....

குருநாதர் சொல்வதற்கேற்றாற் போல் பாஸ்கர் அதற்குப் பின் அவர்களைப் பார்க்கவில்லை. கண்களை திறக்கவுமில்லை. அவன் பாட்டுக்கு போதை நிலையில் உலகை மறந்தவனாய் இருந்தான். இப்படியும் ஒருவன் இருப்பானா? என்ற உணர்வு தாக்க மதுரா அவனையே அதிசயமாய்ப் பார்த்தாள்.

குருநாதர் அவளைப் பின் அடுத்த அறையில் இருந்த ஷெல்ஃப் ஒன்றுக்கு கூட்டிச் சென்றார். ஷெல்ப்பில் மருந்துகள், மாத்திரைகள் என நிறைய இரைந்து கிடந்தன. எல்லாம் அவன் வேளா வேளைக்குச் சாப்பிட வேண்டிய மருந்துகள். ஆனால் இதையெல்லாம் ஆயா பார்த்துக் கொள்வாள். நீ செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான் அம்மா...

சொல்லுங்கள் ஐயா...

தினம் உன் வேலை முடிந்ததும் ஒரு முறை இங்கு வந்து பாஸ்கரின் நிலைமையைப் பார்த்துக் கொள்ள வேண்டும். பாஸ்கர் மருந்துகளை ஒழுங்காய் சாப்பிட்டானா... அவன் உடல்நிலையில் எதும் முன்னேற்றம் உண்டா என்பதை கவனித்துச் சொல்ல வேண்டும்.... இது மட்டும். இந்த உதவியைச்செய்தால் மட்டும் போதும். உன்னால் முடியுமாம்மா....?

குருநாதர் கெஞ்சலாய்க் கேட்க அவருக்கு தலையசைத்து மதுரா உறுதி கூறினாள்.

இருவரும் கிளம்பினார்கள்,

கிளம்பும்போது குருநாதர் ஞாபகம் வந்தவராய், அம்மா இந்த விஷயம் யாருக்கும் தெரியக்கூடாது. முக்கியமாய் சத்யனுக்கு தெரியவே கூடாது. ரகசியம் காக்க வேண்டியது உன் பொறுப்பு... என்று சொல்ல அதற்கும் சம்மதித்து தலையசைத்தாள்.

ஆனால் உள்ளுக்குள், சத்யனுக்குத் தெரியாமல்தான் செய்ய வேண்டியிருக்கிறதே? என்ற உணர்வு பயமாய் எழுந்து கவலையாய் அவளை வாட்டியது.



## 12



மறுநாள் முதல் மதுரா அலுவலகம் முடிந்ததும் பாஸ் வீடு வந்து ஒழுங்காக மருந்து மாத்திரைகளை பாஸ்கர் சாப்பிடுகிறானா... வேலையாட்கள் அவனை பார்த்துக் கொள்கிறார்களா என்று கவனித்து விட்டுப் போனாள். அன்று இரவே குருநாதருக்கு போன் செய்தும் சொன்னாள்.

பதிலுக்கு குருநாதர், வாரம் ஒருமுறை போன் செய்து பாஸ்கர் உடல்நிலை பற்றி தெரிவித்தால் போதும்.... என்று அவளை கேட்டுக் கொண்டார். மனிதர் தப்பை செய்துவிட்டு மகனுக்கும், மனைவிக்கும் என்னமாய் பயப்படுகிறார் என மதுரா நினைத்துக் கொண்டாள்.

பாஸ்கரின் உடல்நிலையில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. எப்போதும் மயக்கத்திலிருப்பவன் போல்தான் கண்கள் சொருக உட்கார்ந்திருந்தான். மதுரா-உள்ளே நுழைந்தால் நிமிர்ந்து ஒரு பார்வை பார்ப்பதோடு சரி மறுபடியும் திரும்பி வெறிக்க ஆரம்பித்து விடுவான்.

மதுப்பழக்கத்தை உடனே நிறுத்திவிடக்கூடாது என்ற டாக்டரின் ஆலோசனைப்படி தினம் இரண்டு கோப்பை மதுவை வேலையாட்கள் அவனுக்கு ஊற்றிக் கொடுப்பார்கள். அதை குடிக்கும் போது மட்டும் பாஸ்கரின் முகத்தில் இனம்புரியா பரவசம் ஏற்படும்.

அதை குடித்துவிட்டால்... அவ்வளவுதான்...! அப்படியே மோன நிலைக்கு போய்விடுவான்.



மதுரா அவனை ஆச்சரியமாய்ப் பார்ப்பாள். என்னதான் துன்பம் வந்தாலும் இப்படியா ஒருவன் தன்னை சீரழித்துக் கொள்வது என்ற ஆதங்கத்தோடு அவனையே வெறித்துப் பார்ப்பாள்.

பணியாட்கள் சொல்வதை வைத்து பாஸ்கர் பற்றி மேலும் புரிந்து கொண்டாள். பாஸ்கர் இயல்பிலே கூச்ச சுபாவக்காரனாம். யாரிடமும் அதிகம் பேச மாட்டானாம். பள்ளி படிப்பு கல்லூரி படிப்பெல்லாம் ஹாஸ்டலில் தங்கி முடித்தானாம். படித்து முடித்தவனை இங்கு இந்த வீட்டில் கொண்டு வந்து குருநாதர் தங்கவைத்ததும்தான் வினை ஆரம்பித்து விட்டதாம். எப்படியோ கெட்ட சகாவாசங்களால் பாஸ்கர் குடிப்பழக்கத்திற்கு ஆளாகி முடாக்குடிகாரனாக ஆகிவிட்டானாம்!

மதுரா பாஸ்கரைப் பற்றி முழுவதும் தெரிந்து கொண்டதும் அவனை எப்படியாவது மதுப் பழக்கத்திலிருந்து மீட்டு குணப்படுத்த வேண்டும். பாஸ்கரை தன்னம்பிக்கையுள்ள நல்ல மனிதனாக்கி குருநாதரிடம் ஒப்படைத்து அவரைத் திகைக்க வைக்க வேண்டும் என்று உறுதியையும் தனக்குள் எடுத்துக் கொண்டாள்.

அதற்காக பாஸ்கரை தினம் கவனிக்க வரும் மருத்துவரிடம் பேசிப்பார்த்தாள். பாஸ்கரின் உடல்நிலை, மனநிலை பற்றிய அனைத்து விபரங்களையும் தெரிந்து கொண்டாள்.

தினம் தினம் பாஸ்கரிடம் அன்பொழுக பேச்சுக் கொடுத்துப் பார்த்தாள். தன்னம்பிக்கையூட்டும் பல விஷயங்களை விடாமல் எடுத்துச் சொன்னாள். ஆனால் பாஸ்கரிடம் எந்த பதிலும் இல்லை. அப்படியே இடித்த புளி மாதிரிதான் இருந்தான். எப்போதாவது ஓரிரு முறை நிமிர்ந்து அவளை உற்றுநோக்குவதோடு சரி.

ஆனால் மதுரா மனம் தளராமல் தனது முயற்சியை தொடர்ந்து செய்து கொண்டிருந்தாள்.

பின் டாக்டரின் ஆலோசனைப்படி தினம் கடற்கரைக்கு அழைத்துச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டாள். தினம் வேலை முடிந்து வந்து ஐந்து மணியளவில் பாஸ்கருடன் கிளம்பிவிடுவாள்.

கடற்கரை பாஸ்கரின் வீட்டிலிருந்து பின்புறமாய் அரை கிலோ மீட்டர் தூரத்திலே இருந்தது. பாஸ்கர் நடப்பது நல்லது என்று மருத்துவர் கூறியிருப்பதால்... தள்ளாடும் அவனை கைத்தாங்கலாகவே கடற்கரைக்கு அழைத்துச் செல்வாள்.

வழக்கம் போல் பாஸ்கரும் எந்தவித உணர்வில்லாமல் இயந்திரமாய் அவளுடன் நடந்து வருவான். அவள் கடற்கரை மணலில் உட்கார்த்தி வைத்ததும் அப்படியே உட்கார்ந்து கொள்வான். கொஞ்சமும் இமைக்காது கடலலைகளை வெறிக்க ஆரம்பித்துவிடுவான்.

ஒரு மணி நேரம் இப்படியே கழிந்ததும் மதுரா திரும்ப வீட்டிற்குக் கிளம்ப அழைப்பாள். அதே போல் இயந்திரத் தனத்துடன் அவள் பின்னாலேயே நடந்து வந்து விடுவான் பாஸ்கர். இது கொஞ்ச வாரங்கள் தொடர்ந்தது.

ஒருநாள் யதேச்சையாய் பிஸினஸை மறந்து ரிலாக்ஸாக காற்று வாங்க கடற்கரைக்கு வந்தான் சத்யன். அவன் கழுகுக் கண்களில் பாஸ்கரும் மதுராவும் கடற்கரையில் இருந்த காட்சிப் பட்டுவிட்டது.

முதலில் சத்யனால் அதை நம்ப முடியவில்லை. மதுரா இன்னொரு தடியான இளைஞனுடன் ஜோடி போல் நடந்து கொண்டு... இது நிஜம்தானா?

காரை ஓரமாக நிறுத்தியவன் நன்றாக உற்றுப் பார்த்தான்.

அந்த பெண் மதுராவின் சாயலில்தான் தெரிந்தாள். அன்று ஞாயிற்றுக் கிழமையானதால் கடற்கரையில் கூட்டம் வேறு. சரியாக அவனால் பார்க்க முடியவில்லை.

காரை விட்டு அவசரமாய் இறங்கி தூரத்தில் அவர்களை நெருங்க சத்யன் முயற்சித்தான்.

ஆனால் கூட்டத்தில்... மணற்பரப்பில் விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர் சிறுமியர்களை, அவனால் அவ்வளவு சுலுவாய் கடக்க முடியவில்லை.

ஒருவாறு அவர்களைக் கடந்து..... வந்து... அவன் மதுராவைத் தேடியபோது... அவனால் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கூட்டமான ஜனத்திரளில் எந்த திசையில் அவள் சென்றிருப்பாள் என்பதை அவனால் கணிக்க முடியவில்லை!

சே! விட்டுவிட்டோமே...? என ஏமாற்றமாய் கைகளைப் பிசைந்தவன் முகம் சிவந்தவனாய் யோசித்தான்.

அது.... மதுராவென்றால்... கூடச் சென்ற அந்த தடியான இளைஞன் யார்? அவனுக்கும் இவளுக்கும் என்ன சம்பந்தம்? காற்று வாங்க வரும் காதல் ஜோடி போல் அல்லவா இருவரும் கடற்கரைக்கு வந்திருக்கிறார்கள்?

அன்று இரவு முழுவதும் சத்யனுக்கு தூக்கம் போயிற்று.

மறுநாள் வழக்கம் போல் பைல் ஒன்றில் கையெழுத்து வாங்குவதற்காக அவன் ரூமிற்குள் நுழைந்தாள் மதுரா.

கள்ளங்கபடமற்ற அவளது வெண்மை முகத்தை ஒருகணம் உற்று நோக்கினான் சத்யன்.

அவன் விடாமல் அப்படிப் பார்க்கவே மதுராவிற்கு பொறுமை போயிற்று.



என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? என்றாள்.

சத்யன் மேலும் அவளையே ஆழமாய்ப் பார்த்தவன், ஒன்றுமில்லை, இந்தப் பூனையும் பால் குடிக்குமா? என்று சந்தேகம் வந்தது. அதான் பார்க்கிறேன்.

மதுராவிற்கு சட்டென ஒன்றும் புரியவில்லை.

என்ன அது...? பூனை பால் குடிக்குமா? என்ன சொல்கிறீர்கள்...? என்றாள் சினம் கொண்டவளாய்.

நேற்று உன்னை கடற்கரையில் பார்த்தேன்... சொல்லிவிட்டு சத்யன் அவளையே பார்த்தான்.

நிதானமாய் சத்யன் சொல்லிவிட்டு அவள் முகக்குறிப்பை கவனமாய் தேடியபோதுதான் மதுராவுக்கு சட்டென உண்மை உரைத்தது.

நேற்று பாஸ்கருடன் கடற்கரையில் இருந்ததை சத்யன் பார்த்து விட்டானா? ஆனாலும்... மதுரா சுதாரித்து விட்டாள்.

என்ன கடற்கரையிலா? என்னையா? ஒருக்காலும் இருக்காது? நேற்று முழுவதும் என் ரூமில் இருந்தேன். ஆமாம் எதற்கு கேட்டீர்கள்? என்றாள் அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டு.

அப்படி சத்யன் முன் ஒரு பொய்யைச் சொல்வது கூசாமல் நடிப்பது மதுராவுக்கு முள் மேல் நிற்பது போல் துடிப்பாய் இருந்தது.

உண்மையை அவனிடம் சொல்லிவிட எவ்வளவோ தவித்தாள். ஆனால் பெரியவர் சொல்லி இருக்காரே... எக்காரணம் கொண்டும் இந்த பாஸ்கர் விஷயம் சத்யனுக்கு தெரிந்துவிடக் கூடாது என்று அவளிடம் சத்யம் வாங்கியிருக்காரே....?

வேறு வழியில்லை. பொய் சொல்லித்தான் ஆகவேண்டும். மனதை திடப்படுத்திக் கொண்டு மதுரா அழுத்தமாய் சத்யன் நம்பும்படி நடித்துப் பேசினாள்.

அவள் திடமான பேச்சில் சத்யனுக்கே சந்தேகம் வந்துவிட்டது.

நாம் பார்த்தது மதுராவில்லையோ? மதுரா போன்ற சாயலில் வேறு பெண்ணை பார்த்திருப்பேனோ?

தனக்குத்தானே குழம்பியவனாய் சத்யன் அசுவாசப்படுத்திக் கொண்டான். அவளை போகச் சொன்னான்.

நிம்மதியடைந்தவளாய் வெளியே வந்து மூச்சுவிட்டாள் மதுரா. கூசாமல் சத்யனிடம் பொய் சொன்னதை நினைத்து மனம் கனக்கு ஆரம்பித்தது. வேலையில் கவனம் செலுத்த முடியாமல் அப்படியே உட்கார்ந்து விட்டாள் மதுரா.



# 13



அன்று சத்யன் கண்ணிலிருந்து மதுரா தப்பிவிட்டாலும். அவள் கையும் களவுமாய் மாட்டிக் கொள்ளும் சந்தர்ப்பம் அடுத்த வாரமே நிகழ்ந்து விட்டது.

அன்று அலுவலகத்திலிருந்தவள் தன்னை பதட்டமாய் தேடி வந்த பணியாளைப் பார்த்து திடுக்கிட்டு விட்டாள். பாஸ்கரை கவனித:துக் கொண்டிருக்கம் பணியாள் அது.

அம்மா உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும்... என்றதும் அவனை தனியே கூட்டிப் போய் மதுரா விசாரித்தாள்.

விஷயத்தைக் கேட்டதும் திக்கென்றது.

விஷயம் இதுதான். மருத்துவர் ஆலோசனைப்படி பாஸ்கர் குடிக்க இரண்டு கோப்பை மது அவனுக்கு கொடுப்பதுண்டு. அன்று மது தீர்ந்து விட்ட காரணத்தினால் பணியாட்களால் பாஸ்கருக்கு இரண்டு கோப்பை மது கொடுக்க முடியவில்லை. தனக்கு மது கொடுக்கப்படவில்லை என்றதும் பாஸ்கர் கோபமாகிவிட்டானாம். வெறி வந்தவன் போல் பணியாட்களை தள்ளிவிட்டு வெளியே சென்று விட்டானாம்...!

மதுராவிற்கு ஒரு கணம் ஒன்றும் ஓடவில்லை. இந்நேரம் பார்த்து பெரியவர் குருநாதர் வேறு ஊரல் இல்லை. ஒரு மாத காலவெளிநாடு சுற்றுப்பயணம் சென்றிருக்கிறார். இந்நிலையில். மூன்று நான்கு பணியாட்கள் அவனைப் பிடித்து வைக்காமல் விட்டு விட்டு தன்னிடம்வந்து சொன்னால்... தனியொரு பெண்ணாய் அவளால் என்ன செய்ய முடியும்?

ஆனாலும் அதற்காக சும்மா இருக்க முடியாது. பெரியவர் குருநாதருக்காக ஏதாவது செய்தாக வேண்டும். பின் தன்னிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கும் அவருக்கு என்ன பதில் சொல்வது? வேறு வழி தோன்றாதவளாய் அலுவலக விடுப்பிற்கு சொல்லிவிட்டு பணியாளுடன் பாஸ்கரை தேடி கிளம்பினாள்.

பாஸ்கரை எங்கே போய் தேடுவது?

அவள் யோசனைக்கு பணியாளே விடையும் கொடுத்தான்.

அம்மா பாஸ்கர் மதுவை நாடி ஏதாவது பார் கிளப்பிற்கு சென்றிருப்பார் என்று எண்ணுகிறேன்.... எனவும் அவனிடமே மதுரா விசாரித்தாள்.



பாஸ்கர் வீடு அருகே மட்டும் நான்கு பார் கிளப்புகள் இருந்தன. மதுரா பணியாளுடன் அவைகளைத் தேடிச் சென்றாள்.

பார் கிளப் நகரின் போக்குவரத்து குறைந்த சாலைகளில் ஓரமாய் அமைந்திருந்தது. பணியாளை இரண்டு பார் கிளப்புகளில தேடச் சொல்லிவிட்டு மதுராவே நேரிடையாய் ஒரு கிளப்பிற்குள் நுழைந்தாள்.

அங்கு அவள் நினைத்தது போலவே குடித்துவிட:டு மேஜை ஒன்றில் பாதி மயக்கத்தில் மணங்கியபடி பாஸ்கர்! மதுரா அவனை நெருங்கினாள்.

கிளப்பினுள் நுழைந்த அவளை வைத்டத கண் வாங்காமல் விடலைத்தனத்துடன் முறைத்த பார்வைகளை சட்டை செய்யாமல்... கைத்டதாங்கலாய் பாஸ்கரை பிடித்து தூக்கினாள்.

பாஸ்கர் ஒருவாறு தள்ளாடி எழுந்தான்.

அவனை அப்படியே தள்ளாத குறையாய் நகர்த்தி வெளியே கொண்டு வந்தாள் மதுரா.

அதே சமயம்... விதியும் விளையாடியது பார் கிளப்பின் எதிரிலிருந்த ஸ்டார் ஹோட்டலிலிருந்து மீட்டிங் ஒன்றை முடித்து விட்டு சத்யன் தற்செயலாக வெளிவந்தான்.

அவன் கண்களில் அந்தக் காட்சி!

மதுரா பாஸ்கரோடு நின்ற காட்சியை சத்யன் கவனித்து விட்டான்!

அவனால் சற்றும் நம்ப முடியவில்லை. முன்புறம் வழியாய் ஹோட்டிலின் கேட்டை அடைந்து நன்றாக அவர்களைப் பார்த்தான்.

சந்தேகமில்லாமல் அது மதுராதான். பக்கத்தில் தடித்த அந்த பணக்கார இளைஞன்!

அவன் குடித்திருப்பான் போலும், தள்ளாட்டமாய் மதுராவின் மேல் விழாத குறையாய் நின்று கொண்டிருந்தான். மதுராதான் அவன் கைகளைப் பற்றி ஏறக்குறைய அவனை தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

காட்சியைப் பார்த்த சத்யனுக்கு கண்களே எரிவது போல் இருந்தது. உருக உருக அவன் நினைத்து காதலித்தவள் அவன் மனதின் இதய சிம்மாசனத்தில் கம்பீரமாக வீற்றிருப்பவளா..... இப்படி இன்னொருவனுடன் சல்லாபித்துக் கொண்டு...? மதுராவைப் பற்றி அவன் கொண்டிருந்த உயர்ந்த எண்ணம் மறுநிமிடமே மட்டரகமாய் மாறிக் கொண்டது.

அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே மதுரா டாக்ஸி ஒன்றை நிறுத்தி இருவரும் ஏறினார்கள்.

விடக்கூடாது இருவரையும்கையும் களவுமாய் பிடித்தாக வேண்டும்!

சத்யனும் டக்கென தன் காரிலேறி கிளம்பியவன் அவர்களை பின்தொடர ஆரம்பித்தான்.

டாக்ஸி புறநகர் பகுதி நோக்கி விரைந்தது. பாதி தூரம் சென்றதும் நின்றது. மதுரா டிரைவரிடம் பாஸ்கர் வீட்டு முகவரி சொல்லி இறக்கி விடும்படி கேட்டுக் கொண்டாள். காரை விட்டு இறங்கிக் கொண்டாள்.

சத்யன், கார் மதுராவை இறக்கிவிட்டு செல்வதை கவனித்தான்.

முக்காடிட்ட உருவமாய் மதுரா வெளிப்பட்டு ரோட்டிலிறங்கி விறுவிறுவென நடக்க ஆரம்பித்தாள்.

சத்யனுக்கு அவள் வெளிப்பட்டு நடப்பதைப் பார்த்ததும் ஒரே வேகம்.

முழுக்க நனைந்து விட்டு இதில் முக்காடு வேறு?

சரட்டென காரை கிளப்பி வேகமாய் அவளது குறுக்கே சடன் பிரேக்கிட்டு நிறுத்தினான்.

திடீரென குறுக்காய் தன் மேல் மோதவந்த காரைக் கண்டு மதுரா திடுக்கிட்டாள்.

அது சத்யனுடைய கார் என்றதும் அவள் உயிரே போய் விட்டது.

யார் பார்த்துவிடக்கூடாது என்று நினைத்தாளோ அவனே பார்த்து விட்டான்.

இனி என்ன செய்வது? எப்படி தப்பிப்பது?

காரிலிருந்து வேல் குத்தும் பார்வையோடு சத்யன் வெளிப்பட்டவன் அவளை எரித்துவிடுவது போல் பார்த்தான்.

கழுகிடம் அகப்பட்ட கோழிக்குஞ்சாய் மதுரா அவனது பார்வையை கண்டு தவித்தாள்.

யார் அது? என்றான் சத்யன் கடும் குரலில்

மதுராவுக்கு புரியவில்லை யாராம..? ஒருவேளை சத்யன் பார்த்துவிட்டானா...? பார்த்டதுவிட்டுத்தான் கேட்கிறானா....?

என்ன கேட்கிறீர்கள் நீங்கள்? என்றாள் புரியாதவள் போல்.

புரியவில்லை...? கொஞ்ச நேரத்திற்கு முன் தடிப்பயல் ஒருவனுடன் பாரிலிருந்து கூத்தடித்துக் கொண்டு கிளம்பி வந்தாயே அவனைத்தான் கேட்கிறேன். பதில் சொல்... என்றான் மிரட்டும் குரலில்.

அவர்.... அவர்... மதுரா தடுமாறினாள்.

ஓ..... அவரோ....? அவ்வளவு மரியாதைக்காரனோ...? நல்ல மரியாதைதான்...! எனவும் மதுராவுக்கு சினம் எகிறிற்று.

அ..... அது.... அது... உங்களுக்கு தேவையில்லாதது. வழியை விடுங்கள்...! என்றாள் அவளும் கோபமாக.

அவள் பதில் சத்யனை ரௌத்திரமாயிற்று





# 14



தேவையில்லாததா? என்னடி பசப்பு வேலை காட்டுகிறாய்? உன்னை அன்பு இல்லத்திலிருந்து பிடித்துக் கொண்டு வந்தவன் நான்... என்னை விட்டுவிட்டு இன்னொருவனுடன் சரசமாடுவதை எப்படி நான் அனுமதிக்க முடியும்?

தெறித்து வந்த வார்த்தைகளைக் கண்டு மதுரா பொசுங்கித்தான் போனாள். ஐயோ, என்ன ஒரு அபாண்டம்! அவள் சரசமாடிவிட்டு வருவதாய் வாய் கூசாமல் சொல்கிறானே!

என்னடி, குட்டு உடைந்து விட்டதும் என்ன செய்வதென்று தவிக்கிறாயா?

அப்போதுதான் அவன் டி போட்டு மட்டரகமாக பேசுவதை மதுரா ஆத்திரமாக உணர்ந்தாள்.

மிஸ்டர்...கொஞ்சம் மரியாதையாய் பேசுங்கள்... என்றாள் அதே ஆத்திரத்துடன்.

என்ன.... மிஸ்டரா? அதற்குள் என் பெயர் மறந்துவிட்டதா? அது சரி தினம் ஒருத்தனுடன் கூத்தடித்து சல்லாபித்தால் என் பெயர் மறந்துதான் போகும்...! என்றான் சத்யன் இகழ்ச்சியாக.

என்ன உளறுகிறீர்கள்?

நான் ஒன்றும் உளறவில்லை. எனக்கு எல்லாம் புரிந்து விட்டது.....

என்ன புரிந்தது?

உன்னை அன்பு இல்லத்தில் கட்டுப்பாட்டோடு உடைத்து வைத்திடிருந்தார்கள். உன்னை நான் வெளியே கொண்டு விட்டதும் உன்னால் அடக்க முடியவில்லை.....

என்ன... அடக்க முடியவில்லையா?

ஆமாம்... உன் உடம்பு உணர்ச்சிகளை உன்னால் அடக்க முடியவில்லை. அதான் அவிழ்த்துப் போட்டுவிட்டு ஆடாத குறையாய் கண்டவனுடன் சுற்ற ஆரம்பித்து விட்டாய்...

ச்சீ.... உங்கள் அசிங்கமான கற்பனைகளை நிறுத்துங்கள்...! என்றாள் மதுரா ஆத்டதிரமாய் காதை பொத்திக்கொண்டு.

நிறுத்துகிறேன். ஆனால் அதற்:கு நீ ஒன்று செய்ய வேண்டும்...

மறுபடியும் என்ன சொல்லப் போகிறான். வார்த்தையால் என்ன குத்து குத்தப் போகிறான் என்று பயந்தே மதுரா பார்த்தாள்.

அவள் நினைத்தது போலவே ஓங்கி இதயத்தில் குத்தினான்.

உன்னை கோபுரமாய் நினைத்து பூஜித்துவிட்டேன். ஆனால் நீ குப்பை மேடு என்று இன்று தெரிந்து விட்டது. அதனால் பரவாயில்லை. ஒருநாள் என்னுடன் படுக்கைக்கு வந்துவிடு. உன்னுடைய உணர்ச்சிகளுக்க வடிகாலாய் நானும் ஒருநாள் இருந்து விடுகிறேன்... எனக்கும் உன்னுடன் பழகின தோஷத்திற்கு திருப்தி கிடைத்துவிடும்....

சம்மட்டியாய் வார்த்தைகள் மதுராவின் இதயத்திடினுள் இறங்கியது. நெருப்பில் அகப்பட்ட புழுவா; துடித்தாள். ஆனால் சத்யன் அத்தோடு அவளை விட்டுவிடுவதாயில்லை.

என்ன யோசிக்கிறாய்? பணம் தருவானா மாட்டானா என்றா? கவலையே படாதே. கட்டு கட்டாய் தருகிறேன்... வாங்கிக் கொள்கிறாயா?

பர்ஸை எடுத்து வேறு காட்டினான் சத்யன். அவனை எரித்துவிடுவது போல் மேலும் மேலும் முறைத்தாள் மதுரா.

ஸ்ஸ்... ஆத்திரப்படாதே...! அவசரமில்லை கொஞ்சம் யோசித்து புத்திசாலியாக நடந்து கொள். என் மாதிரியான பணக்கார கஸ்டமர்களை பிடித்து வைத்துக் கொண்டால் உனக்கு ரொம்பவும் நல்லது. எதிர்காலத்தில் நீ உன் போன்ற பெண்களை வைத்து ஒரு தொழில் சாம்ராஜ்யமே அமைத்துக் கொள்ளலாம் என்ன சொல்கிறாய்?

அவளைக் கேள்விகளால் குத்து குத்தென்று குத்தி நாராய்க் கிழித்துப் போட்டவாறு அங்கிருந்து கிளம்பிப் போனான் சத்யன்.

தோய்ந்து போன நூலாய் நடைப்பிணம் போல் ஆட்டோ ஒன்றை பிடித்து மதுரா ரூமிற்கு போய் சேர்ந்தாள்.



# 15



சத்யன் வீட்டிற்கு திரும்பியவனுக்கும் ஒன்றும் ஓடவில்லை. தன் ரூமில் இரை தேடும் புலிபோல் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தான். மதுராவை பாஸ்கருடன் பார்த்தது அவனது கனவுக் கோட்டையை நொறுக்கி தூள் தூளாக்கியிருந்தது.



அன்பு இல்லத்தில் கட்டுப்பாட்டோடு வளர்ந்தவள் நகரச் சூழ்நிலையில் இப்படி தறிகெட்டு போய்விட்டாள் என்றே நம்பினான். கூட இந்த அந்த தடியன் யாரென்று தெரியவில்லை. தெரிந்தால் நாலு சாத்து சாத்திருக்கலாம்! ஆனால் அதைவிட...

அதைவிட... மனதுக்குள் கோபுரமாய் பூஜித்தவள் குப்பை மேடாய் போய்வவிட்டாளே? அவளுக்கு என்ன தண்டனை கொடுப்பது? தன் புனிதமான மனக்கனவுகளை தரைமட்டமாக்கி தன்னை வஞ்சித்து விட்டவளை எப்படி பழி வாங்குவது?

ஆக்ரோஷமாய் மதுராவைக் கடித்துக் குதறும் உணர்வுடன் சத்யன் நடமாடினான். அந்தச் சிந்தனையாலே அவனுக்கு அன்றைய தூக்கமும் போயிறறு.

மறுநாள் மதுரா வேலைக்கு கிளம்பியவளுக்கு அலுவலகம் செல்லவே இஷ்டமில்லை. எப்படிச் செல்ல? அங்குதான் கையில் வேலை வைத்துக் கொண்டு அவளைக் குத்திக் கிழிக்க தயாராய் சத்யன் காத்திருப்பானே?

தளர்வான நடையுடன் கிளம்பியவள் சிறிது தூரம் நடந்ததுமே எண்ணங்கள் மாற, உயிர் வந்தது போல் நிமிர்ந்து கொண்டாள்.

அவள் செய்யும் பணி எவ்வளவு தூய்மையான விஷயம். அதில் போய் சேற்றைப் பூசுகிறானே? அவன் சொல்லிவிட்டால் அது உண்மையாகி விடுமா?

அவளை மரியாதைக் குறைவாய் எவ்வளவு கேவலமாய் நினைத்து விட்டான்!

உணர்ச்சிகளை அடக்க முடியாமல் ஆண் துணைக்கு அலைகிறாளாம்...? என்ன ஒரு கீழ்த்தரமான பழி?

அது... அவள் கை பிடித்து அழைத்து வந்த அவர் யாரென்று இவனுக்குத் தெரியுமா? தெரிந்தால் இப்படியெல்லாம் பேசுவானா?

அவசரக்காரன்... ஆத்திரக்காரனுக்க புத்தி மட்டு என்பதை போல் பேசிவிட்டான். இதைப் பெரிசுப்படுத்துவதோ இதற்காக வருந்துவதோ பெரும் முட்டாள்தனம்! தனக்குத்தானே பேசி முணுமுணுத்துக் கொண்டு விறுவிறுவென மதுரா நடந்தாள்.

அலுவலகத்திடில் எந்தவித உணர்ச்சியுமில்லாமல் நுழைந்தவள் நேராக தன் இருக்கைக்குச் சென்று வேலைகளை கவனிக்க ஆரம்பித்து விட்டாள். நேரமாக ஆக, அக்கவுண்டிங் லெட்ஜர், டேலி ஷீட், டெலிவரி வவுச்சர், என எத்தனை வேலைப் பளுக்களையும் தன் மேல் இழுத்துப் போட்டுக் கொண்டு மனம் சஞ்சலப்படாதவாறு வேலைகளில் மூழ்கியே விட்டாள் மதுரா.

அப்படி மூழ்கிவிட்டதால் வழக்கம்போல் அடிக்கடி ஜன்னல் வழியே சத்யனின் கார் வருகிறதா என்று பார்ப்பது கூட மறந்து போயிற்று.

அதனால்தானோ... என்னவோ கொஞ்ச நேரத்திடில் தற்செயலாக முன்புறம்நிமிர்ந்தவள் அப்படியே திடுக்கிட்டு விட்டாள்.

அவளுக்கு முன்னால் எதிர் சேரில் சத்யன் கைகளை கட்டியபடி... அவளையே விழுங்குவது போல் பார்த்துக் கொண்டு...! எப்போது இவன் வந்தான்? எப்போது உட்கார்ந்தான்?

அட... கழுகு இரை தேடுவது போல் என்ன ஒரு பார்வை?

முன்பு அவன் பார்த்த பார்வையில் கனிவு இருக்கும். இப்போது அவனது பார்வையில் காமம் அல்லவா தெரிகிறது? பார்வையாலே கற்பழித்து விடுவது போல் என்ன ஒரு பார்வை!

உணர்ச்சி அடக்க முடியாமல் தவிப்பவன் இவனல்லவா? அதை விட்டுவிட்டு அவள் மீது பழி போடுகிறான்.

மதுராவிற்கு அப்படி அவனை எதிரில் பார்த்த அதிடிர்ச்சியில் ஒனரு கணம் பேச்சே வரவில்லை.

சத்யனும் லேசில் பேசுவதாய்இல்லை.

அவளையே கூசச் செய்யும் உரித்த பார்வை பார்த்துக் கொண்டிருந்தான். இந்த அழகை வைத்துக் கொண்டுதானே என்னமாய் மயக்குகிறாள்! என்னமாய் நடிக்கிறாள்!

சிவப்புத் தோலும், செழிக்கும் இளமையுமாய், பேரழகியாய் இருக்கும் திமிர்தானே இப்படி நடக்கச் செய்கிறது? இதை கடித்து குதறி அனுபவித்து விட்டால்....?

அதற்கு மேல் மதுராவால் பொறுக்க முடியவில்லைா.

எதுவானாலும் கண்களைப் பார்த்து பேசலாம... என்றாள்.... வெடுக்கென கொடுவது போல்.

அவளது பேச்சு சாட்டையடியாய் சத்யனுக்கு விழுந்திருக்க வேண்டும்.

நிமிர்ந்துஅடிப்பது போல் அவளைப் பார்த்தான்.

உன் சதையைப் பார்க்க ஒன்றும் நான் வரவில்லை... என்றான் மேலும் கோபமாக...

அப்படியானால் பார்வையை அலையவிடாமல் கண்களை நேராய் பார்த்து பேசலாம்.... என்றாள் விடாப்பிடியாக.

பயம் எனக்கு இல்லை...

எனக்கும் பயம் இல்லை.... என்றாள் மதுரா.



திமிர் பிடித்த கழுதைகள் பயப்படுவது இல்லை....

அது....இன்னொரு கழுதைக்கு புரிந்தால் சரி... என்றான் பதிலடி கொடுத்தவளாய்.

சத்யன் அவளையே ஒரு கணம் உறுத்து முறைத்தவன்.

வெட்டிப் பேச்சு வேண்டாம்... உன்னிடம் ஒரு விஷயம் பேச வந்தேன்... என்றான் காரியம் ஞாபகம் வந்தவனாய்.

என்ன விஷயம்? என்றாள் மதுராவும் சட்டென தாவி விட்ட இயல்புக் குரலில்.

இன்று மாலை அந்த ஜெர்மன் பார்ட்டி எக்ஸ்போர்ட் ஆர்டர் விஷயமாய் சந்திக்க வருகிறார்கள். சந்திப்பு ஹோட்டல் ட்ரீம்லாண்ட்டில் நடக்க இருக்கிறது....

இருக்கட்டும்

அதனால் நீயும் என்னுடன் மாலை ஹோட்டலுக்கு வருகிறாய்...

நானா...? என்றாள் மதுரா வியந்த குரலில்.

ஆமாம். கம்பெனியின் ஆடிட்டிங், டர்ன் ஓவர் பற்றி புள்ளி விவரங்களை நாம் பார்ட்டிக்கு எடுத்துச் சொல்லியாக வேண்டும். அதற்கு உன் உதவி தேவை.....

சத்யன் சொல்லிவிட்டு அவ்ள முகத்தையே கூர்ந்து பார்த்தான். அவள் யோசித்தது அவன் எரிச்சலைக் கூட்டியது.

என்ன யோசிக்கிறாய்? மற்ற விஷயங்களில் காட்டும் உன் அதீத திறமையை கொஞ்சம் வேலையிலும் காட்டலாமே? என்று மீண்டும் அவன் குத்த ஆரம்பிக்கவும் மதுரா அவசரமாய் சம்மதித்தாள்.

வருகிறேன்... என்றாள் ஒற்றைச் சொல்லாக.

சத்யன் அதற்கு மேல் ஒரு வார்த்தை பேசாமல் அவளை ஒரு ஆழமாக பார்த்து விட்டு எழுந்து போனான். அவன் கண்களில் அப்படி மின்னியது கனிவா? இரக்கமா? இல்லை கடித்துக் குதறும் காமமா?

ஒன்றும் புரியாதவளாய் மீண்டும் வேலைகளில் ஆழ்ந்தாள் மதுரா.

மாலை ஐந்து மணிக்கு டாணென சத்யன் ரூமிற்கு வந்து விட்டான்.

அவன் கரெக்டாய் வந்து விடுவான் என்பதையறிந்த மதுராவும் தயாராகவே இருந்தாள்.

என்ன கிளம்பலாமா? என்றான் அவனே அளவெடுத்தவாறு.

மதுரா அவனை அசந்து பார்த்தாள். வழக்கமாய் புல் சூட்டில் இருப்பவன் இன்று டீ ஷர்ட்டும் ஜீன்சுமாய் கச்சிதமாய் இருந்தான். அவனத

ஆறடி உயரத்திற்?கு திடமான உடல்வாகு கம்பீரத்திற்கு அது ரொம்பவும் பொருத்தமாயிருந்தது.

மஞ்சள் டீ ஷர்ட் தழுவியிருந்த அவனது பரந்த மார்பில் அப்படியே தலைவைத்து தூங்கிவிட்டால் என்ன என மதுராவிற்கு நினைப்போடியது. மறுகணமே சிலுப்பிக் கொண்டாள். சே! என்ன ஒரு நினைப்பு! நான் முன்பு பார்த்த கனிவான சத்யன் எங்கே? வீணாக சந்தேகப்பட்டு தன்னை கடித்துக் குதறும் இவன் எங்கே?

இவள் யோசனை அவனுள் குறுகுறுப்பைக் கூட்டியது. மறுபடியும் குத்த வாய்ப்பைத் தேடினான் சத்யன்.

என்ன அம்மணி ரொம்ப யோசிப்பதாய் தெரிகிறது. மேட்சிங் சரிதானே? கவர்ச்சி போதும்தானே? என்றான்.

அவன் என்ன கேட்கிறான் என்று புரியாமலே.

சரிதான்...! என்றாள் மதுரா.

மெள்ள அவள் கிடைத்தது போல் அவன் முகம் மாறிற்று.

ஆண்களுக்கு இந்தக் கவர்ச்சி போதும். உன் போன்ற பெண்களுக்கு... என்று இழுத்தவன், கொஞ்சம் சேலையை அவிழ்த்துவிட்டால் போதும். தானாக கவர்ச்சி கூடிவிடும்...அவ்ள முறைப்பை பொருட்படுத்தாமல் வார்த்தைகளை முடித்தான்.

இவனுடன் பேசுவது முட்டாள்தனம் என்று எண்ணிய மதுரா, தேவையான பைல்களையும் ஹாண்ட் பேக்கை எடுத்துக் கொண்டு விறுவிறுவென கிளம்பினாள்.

சத்யனிடம் எழுந்த குறுஞ்சிரிப்பு மர்மப் புன்னகையாய் மாறியது.

அதே மர்மப் புன்னகையுடன் கார் கதவைத் திறந்து அவளை ஏற்றிக் கொண்டு கிளம்பினான்.

ஹோட்டலை அடையும் வரை இருவரும் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை.

ஹோட்டல் ட்ரீம்லாண்ட் பணக்காரர்களின் சொர்க்கம்என்று சொல்வதற்கேற்ப இருந்தது. மதுரா இதுபோன்ற நட்சத்திர ஓட்டலுக்கு வருவதுஇதுவே முதல் முறையானதால் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சத்யன் காரை உரிய இடத்தில் நிறுத்திடிவிட்டு வந்தவன் மதுரா பிரமித்தபடி ஹோட்டலை, ஹோட்டலில் இடுப்போடு இடுப்பு அணைத்டதபடி ஆவலாய் நுழையும் ஜோடிகளை வியப்பாய் பார்ப்பதை கவனித்தான்.

அவன் முன்னே வேறு ஓர் பெண்ணை ரசிப்பதாவது?



மதுரா அதை சகிக் முடியாமல், வந்த காரியம் மறந்து விடாமல் இருந்தால் சரி... என்றாள் அவன் காதுபடும்படி

சத்யன் உணர்வுக்கு வந்தவனாய் திரும்பியவன்

ஆமாம் ஆமாம்.. அழகுப் பெட்டகமான உன்னை முன்னால் வைத்துக் கொண்டு இன்னொருத்திடியை ரசிப்பது தவறுதான்.. என தனது கழுகுப்பார்வையை முழுமையாய் அவள் பக்கம் திரும்பினான். அவனுக்கு பிடித்தமான உரித்த பார்வையில் மதுராவை ரசித்து பார்க்க ஆரம்பித்தான்.

இது என்ன வம்பு...! வேலியில் ஓடுகிற ஓணானை எடுத்து மடியில் கட்டிக் கொண்ட மாதிரி மதுரா தவித்தாள். மறுகணமே பேச்சை மாற்றுபவளாய், அவர்க்ள வந்து விடுவார்களா? என்றாள்.

யார்? என்றான் சத்யன் புரியாதவன் போல் புருவம் உயர்த்திடி

அதான் அந்த ஜெர்மன் பார்ட்டி.

ம்ம்... வந்து விடுவார்கள்...

அவன் சொல்லி முடித்ததும் ஹோட்டல் பணியாள் வந்து காதில் ஏதோ சொல்லிவிட்டுப் போனான்.

அவன் சென்றதும் சத்யன், ஹோட்டலில் டபுள் பெட் ஏ.ஸி. ரூம் தயாராக இருக்கிறதாம்... என்றான்.

எதற்கு? என்பது போல் மதுரா பார்க்க, நீ.. தயார் என்றால் அதற்கு நானும் தயார்தான்..! என அவள் முறைப்பை பொருட்படுத்தாமல் கண் சிமிட்டியதும் முடிக்கவும் செய்தான் சத்யன்.

உதடுகளை அலட்சியமாய் அவனைப் பார்த்து சுழித்துவிட்டு மதுரா முகம் திருப்பினாள்.

மதுரா அவன் பக்கம் திரும்பாமல் வெளியே அலட்சியப் பார்வை பார்த்தாள். சத்யனிடமிருந்து குறும்பான மர்மப்புன்னகை பெரிதாக்கியது. அப்போதுதான் ஒரு விஷயத்தை கவனித்தாள் மதுரா.

அந்த பெரிய ஹால் முழுவதும் ஆண்களும் பெண்களுமாய் எல்லோரும் ஜோடிகளாகவே உட்கார்ந்திருந்தனர். எல்லோரும் வெடிக்கும் உதட்டுச் சாய சிரிப்புடன் கைகளில் கோப்பைகள் மின்ன அமர்ந்திருந்த விதம் மதுராவுக்கு முதல் முறையாக சந்தேகத்தை உண்டு பண்ணியது.

இந்த இடத்தில் ஜெர்மன் பார்ட்டியுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியுமா? பேசக்கூடிய இடமா இது?

அவள் சந்தேகத்தை அதிகரிக்கும் வண்ணம் ஹாலில் இருந்த அரை வெளிச்சங்கள் பட்டென அணைந்து போய் மினுக் மினுக்கென டிஸ்கோ லைட்டுகள் ஒளிர ஆரம்பித்தன. மேடையிலிருந்த இசை ஒலிகள் வேகம் கூடின. ட்ரம்ஸ் இசை அதிர்வாய் எழும்பியது.

அவ்வளவுதான் எல்லா ஜோடிகளும் இருக்கையை விட்டு எழுந்துவிட்டனர். ஒருவரையொருவர் இடையோடு இடையாய் கட்டித் தழுவியபடி ஒலிக்கும் இசையின் கருதிக்கேற்ப ஆட ஆரம்பித்துவிட...

சத்யனும் பட்டென இருக்கையை விட்டு எழுந்தவன் மதுராவைப் பிடித்து இழுத்தான்.

அவன் இழுத்த வேகத்தில் நிலை தடுமாறி அவன் மேலேயே விழுந்தாள் மதுரா.

இருந்தும் அவசரமாய் விலகியவள் சீறும் பாம்பாய் அவனை முறைத்து, என்ன இது? விடுங்கள்...! என்றாள் அலறாத குறையாய்.

விலகியவளை விடாமல் தாவிப்பிடித்துக் கொண்டான் சத்யன்.

ச்சூ! விடுங்கள், என்ன இது விளையாட்டு?

வெகுண்டு பார்த்தவளை அலட்சியமாய் ஏறிட்டான்.

விளையாட்டா? வந்ததே இதற்குத்தானே!

என்ன இதற்கா?அப்படியானால் ஜெர்மன் பார்ட்டி?

எல்லாம் கப்ஸா, இதுபோன்ற கேளிக்கை விடுதியில் பிஸினஸ் டீலிங் பேச வாய்ப்பே இல்லை என்பது உன் மூளைக்கு இன்னும் புரியாமலா போயிற்று?

அப்படியானால்...?

கேள்விக்குறியுடன் மதுரா முறைக்க ஏளனமாகச் சிரித்தான் சத்யன்.

வேறென்ன? கண்டவனுடன் கூத்தடிக்கிறாய் என்னுடன் ஒருநாள் கூத்தடித்தால் குறைந்தா போய்விடுவாய்? அதான் கூட்டி வந்தேன்... வா! உடம்போடு உடம்பு உரச ஆடுவோம்..!

சிரித்தபடி சொன்னான் சத்யனின் நினைப்பு புரிந்தது.

சே! என்ன ஒரு மட்டமான நினைப்பு! வெகுண்டு போனவளாய் அங்கிருந்து திமிறிக் கொண்டு ஓட முயன்றாள் மதுரா.

அவளை கோழிக்குஞ்சுபோல் அழுத்திப் பிடித்துக் கொண்டான் சத்யன். அவள் காதுகளில், அதோ பார் இங்கிருந்து நீ நினைத்தாலும் போக முடியாது. இந்த ஹாலின் கதவை பூட்டி வைத்திருப்பார்கள். நடனம் முடிந்ததும்தான் திறந்து விடுவார்கள். பேசாமல் என்னுடன் ஆடு...! என்றான்.

மதுரா திரும்பி கதவுகளைப் பார்த்தாள். சத்யன் சொன்னபடியே பணியாட்களால் அது மூடப்பட்டிருந்தது. பக்கத்திலோ மேற்கிந்திய இசைக்கேற்ப ஜோடிகள் தலைதெறிக்க ஆடிக்கொண்டிருந்தார்கள்.

பார்! வாழ்க்கையை எப்படி அனுபவிக்கிறார்கள். அப்படித்தான் அனுபவிக்க வேண்டும்! கமான் க்விக்! ஆட...! என்றபடி ஒருகையால் அவளது சிறு இடையை அணைத்துக் கொண்டு மறுகையோடு கை கோர்த்துக் கொண்டு பிடிவாதமாய் இசைக்கேற்ப சத்யன் ஆட ஆரம்பித்தான். அவளையும் அவனுடன் சேர்த்து ஆட வைத்தான்.

அலுவலகத்தில் நெடுநேரம் வேலை பார்த்த உடம்புச் சோர்வும், மனச்சோர்வும்ஒருசேர எழுந்து மதுராவை வாட்டியது.

ரொம்பவும் தளர்வாய் உணர்ந்தாள். சத்யனிடம் போராடி விடுபட அவளிடம் பலமும் இல்லை. சத்யன் இரும்புப் பிடியாய் அவளைப் பிடித்திருந்தான்.அவன் இழுத்த இழுப்பிற்குஅவள் உடல் வலுவில்லாமல் போனது.

சத்யன் வெறி வந்தவன் போல் ஆடியவன் இசை உச்சமாகிப் போன ஒரு கட்டத்தில் அப்படியே அவளை நெஞ்சோடு வாரியணைத்துமேலும் இறுக்கியவன் அவளது சின்ன உதடுகளில் தனது உதடுகளைப் பொருத்தினான். அழுத்தமாய் முத்தமிடவும் ஆரம்பித்தான்.



# 16



சத்யன் இதழோடு இதழாய் மதுராவை முத்தமிட்டுக் கொண்டிருந்தான். மதுரா தளர்வான நிலையில் சுயநினைவு இழந்திருந்தாள். அழுது அடம்பிடித்த குழந்தைக்கு ஆசைப்பட்ட பொருள் கிடைத்து விட்டதுபோல் அவன் கரங்களில் தன்னிலை மறந்து துவண்டாள். அப்படியே அவனோடு ஐக்கியமானவள் ஒன்றியும் கொண்டாள்.

சத்யன் அவள் மலர் முகத்தை நிமிர்த்தி முகத்தோடு உரசியவன் மீண்டும் மீண்டும் முத்தமிட்டான். தன்னிலை மறந்து தன் கையில் துவண்டு கொண்டிருந்தஅவளை ரசித்துப் பார்த்தவன், என்ன ஒரு தவிப்பு! இதற்குத்தானா... இத்தனை ஆர்ப்பாட்டமும்...? என காதுபட முணங்கவும் செய்தான்.

சத்யன் முணங்கியது அவளது காதுகளில் உரைத்து செய்தியாய் மூளைக்குப் போன போதுதான் மதுராவிற்கு உணர்வே வந்தது. கொஞ்சம் கொஞ்சமாய் உணர்வுக்குத் திரும்பியவள் திடுக்கிட்டும் போனாள்.

காதல் ரசம் சொட்ட சொட்ட... இறுக்கமாய் சத்யனுடைய அணைப்பில் மெய்மறந்து கொண்டு... எப்படி எப்படி இது நிகழ்ந்தது? எப்படி தன்னிலை வசம் இழந்தேன்? எப்படி இதற்கு உடன்பட்டேன்?

தவித்தவள் கோபமும் அவமானமும் தாக்க ஆவேசமாய் அவன் பிடியிலிருந்து விலகினாள். அவளின் அந்த சிலிர்ப்பான கோபத்தை ரொம்பவும் ரசித்தாதன் சத்யன்.

முத்தம் பிரமாதம்... தித்திப்பாக இருந்தது... என்றான் வேண்டுமென்றே அவளை ஆவேசப்படுத்த.

உங்களுக்கு வெட்கமாயில்லை? என்றாள் மதுரா ஆத்திரமாக.

வெட்கமா?எனக்கா? உனக்குக் கூடத்தான் வெட்கம் இல்லை. என் உதடுகள் கிடைத்ததும் காணாததை கண்டது போல் என்னமாய் சொக்கி முத்தமிட்டாய்?

ச்சீ... அசிங்கமான பேச்சு! உதட்டளவில் மதுரா சொன்னாலும் உள்ளுக்குள் குறுகுறுப்பாய் உணர்ந்தாள். சத்யன் சொல்வது நிஜம்தானே?அவன் முத்தமிட்டதும் காணாததை கண்டது போலத்தானே மதியிழந்து சொக்கி விட்டாள் சொக்கி...!

அப்படியானால் உள்ளுக்குள் என்னதான் அப்படி நினைப்பு ஓடுகிறது? மதுரா மறுபடியும் தவிக்க ஆரம்பிக்க சத்யனுக்கு அது சாக்காய் போயிற்று.

என்ன யோசிக்கிறாய்? உண்மை புரிந்து விட்டதா? முத்தம் ஆரம்பம்தான்.அடுத்த நெருக்கமான விஷயத்திற்குப் போவோமா?என்றதும் மேலும் வெகுண்டவளாய் விறுவிறுவென நடக்க ஆரம்பித்தாள்.

அதற்குள் ஹாலில் ஆட்டமும் இசையும் முடிந்திருக்க... ஹாலின் நுழைவாயில் திறக்கப்பட்டது. விடுவிடுவென வெளியேறினாள் மதுரா.

அவள் சிலிர்த்துப் போகும் அழகை வெகுவாய் ரசித்தபடி சத்யன். பின் தொடர்ந்தான். அதற்குப்பின் இருவரும் ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை.

சத்யன் காரை எடுத்டததும்இயந்திரம் போல் மதுராவும் ஏறிக்கொண்டாள். சத்யன் நேராய் காரை அவள் ஹாஸ்டல் ரூம் முன் நிறுத்தியதும் இறங்கிக் கொண்டாள். காரின் கதவை விரைந்து சாத்தியவள் திரும்பிப் பாராமல் நடந்து ஹாஸ்டலுக்குள் சென்று விட்டாள்.

மதுரா சென்ற பிறகும் காரைக் கிளப்பாமல் கொஞ்ச நேரம் அப்படியே வெறித்திருந்து விட்டு கிளம்பிப் போனான் சத்யன்.

தன் ரூமிற்கு போய் கட்டிலில் தளர்வாய் பொத்தென விழுந்தாள் நடந்ததை நினைத்து உடம்பு முழுவதும் நடுங்கிற்று.

சத்யனின் இன்றைய பேச்சு, நடவடிக்கை எல்லாம் அவளை ரொம்பவும் பாதித்துவிட்டது. ஏன்? எதற்கு?இவன் என்ன அப்படி? எத்தனை



பேரை பார்த்திருக்கிறாள்?எத்தனை பேர் அவளிடம் வாலாட்ட முயன்று... அவளும் ஒட்ட நறுக்கியிருக்கிறாள்...?

அனால்... இந்த சத்யன்?இவனிடம் எதுவும் முடியவில்லையே! அவளுடைய கோபம்இவனிடம் பலிக்கவில்லையே! ஏன்? எதனால்? எப்படி இது நிகழ்ந்தது?

மதுரா புரியாமல் ரொம்ப நேரம் தவித்தாள். பாதிப்பின் அர்த்தம் என்ன என்று தேடினாள். அர்த்தம் தெரிந்தது. நிஜம் புரிந்துபோது நிஜம் அவளை மேலும் கவலைக்குள்ளாயிற்று.



# 17



அலுவலகத்தில் வந்து அன்று வேலையில் ஆழ்ந்தவளுக்கு மனம் கொஞ்சமும் லயிப்பில்லை. புயலாப் சத்யன் எப்போது நுழையப் போகிறான், நுழைந்து அவளை என்ன வாட்டு வாட்டப் போகிறான் என்ற பயமே பிசைந்தது.

அவள் நினைத்டதது போல அன்று அவளுக்கு பெரும் அதிர்ச்சியைக் கொண்டு வந்திருந்தான் சத்யன். காரிலிருந்து அவனுடன் மினுக்கிக் குலுக்கி இறங்கினாள் அந்தப் பெண்.

இருபது வயது இருக்கும். நல்ல மாநிறம்தான். ஆனால்அதற்கு வெள்ளையடிப்பது போல் ஒரு வண்டின பவுடரை, ஸ்நோ க்ரீம்களை தடவி வைத்திருந்தாள். காதுகளில் ஊசலாடும் சாவிகள் லேட்டஸ்ட் பேஷனாம். கண் இமைப்பகுதியில், புருவங்களில் அதீதமாய் தடவப்பட்ட மினுமினுப்பு லோஷன். லோ ஹிப்பில் பளபளப்பான சில்க் ஸேரி. சினிமா நடிகை போல் கட்டாயம் தொப்புள் சுழி தெரிய வேண்டும் என்பதில் சிரத்தையெடுத்திருந்தாள். முந்தானையை ஏறக்குறைய விலக்கியே விட்டிருக்க

அந்த அலட்டல்காரியை பெரும் மகாராணியைக் கூட்டிச் செல்வது போல் வழிநடத்தி தன் ரூமிற்கு கூட்டிச் சென்றான் சத்யன்.

அந்தப் பெண்ணையே வைத்த கண் வாங்காமல் பார்த்த மதுராவுக்கு என்னவோ போல்தான் இருந்தது. அவன் இடித்து அணைக்காத குறையாய் சத்யனுடன் நடந்த விதம், கொஞ்சிக் குலவி நொடிக்கொருதரம் சிரித்த அவளது போக்கு எல்லாம் மதுராவுக்குள் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

ரூமிற்குள் சென்றுகதவு சாத்திக் கொண்டதும் மதுராவால் பொறுக்க முடியவில்லை. பரபரப்பு கூடியவளாய் கதவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கொஞ்ச நேரத்தில் அவள் நினைத்தது போலவே இண்டர்காமில் வா,...... என்று ஒற்றைச் சொல்லாய் அழைத்தான் சத்யன்.

மதுரா எந்த உணர்ச்சியும் காட்டாமல்தான் உள்ளே சத்யனின் ரூமிற்குள் நுழைந்தாள். ஆனால் உள்ளே அவள் கண்ட காட்சி அவள் உணர்ச்சிகளையெல்லாம் பிடித்து ஒரு ஆட்டு ஆட்டி விட்டது.

உள்ளே சத்யன் சேரில் கம்பீரமாய் உட்கார்ந்திருக்க... அவன் கழுத்தை வளைத்து கை போட்டபடி சேரின் விளிமபில் அந்த பெண் சத்யனை இடித்து அணைக்காத குறையாய் அவள் உட்கார்ந்திருந்தாள்.

இப்படியும் ஆட்கள் இருக்கிறார்களா?. என்ற வியப்பும் அதிர்ச்சியுமாய் அவர்களைப் பார்த்தாள். கண்களில் கண்ட காட்சி எரிச்சலை மூட்டி பெரும் ஆத்திரமாக்கியது

ஆனால் அவள் ஆத்திரத்தை கொஞ்சமும் சட்டை செய்யாதவனாய் சத்யன். இவள் யார் தெரிகிறதா? லலிதாகுமாரி. என்னுடைய பர்சனல் செகரெட்டரி.... என்று அறிமுகப்படுத்தவும் செய்தான்.

அவன் அறிமுகப்படுத்தியதும்அந்த அலட்டல் லலிதாகுமாரி நிமிர்ந்து மதுராவை ஒரு அலட்சியப் பார்வை பார்த்தாள்.

சத்யன் அவள் பக்கம் திரும்பி, லலித், நான் சொன்ன மதுரா இதுதான்! என கை காட்டவும் செய்தான். லலித்தாம்! நான் சொன்ன மதுராவும்...அப்படி என்ன சொல்லி விட்டான் இந்த் சத்யன்? சினம் தாக்கியவளாய் வெகுண்டு போய் பார்த்தாள்.

லலிதாகுமார் மதுராவை அறிமுப்படுத்தியதும் எழுந்து அவள் பக்கத்தில் வந்து கைகளை குலுக்கினாள். வேண்டா வெறுப்பாய் கைகளை கொடுத்தாள் மதுரா.

லலிதாகுமாரி அத்துடன் நிற்கவில்லை. கை கொடுத்த அதே வேகத்தில் மதுராவைக் கட்டிப் பிடித்து ஆங்கில பாணியில் கன்னத்தில் முத்தம் கொடுக்கவும் போனாள்.

ச்சி! என்ன இது நாகரீகம்?என்று அதிர்ந்து சிவந்த மதுரா அதைத் தவிர்த்தாள். அவள் கைகளைத் தட்டி விட்டாள். லலிதாகுமாரியின் முகம் கண்டிப் போய் விட்டது. எல்லாவற்றையும் கவனித்த சத்யன், கவலைப்படாதே லலிதா. அவளுக்கு முத்தம் பெண்கள் கொடுத்தால் பிடிக்காது. ஆண்கள்தான் கொடுக்க வேண்டும்...என்று முத்தாய்ப்பாய் மதுராவின் முறைப்பை பொருட்படுத்தாமல் சொன்னான்.



மதுராவுக்க அதற்கு மேல் அங்கு நிற்கப் பிடிக்கவில்லை.

விருட்டென திரும்பி வெளியேறிப் போனாள்.

நில்! என்று அவளை நிறுத்தியது சத்யனின் குரல்.

உன்னை வரச் சொன்ன காரணம் முடியவில்லை. அதற்குள் ஓடப் பார்க்கிறாய்...

என்ன? என்பது போல் வெடுக்கென மதுரா அவனது முகத்தையே பார்த்தாள்.

சத்யன் நிதானமாய் அவள் முன் வந்து கைகளை கட்டி நின்று கொண்டான். நாதான் கம்பெனிக்கான டெண்டர் லெட்டர் ஒன்றை டிக்டேட் செய்ய வேண்டும். சொல்கிறேன்.... என்றபடி சத்யன் திரும்பி லலிதாகுமாரியை பார்த்தவன், லலிதாகுமாரி, கொஞ்சம் இப்படிவா... என்றான்.

சத்யன் அழைத்டதும் குதி போடாத குறையாய் துள்ளி அவன் பக்கத்தில் போனாள் லலிதா. அவள் இடையை தன் கரங்களால் வளைத்து அவளை தன்னோடு அப்படியே அணைத்துப் பிடித்துக் கொண்டான். லலிதாகுமரியும் அவனோடு அப்படியே ஒட்டிக் கொண்டாள். கரங்களால் அவனது கழுத்தை மாலை போல் பிடித்துக் கொண்டாள்.

மதுரா தவித்துப் போனாள்.

என்ன ஒரு காட்சி! அவள் கண் முன்னே சத்யன். இன்னொரு பெண்ணை காதலி போல் கட்டிப் பிடித்துக் கொண்டு... சரஸமாடும் மன்மதன் ரதி போல் இருவரும் போஸ் கொடுத்துக் கொண்டு..?

அடுத்த நந்தினி மாத நாவலில்
அகிலாகோவிந்த் எழுதும்

"காதல் நிலவு...!"
அட்டகாசமான நாவல்..! படிக்க தவறாதீர்கள்..!

சிவந்துபோன மதுராவை மேலும் சிவக்க வைத்தவனாய் சத்யன், மதுரா, அந்த நாதன் கம்பெனிக்கான லெட்டரை, இப்போது டிக்டேட் செய்கிறேன். குறிப்பெடுத்துக் கொள்கிறாயா? என்றான்.

சத்யன் சொல்லச் சொல்ல மதுராவுக்கு பற்றிக் கொண்டு வந்தது.

இவன் மன்மத ரசம் சொட்டச் சொட்ட இன்னொரு பெண்ணுடன் அவள் கண் முன் சரசமாடிக் கொண்டே லெட்டர் டிக்டேட் செய்வானாம். அவள் குறிப்பெடுக்க வேண்டுமாம்...?

சிவந்து சிலிர்த்துப் போன மதுரா மறுகணமே தனது உணர்வு களையும் அடக்கினாள். அவன் சத்யன்... எப்படிப் போனால்... எந்தன் பெண்ணுடன் கூத்தடித்தால் அவளுக்கென்ன? அவனுக்காக அவள் ஒன்றும் உருகவில்லை! அவன் இன்னொரு பெண்ணுடன் கூத்தடிப்பதால் அவள் ஒன்றும் துடித்துப் போகவில்லை....

தனக்குத் தானே சொல்லிக் கொண்ட மதுரா இறுகிய முகத்தேடு கையிலிருந்த லெட்டர் பேடையும் பேனாவையும் உயர்ததிப் பிடித்து. ம்... ம்... சொல்லுங்கள்... என்றாள் அவன்முகம் பாராமலே.

சத்யன் கண்களால் ஊடுருவி அவளின் மன ஓட்டத்தை ஒரு கணம் படித்தான்.

பின் நிதானமாய் அதே மன்மத போஸில் லெட்டர் டிக்டேட் செய்ய ஆரம்பித்தான். ஒவ்வொரு வார்த்தையையும் மெல்ல உச்சரித்து அவள் மதுரா நிமிர்ந்து. என்ன சொன்னீர்கள்? பவர் ஆஃப் அதாரிட்டியா? இல்லை பவர் ஆஃப் அட்டானியா? என லெட்டரின் ஒவ்வொரு வரிக்கும் சந்தேகம் கேட்கும்படி வைத்தான். ஒவ்வொரு வார்த்தைக்கும் உச்சரிப்பு புரியாமல் மதுரா நிமிர்ந்து அவனை... லலிதகுமாரியுடன் அவன் கட்டிப் பிடித்தபடி நிற்கும் மன்மத போஸை பார்க்கும்படி செய்தான்.

மதுரா கஷ்டப்பட்டு மனதை திடப்படுத்தி இரண்டு வரிகள்தான் குறிப்பேட்டில் எழுதியிருப்பாள். அதற்கு மேல் அவளால் சகிக்க முடியவில்லை. தாங்க முடியாத எரிச்சலும் கோபமும் ஒருசேர அவளைத் தாக்கின.

வெகுண்டு போனவளாய் லெட்டர் பேடையும் போனாவையும் மேஜை மீது வீசி விட்டு விறுவிறுவென்று ரூமை விட்டு வெளியேறினாள்.

சலிர்த்துப் போன அவளது வேகத்தை ரசித்துப் பார்த்தவன் சத்யன். அவன் முகத்தில் குரூரத் திருப்தியொன்று புன்முறுவலுடன் ஓடியது.

தன் சீட்டிற்கு வந்து தளர்வாய் விழுந்தாள் மதுரா.



என்ன ஒரு சோதனை! அவளால் அந்தக் காரியத்தை, சத்யன் எவளுடன் எக்கேடோ கெட்டிருந்தால் என்ன என்று விட்டு விட்டு கடமையைச் செய்ய முடியாமல் ஏன் போயிற்று?

தவித்தவளாய் உட்கார்ந்திருந்தவளை வேண்டுமென்றே தேடி வந்தான் சத்யன்.

வந்தவன் நிதானமாய் எதிர் இருக்கையில் அமர்ந்து கொண்டு அடடா! தேவிக்கு இவ்வளவு கோபம் வருமென நான் நினைத்துக்கூட பார்க்கவில்லையே... என்றான் போலியான வருத்தக் குரலில்.

தன்நிலையை அவன் நன்றாக படிக்க முயல்கிறான் என்று நினைத்த மதுரா அவசரமாய் சுதாரித்துக் கொண்டாள்.

கோபம் எல்லாம் ஒன்றுமில்லை. நான் ஒழுங்காகத்தான் இருக்கிறேன்.... என்றாள் உணர்ச்சி ஏதுமில்லாத அமைதிக் குரலில்.

பின் ஏன் லெட்டர் டிக்டேட் செய்வதற்குள் சகிக்க முடியாதவள் போல் ஓடி வந்து விட்டாய்?

ஒரு கணம் மதுரா யோசித்தாள். உண்மை அதுதான். ஆனால் உண்மையை எப்படி அவளால் சொல்ல முடியும்?

ம்ம்... சொல்லு...

எதையோ பெரிதாய் கண்டுபிடித்து விட்டவன் போல் சத்யன் விரட்டினான்.

அது... வந்து நீங்கள் ஒரு நிலையில் இல்லாமல் உணர்வுகளின் பிடியிலிருப்பது போல் இருந்தது. மேலும்அப்படியொரு நேரத்தில் பிஸினஸ் லெட்டர் எழுதி இடைஞ்சலாக்க வேண்டாமென்றுதான் வந்து விட்டேன்...

ஓஹோ....

சத்யன் சொல்லிவிட்டு ஆழமாய் அவளைப் பார்த்தான்.

மதுரா ஒன்று சொல்கிறேன், கவனமாய் கேட்டுக் கொள்... என்றபடி பெரு மூச்சிழுத்தவன் தொடர்ந்து, இப்போது உனக்கு எப்படி பற்றிக் கொண்டு வருகிறதோ அதுபோல்தான் அந்த தடியனுடன் உன்னைப் பார்க்கும்போது எனக்கு இருக்கிறது... நேற்று கூட கடற்கரைப் பகுதியில் உன்னை அவனுடன் பார்த்தேன்...

சொல்லிவிட்டு நிறுத்தியவன் ஒரு வினாடி அவள் முகக் குறிப்புகளைத் தேடினான். மதுரா கர்ணசிரத்தையாய் முகத்தை கட்டுப்படுத்திடியிருந்தாள். எந்த ஒரு சிறு அசைவும் அவளிடம் இல்லை.

இவள் சரியான அழுத்தகாரிதான் என்பதை சத்யன் புரிந்து கொண்டவன், மதுரா, உன் உள்மனம் என்ன, அடியில் என்ன ஓடுகிறதென்று எனக்கு நன்றாகத் தெரியும். அதனாலே சொல்கிறேன். உன்னைப் பற்றிய

சில விஷயங்கள் என்னை உறுத்துகிறது. ரொம்பவும் மர்மமாயிருக்கிறது. அதனால் நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்.

சத்யனின் குரல் தாழ்ந்து பின் கடும் கட்டளை போல் எழுந்தது.

உனக்க ஒரு நாள் டயம் தருகிறேன். நீ நன்கு யோசி, உன்னைப் பற்றிய எல்லா விஷயங்களையும் அது எதுவானாலும், எப்படிப்பட்ட அசிங்கமாயிருந்தாலும் என்னிடம் சொல்லி விடு. இல்லையெனில்.....

மறுபடியும் நிறுத்தியவன் நேருக்கு நேராய் அவளைப் பார்த்தான்.

ஒருபோதும் என்னுடைய அன்பை நீ பெற முடியாது...

உறுதியான கட்டளைக் குரலில் சொல்லிவிட்டு விருட்டென வெளியேறினான் சத்யன்.



# 18



சத்யன் போய் ரொம்ப நேரமாகி விட்டது. ஒன்றும் தோன்றாதவளாய் அப்படியே மதுரா உட்கார்ந்திருந்தாள்.

என்ன சொன்னான்? எதுவானாலும் எப்படிப்பட்ட அசிங்கமானாலும்... சொல்லிவிட வேண்டுமாம்...!

அப்படியானால்...?அவளைப் பற்றி அவன் எண்ணியிருக்கும் கணிப்பு...? ஏதோ சாக்கடையில் புரளும் மட்டமான வாழ்க்கை நடத்துவதாய் நினைத்திருக்கிறானா?. இல்லை உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாமல் கண்ட கண்ட ஆண்களுடன் கூத்தடிப்பதாய் முடிவே பண்ணி விட்டானா?.

எதுவானாலும் சரி. அவனிடம் சொல்லி விட வேண்டுமாம். இல்லாவிட்டால் அவனது அன்பை இனி பெறவே முடியாது என்ற மிரட்டல் வேற.

அரிசிப் பற்கள் கடிபட காது தொங்கட்டான்கள் அதிர வெகுண்டு போய்தான் மதுரா சிந்தித்தாள். தன்னை மட்டமாக எண்ணிவிட்டு அதிடில் மிரட்டலாய் ஒருநாள் கெடு வேறு!

ஒருகணம் சத்யன் மேல் கோபம் கோபமாக வந்தாலும் மறுகணம் எங்கே அவன் சொல்வது போல் ஒரேயடியாய் அவனது அன்பை பெற முடியாமல் போய் விடுமோ? என்ற பயமம் மதுராவுக்கு இருந்தது.



எல்லாவற்றிற்கும் மேலாக அந்த ரகசியத்தை ஒருபோதும் அவள் வாயால் சத்யனிடம் சொல்ல முடியாது. சொல்லவும் வாய்ப்பில்லை..?

பின்... என்ன செய்வது? என்னதான் செய்யப் போகிறாள்?

இந்த சமயம் பார்த்து குருநாதரும் ஊரில் இல்லை. வெளிநாடு டூர் சென்றிருக்கிறார். வர ஒரு மாதம் ஆகும். அவர் இருந்தாலாவது நிலைமையை விளக்கி அவர் யோசனையைப் பெறலாம். ஏதாவது செய்யலாம். மனிதர் பெரிய இக்கட்டில் நம்மை மாட்டி விட்டுச் சென்று விட்டாரே! யோசித்து யோசித்துப் பார்த்தும் மதுராவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. கடைசியில் ஒரு முடிவிற்கு வந்தவளாய் பாஸ்கர் வீட்டிற்கு போன் செய்தாள். பணியாள் எடுத்ததும் அவனிடம் விபரம் சொன்னாள்.

ஒரு வாரம்தான் அங்கு பாஸ்கரை பார்க்க வரப்போவதில்லை என்றும், பாஸ்கரை ஜாக்கிரதையாய் பார்த்துக் கொள்ளும்படியும், எதுவும் அவசரத் தேவையேற்பட்டால் அலுவலகத்தில் வந்து பார்த்து தகவல் சொல்லும்படி சொல்லிவிட்டு போனை வைத்தாள்.

தன்னாள் செய்ய முடிந்தது இது ஒன்றுதான் என்றும் சொல்லிக் கொண்டாள்.

கூடவே சத்யன் வைத்த ஒருநாள் கெடு ஞாபகம் வந்தது. தன் மீது அத்தனை சேற்றையும் பூசிவிட்டு அதற்கு கெடு வேறு!

ஆனால் அவளால் ஒன்றும் செய்ய முடியாது. தலைக்கு மேல் வெள்ளம் போய் விட்ட பிறகு இதைக் கண்டு அஞ்சுவது அவளால் இயலாத காரியம்!

வழக்கம் போல் அலுவலகம் சென்று வந்து கொண்டிருந்தாள் மதுரா.

ஒவ்வொரு நாளும் சத்யன் அலுவலகத்தில் நுழையும்போது அவள் ஸீட் முன் நின்று ஒருகணம் அவளையே உற்றுப்பார்த்தான். வேண்டுமென்றே வேலையில் ஆழ்ந்திருப்பது போல் மதுரா தன் கூட்டுக்குள் சுருங்கிக் கொள்வாள். ஒரு அர்த்தமான முறைப்புப் பார்வையுடன் அங்கிருந்து சத்யன் அகல்வான்.

இப்படியே ஒரு வாரம் ஓடியது.

கடைசியில் அன்று பொறுமையில்லாதவனாய் சத்யனே அவளை கூப்பிட்டனுப்பினான்.

ரூமிற்குள் அப்பாவியாய் நுழைந்தவளை வேல் குத்தும் பார்வையோடு எதிர் கொண்டான்.

ஆனாலும் உனக்கு திமிர் ஜாஸ்தி... என்றான் எடுத்த எடுப்பில் ஆவேசமாய்.

மதுரா பதில் சொல்லவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு அவனையே பார்த்தாள்.

எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால்... இன்னும் என் கேள்விக்கு பதில் சொல்லாமல்... நீ பாட்டுக்கு அலைந்து கொண்டிருப்பாய்...?

என்ன கேள்வி? என்ன பதில்?

மதுரா எந்தவித உணர்ச்சியுமில்லாமல் கேட்டது சத்யனை மேலும் ஆவேசப்படுத்தியது.

ஓயோ! அது கூட தெரியாதா... இல்லை மறந்தது போல் நடிக்கிறாயா...? உன்னை... என்றபடி கைகளை அவள் கழுத்தை நெறிப்பது போல் கொண்டு வந்து நிறுத்தியவன், அந்த தடியனைப் பற்றி கேக்கிறேன் யார் அவன்? உனக்கும் அவனுக்கும் என்ன தொடர்பு? எதனால் இந்த கள்ளத்தனமான உறவு?

பீறிடத் துடித்த கோபத்தை அடக்கிக் கொண்டாள் மதுரா.

அப்படியெல்லாம் லேசில் விடுவதாய் தெரியவில்லை. சேரில் இருந்து எழுந்து அவள் முன் கைகட்டியபடி வந்து பார்வையால் முறைத்தான்.

ஒன்றுமில்லை என்றால் விட்டுவிடுவேனா? பதில் சொல்! அப்படியென்ன அந்த தடியனோடு ரகசியம் இருக்கிறது. எல்லாவற்றையும் தான் நான் பார்த்துவிட்டேன். எல்லாம்தான் வெட்ட வெளிச்சமாகி விட்டது.

நீங்கள் நினைப்பது போல் இல்லை...

ஆமாமா இல்லைதான். நான் நினைத்ததை விட நீ மகா மட்டமாய் இருக்கிறாய்.....

....

அவள் பதில் சொல்லாமல் இருக்கவே மறுபடியும் அவளைக் குத்தினான்.

அப்படி என்னதான் அவனிடம் இருக்கிறது? தினம் தினம் அவனுடன் இந்த ஆட்டம் போடுகிறாய்? ம்ம்.. பதிடில் சொல்..!

உங்கள் கேள்விக்கெல்லாம் என்னால் பதில் சொல்ல முடியாது...

சொல்லித்தான் ஆக வேண்டும்... சத்யனின் குரலில் மிரட்டல் தொனித்தது.

அவளை மேலும் நெருங்கி நேருக்கு நேராய் பார்த்தான்

இல்லையெனில்... நீ பயங்கரமான விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும்...

சுட்டு விரலை உயர்திதிக் காட்டி எவ்வளவு மிரட்ட முடியுமோ அவ்வளவோ மிரட்டினான் சத்யன். ஆனால் மதுராவிற்கு எரிச்சல்தான்



வந்தது. இவனாக எதையோ நினைத்து அசிங்கமாய் கற்பனை பண்ணிக் கொண்டால் அதை எப்படிடி சகிக் முடியும்?

எதையும் சந்திக்கத்தயார்...! என்றாள் விட்டேற்றியாக.

இந்த பதிலை சத்யன் ஒருகணம் எதிர்பார்க்கவில்லை.

அவளையே ஆழமாய் உற்றுப் பார்த்தான்.

ஓஹோ! அந்த அளவிற்கு துணிந்து விட்டாயா? நீ செய்தாலும் செய்வாய். உனக்கு அந்த தடியனோடு கூத்தடிக்க வேண்டும். அதற்காக என்ன வேண்டுமானாலும் நீ செய்வாய். ஆனால் இதையெல்லம் பார்த்துக் கொண்டு என்னால் சும்மா இருக்க முடியாது. உன் மீது உடனே ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் போறேன்....

சத்யன். சொல்லச் சொல்ல...மதுராவுக்கு எரிச்சல் அதிகமாகி பொறுமையே போயிற்று. தாராளமாய் எடுங்கள்...! என்றபடி அங்கிருந்து வறுவிறுவென அகலப் போனாள்.

சத்யனுக்கு வந்ததே கோபம்!

ஒரே வீச்சில் அவளைத் தாவிப் பிடித்த இழுத்தவன், என்னடி என் பேச்சை முழுதும்கேட்கக்கூட உனக்கு பொறுமை இல்லையோ? என்றபடி ஆவேசப்பட்டவனாய் திமிறிய அவளை மென்னி நொறுங்கும்படி இறுக ஆணைத்தான்.

மனம் என்ற ஒன்று இடிக்கிறது. இல்லாவிட்டால் இதற்குள் உன்னை ருசி பார்த்துவிட்டு எப்பவோ கசக்கி எறிந்திருப்பேன்... மூச்சு முட்ட அணைத்தவன் மறுகணமே தூக்கியெறிவது போல் அவளை விடுவித்து விலகினான்.

மதுரா ஒருகணம் அதிர்ந்து குன்றிப் போனவள் மறுகணமே விடுவிடுவென வெளியேறினாள்.

சொல்ல வேண்டிய எல்லாவற்றையும் சொல்லி முடித்து விட்டான் சத்யன்! இன்னும் ஒன்றும் பாக்கியில்லை. எல்லா மட்டமான வார்த்தைகளையும் உபயோகித்து அவளை நார் நாராய் கிழித்துவிட்டான். இனி எதற்கு கவலைப்பட வேண்டும்? கவலைப்பட்டு என்ன ஆகப் போகிறது?

சீட்டில் உட்கார்ந்து விருப்பாய் நினைத்தாலும் மறுநிமிடமே மனம் பின்நோக்கி பாய்ந்தது. சத்யன் சொன்ன சுட்டெரிக்கும் வார்த்தைகளை நினைத்து உள்ளுக்குள் அழுதது.

மதுராவுக்கு தன் மேலே கோபம் பற்றிக் கொண்டு வந்தது. இப்படி ஆண் ஒருவருடன் தன்னைப் பார்த்ததும் சராசரி மனிதன் போல் தனது அசிங்கமான கற்பனைகளை பூசி அவளை எள்ளி நகையாடும் சத்யனுக்காக

ஏன் வருத்தப்பட வேண்டும்? அவன் இப்படிப் பேசிவிட்டானே என ஏன் உருக வேண்டும்?

உடனடியாக அவன் முகத்தில் அறைவது போல் உண்மையை ஒப்புவித்து விடலாம். ஆனால் அதற்கும் குருநாதரின் கெஞ்சிய முகம் அவளை தடுத்திறது. மறுபடியும் குருநாதரின் செயலாளருடன் தொடர்பு கொண்டு குருநாதர் எப்போது வருவார் என ஆவலாய் விசாரித்தாள்.

ஆனால் குருநாதர் வர இன்னும் ஒரு மாத காலம் ஆகலாம் என்று அவள் காதில் விழுந்தபோது அவள் கொண்டிருந்த நம்பிக்கை முழுதும் போயிற்று. அதை நினைத்தே அன்றைய இரவுப் பொழுதும் அவளுக்கு தூங்காமல் கழிந்தது..



## 19



மறுநாள் அலுவலகம் சென்று சீட்டில் உட்காரும் போதுதான் சத்யன் சொன்ன ஒழுங்கு நடவடிக்கை பற்றி ஞாபகம் வந்தது.

அப்படியென்ன ஒழுங்கு நடவடிக்கை எடுத்து விடப் போகிறான்? எதுவானலும் சந்திக்கத்ட தயார்தான்!

நிமிர்ந்து கொண்டவளாய், வில்லில் முறுக்கேறிய நாணின் விரைப்புடன் வேலைகளைச் செய்து செகாண்டிருந்தாள்.

காலை, மதியம் வரை எவ்வித பிரச்சினையுமில்லை.

சத்னனும் அலுவலகத்திற்கு அன்று வந்த மாதிரியும் தெரியவில்லை!

நிம்மதியுடன் வேலை பார்த்தவள் மாலை வேலை முடியும் தருவாயில் அலுவலகத்தினுள் சத்யனின் கார் நுழைவதை திகைப்புடன் கவனித்தாள்.

சத்யன் அவள் எதிர்பார்த்தது போலவே நேராய்அவளைத் தேடித்தான் வந்தான்.

அவன் முகத்தில்தான் என்ன ஒரு இறுக்கம்? புன்னகை விரிய அவளைப் பார்த்ததும் மலர்ந்த முகமா இது!

அதே கடுகடுத்தனத்துடன் அவளை நெருங்கியவன், நாளை நீ ஊருக்கு கிளம்புகிறாய். புறப்படத் தயாராய் இரு... என்றான் கட்டளை போல்.



மதுரா ஒரு கணம் வியப்புடன் பார்த்தாள்.

ஊருக்கா? எதற்காக?

உன்னை எங்கிருந்து பிடித்து வந்தேனோ... அங்கு மறுபடியும் கொண்டு சென்று அடைக்கப் போகிறேன்...

மதுரா மறுபடியும் புரியாமல் விழிக்கவே, என்ன இன்னுமா புரியவில்லை...? அன்பு இல்லத்டதிற்கு! உன்னை மறுபடியும்அன்பு இல்லத்தில் கொண்டு போய் மேடத்திடம் ஒப்படைத்து விடப் போகிறேன்...

அன்பு இல்லத்திற்கா?

ஒரு கணம் நிஜமாகவே திடுக்கிட்டு விட்டாள் மதுரா?

அவளையறியாமல் அவள் கண்களில் நீர் தளும்பிவிட்டது.

என்ன முழிக்கிறாய்? இவ்வளவு நாள் நீ அவிழ்த்துப் போடாத குறையாய் ஆட்டம்போட்டது முடிவுக்கு வந்துவிட்டது என நினைக்கிறாயா? உன்னைப் போன்று கொட்டிலில் அடைத்து மேய்க்க வேண்டிய கேஸ்களை ஊர் மேய விட்டால் இப்படித்தான் நடக்கும் என்பதை அனுபவத்திடில் புரிந்து கொண்டேன். நாளை மூட்டை முடிச்சக்களுடன் தயாராய் இரு. நீ இனி இருக்க வேண்டிய இடம் அன்பு இல்லம்தான்!

படபடவென நெருப்புத் துண்டங்களை அவள் தலையில் கொட்டிவிட்டு அதே வேகத்தில் நிம்மதியுடன் வெளியேறினான் சத்யன்.

அதிர்ந்து ஆடித்தான் போய் விட்டாள்

அதிரடியாய் சத்யன் இப்படி ஒரு முடிவு எடுப்பான் என அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

அன்பு இல்லத்திற்கு அவள் திரும்பப் போவது ஒன்றும் கசப்பான விஷயமில்லை. ஆனால் தான் சரியில்லை என்ற அவப்பெயருடன் சத்யன் அங்கு கொண்டு போய் விடுவதை எப்படி சகித்துக் கொள்ள முடியும்?

ஏதாவது செய்தாக வேண்டும். சத்யன் சொன்னால், சொன்னது போல் நாளை செய்து விடுவான்.

திரும்பவும் பிரயாசையுடன் குருநாதர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டாள். அவர்இன்னும் வெளிநாட்டில் இருந்து திரும்பவில்லை என்ற பதிலே கிடைத்தது.

ஒன்றும் தோன்றாதவளாய் ரொம்ப நேரம் யோசித்தாள். சத்யனிடம் இனியும் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடி தப்பிப்பது இயலாத காரியம் என்று அவளுக்கு புரிந்தது.

அதே நேரம் எக்காரணம் கொண்டும், தனக்கு கொடுத்த பணியை முடிக்காமல், அவப்பெயருடன் அன்பு இல்லம் செல்வதையும் அவள் விரும்பவில்லை.

நிதானமாய் திரும்பத் திரும்ப யோசித்து திடமாய் ஒரு முடிவும் எடுத்தாள் மதுரா.



## 20



மறுநாள் அதே வீராப்புடன் சத்யன் அவளைத் தேடி ஹாஸ்டல் ரூமிற்கு வந்தான். அறை காலியாயிருந்தது. பக்கத்து ரூமில் விசாரித்தபோது நேற்ற இரவோடு இரவாய் பெட்டியைத் தூக்கிச் சென்று விட்ட விபரம் தெரிந்தது.

ஓடுகாலி! அதற்குள் ஓடிவிட்டாளா? சூட்டு வெளிப்பட்டவுடன் இடத்தைக் காலி பண்ணி விட்டாள். விடக்கூடாது, விடமாட்டேன்...! கைகளைக் குத்திக் கொண்டு ஆத்திரமாய் வெளிவந்து யோசித்தான் சத்யன்.

பின் கோபமாய் காரிலேறி விருட்டென கிளம்பிப் போனான்.

சத்யன் ஹாஸ்டல் ரூமிற்கு தன்னைத் தேடிப் போனதை ஏமாற்றமுடன் கோபமுமாய் வெளியே வந்ததை, காரிலேறி வேகமாய் போனதை எல்லாவற்றையும் தூர நின்று கவனித்துக் கொண்டிருந்தாள் மதுரா!

எதிரே சாலையோர மரம் ஒன்றின் மறைவிலிருந்து வெளிப்பட்டு ஹாஸ்டலை நோக்கி நடந்தாள்.

சத்யனின் கோபமான முகம், அந்த ஆவேசம் எல்லாம் அவளை அதிரச் செய்தது. அவன் இப்படி கோபம் கொள்ளும் அளவுக்கு ஆகிவிட்ட தன் சூழ்நிலையை நினைத்தும் வெறுப்பாய் இருந்தது.



நேராய் ஹாஸ்டலுக்கு நுழைந்து தான் சொன்னபடி சொல்லி நடித்த பக்கத்து ரூம் தோழிக்கு நன்றி சொன்னாள். தனது உடமைகளில் சில துணிமணிகளை மட்டும் சிறிய பை ஒன்றில் எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

அவள் மனதில் தெளிவும் பிறந்திருந்தது.

நேராய் பாஸ்கர் தங்கியிருக்கும் வீட்டிற்குச் சென்று கொஞ்ச நாட்கள் தங்கிக் கொள்ள வேண்டும். பெரியவர் குருநாதர் ஊரிலிருந்து திரும்பியதும் விஷயத்தை தெரிவித்து சத்யனுக்கு உண்மையை புரிய வைக்க வேண்டும்.

நினைத்தடதவளாய் ஆட்டோ ஒன்றை பிடித்து பாஸ்கர் தங்கியிருக்கும் லயன்ஸ் காலனிக்குப் போகச் சொன்னாள்.

மதுரா சென்ற அதே சமயம் அலுவலகம் வந்து உட்கார்ந்த சத்யனுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

ஆத்திரமாக துடித்துக் கொண்டிருந்தான்.

எங்கே போயிருப்பாள்? என்னிடமே நாடகமாடிவிட்டு... நாளை கிளம்ப வேண்டும் என்றதும்... பெட்டியைத்தூக்கிக் கொண்டு அவளே போய்விட்டாளா?

எங்கு போய் விடுவாள்? எப்படியும் கண்டு பிடித்தே தீருவேன்...!

நிமிர்ந்து ஆவேசமாய் யோசித்தவனின் மனதில் மதுராவுடன் பார்த்த பாஸ்கர் உருவம்தான் விரிந்தது.

அந்த தடிப்பயலுடன் தானே சுற்றிக் கொண்டு இருக்கிறாள்... அவனைத் தேடித்தான் போயிருப்பாள்...? ஆனால் அவன்... தங்கியிருப்பது... அவனது வீடு... அதை எப்படிக் கண்டுபிடிப்பது?

நெற்றி சுருங்க யோசித்தவன் அதற்கும் விடை கிடைத்தவனாய் நிமிர்ந்தான். பாஸ்கரை அடிக்கடி பார்க்கும் பார் கிளப் ஞாபகம் வந்தது. அந்த பார் கிளம் ஆசாமியை பர்ஸைத் திறந்து கவனித்தால்...அட்ரஸை சொல்லிவிடுவான்.

யோசனை உருப்பெற்றதும் மின்னலாய் அங்கிருந்து கிளம்பினான் சத்யன்.

......

மதுரா பாஸ்கர் வீட்டை அடைந்தபோது.... பணியாட்கள் சுறுசுறுப்பாய் வேலைகளைச் செய்து கொண்டிருக்க.... பாஸ்கர் மட்டும் வழக்கம் போல் கவரை வெறித்த மயக்க நிலையில் இருந்தான். அவன் உடல் நிலையில் எந்தவித முன்னேற்றமும் இல்லை.

மதுரா வீட்டின் ஓரமாய்இருந்த சிறிய அறை ஒன்றை தனக்காக தேர்ந்தெடுத்து பெட்டியை வைத்துக் கொண்டாள். பாஸ்கருக்கு கொடுக்க வேண்டிய மருந்து மாத்திரை பொறுப்புகளை உடனடியாக ஏற்றுக் கொண்டு அவனை கவனிக்க ஆரம்பித்தாள்.

இரண்டு நாள் எவ்வித பிரச்சனையுமில்லாமல் கழிந்தது.

மூன்றாம் நாள் அது நிகழ்ந்தது.

மாலை வழக்கம் போல் வீட்டுத் தோட்டத்தில் பாஸ்கரை கைத்தாங்கலாய் வாக்கிங் கூட்டிச் சென்றாள்.

சிறிது தூரம் சிரமப்பட்டு பாஸ்கர் நடந்தவன் அதற்கு மேல் நடக்க முடியாதவனாய் அப்படியே உட்கார்ந்து விட்டான்.

அந்நேரம் பார்த்து பணியாட்கள் யாருமில்லை.

மதுராதான் வேறு வழியில்லாதவளாய் பாஸ்கரை தாங்கிப் பிடித்து சிரமத்துடன் உள்ளே கூட்டிச் சென்றாள்.

உள்ளறைக்கு சென்று படுக்கையில் பாஸ்கரை அமர்த்தி படுக்க வைத்தாள்.

மூச்சு வாங்க நிமிர்ந்தவள்.... எதிரே கடித்துக் குதறும் புலியாய் நின்றவனைப் பார்த்டது அதிர்ந்தே விட்டாள்.!

எதிரே கண்கள் ஜொலிக்க சத்யன்!



இவன் எப்படி இங்கு வந்தான்? எப்படி பாஸ்கர் வீட்டைக் கண்டுபிடித்தான்? கடவுளே! வகையாய் இவனிடம் மாட்டிக் கொண்டேனே...! மதுரா தவித்தாள்.

என்ன படுக்கை வரை சல்லாபம் வந்து விட்டதா? நல்ல சமயத்தில்தான் நான் வந்திருக்கிறேன்...! நிஜமாகவே அவளைக் குதறினான் சத்யன்.

மதுராவுக்கு ஒன்றும் பதில் பேசத் தோன்றவில்லை. என்ன சொன்னாலும் கேட்கவா போகிறான்? இரை தேடும் மிருகமாய் அல்லவா வந்திருக்கிறான்!

இருந்தாலும் நம்பிக்கை கொண்டவளாய், பாஸ்கர் முகத்தை காட்டியவள், முதலில்இவரைப் பாருங்கள், பார்த்தால் தெரியவில்லை...? எவ்வளவு பெரிய நோயாளி என்று...? மதுரா சொன்னதற்கு சத்யன் சிரித்தான்.

நோயாளியா...? இவனா...? என்றபடி ஒரு நிமிடம் பார்வையைக் கீழிறக்கிவிட்டு சத்யன் நிமிர்ந்தவன், இகழ்ச்சியாய், இவனைப் பார்த்தால் நோயாளி மாதிரி தெரியவில்லை. உன்னிடம் சுகம் அனுபவித்துவிட்டு கிறங்கிக் கிடப்பவன் போல் அல்லவா தெரிகிறது? என்றான் அவள் நெஞ்சில் நேராய்க் கத்தியைக் குத்துவது போல்.

மதுரா காதுகளைப் பொத்திக் கொண்டாள்.

என்ன ஒரு அசிங்கமான கற்பனை....? ச்...சீ...! போங்கள்...! போய்விடுங்கள் இங்கிருந்து... குரலில் உச்சஸ்தாயியில் மதுரா கத்தினாள்.

ஆனால் சத்யன் அதற்கெல்லாம் பயப்படுகிறவனா?

நிதானமாய் அவள் பக்கம் வந்து முறைத்தான்.

சும்மா குதித்து ரகளை பண்ணாதே. உன் குட்டெல்லாம் வெளிச்சமாகி விட்டது. இனி என்ன நடக்கப் போகிறது தெரியுமா?

என்ன நடக்கப் போகிறது?

நான் முன்பு ஒருமுறை உன்னிடம் சொன்னேனே... உன் தலைமுடியைப் பற்றி தரதரவென இழுத்து செல்லுவேன்.. என...அதைத்தான் இப்போது செய்யப் போகிறேன்...

சத்யன் இப்படிச் சொன்னதும் ரொம்பவும் வெகுண்டுதான் போனாள் மதுரா.

அப்படி நீங்கள் செய்தால் என் கை ஒன்றும் பூப்பறித்துக் கொண்டிருக்காது...

அதையுமதான் பார்ப்போமே.. என்றபடி சத்யன் அவளை நெருங்கினான்.

ஆவேசமாய் அவன் கைகளைக் கொண்டு அவள் முகத்தை நெருங்கி தலைமயிரை பற்றிக் கொள்ளப் போனானன்.

மதுரா மட்டும் அவனுக்கு இளைத்தவளா?அவளும் ஆத்திரமாக கைகளை ஓங்கி தடுத்தபடி அவனை எதிர்கொண்டாள்.

இருவரும் கொஞ்சம் பொறுங்கள்...!

திடீர்க்குரலில் இருவரும் ஸ்தம்பித்துத் திரும்பினர்.

அங்கு.... குருநாதர் நின்று கொண்டிருந்தார். வெளிநாட்டிலிருந்து இன்றுதான் திரும்பினேன். நான் பயந்தபடியே நடந்திருக்கிறது! பெருமூச்சு விட்டார்.

குருநாதரைப் பார்த்ததும்தான் மதுராவுக்கு மூச்சே வந்தது.

தந்தையைக் கண்டதும் சத்யனுக்கு ஒரே ஆச்சரியம்! கோபம் எல்லாம் இறங்கியவனாய் தன்னிலைக்கு வந்தான்.

சாந்தம்...! சாந்தம்..! இருவரும் கோபத்தை விடுங்கள் எல்லாவற்றுக்கும் காரணம் நான்தான்! குருநாதர் கைகளை கூப்பியபடி சத்யனை நெருங்கினார்.



பாவமன்னிப்பு கேட்காத குறையாய் குரல் கம்ம சத்யனிடம் பாஸ்கர் பற்றிய எல்லா விவரங்களையும் சொல்ல ஆரம்பித்தார்.

ஆடித்தான் போய் விட்டான் சத்யன்!

தந்தைக்கு இப்படியொரு மறுபக்கம் இருக்கும் என அவன் கொஞ்சமும் நினைக்கவில்லை!

ஆனாலும் பெற்றவராயிற்றே! சொல்லியபடி தேம்ப ஆரம்பித்தவரை தேற்றி சமாதானப்படுத்தினான்.

கொஞ்ச நிமிடங்கள் அமைதியாய் கழிந்தது.

குருநாதர் அங்கிருந்து அகன்று விட்டார்

சத்யன் திரும்பி மதுராவைப் பார்த்தான்.

சண்டைக்கோழி போல் சிலிர்த்துக் கொண்டு மதுரா நின்றிருந்தாள்.

ஆனாலும் இவளை ரொம்பத்தான் படுத்திவிட்டேன் என்ன ஒரு மட்டமான சந்தேகப் புத்தி எனக்கு...!

சத்யன் குற்ற உணர்ச்சி பொங்க நெருங்கினான்.



**தீபம் ஏற்றும் போது**
**சொல்லவேண்டிய மந்திரம்**

**சிவம் பவது கல்யாணம்**
**ஆயூராரோக்ய வர்த்தனம்**
**மம துக்க விநாசாய**
**சந்த்யா தீபம் நமோ நம!**

முழுவதும் விந்தனையான நினைத்ததை நிறைவேற்றும்
அற்புத சித்த மோதிரம் இலவசம்



அப்படி தாங்கள் ஏதேனும் துயரால் சிக்கியிருப்பின் கவலைப்பட வேண்டாம். உடன் எங்கள் ஆசிரம மோதிரம் பெற்று அணிந்தாலோ அல்லது உடன் வைத்திருந்தாலோ நீங்கள் விரும்பும் ஆண் / பெண் இதயத்தை கவரும், யாருடைய பெயரை உச்சரிக்கின்றீரோ அவர் எத்தனை கல் நெஞ்சம் படைத்தவராயிருப்பினும் தங்கள் காலடியில் வந்து விழுவார். மேலும் தங்கள் விருப்பத்தின்படி பணிந்து நடப்பர், வியாபாரத்தில் லாபம், பரீட்சையில் வெற்றி, மனதுக்கேற்ற திருமணம், புத்திரபாக்யம், லாட்டரி சீட்டில் பரிசு, வீட்டில் சண்டை சச்சரவு, நோய் நொடி, கடன் பிரச்சனை முதலான குறைகளிலிருந்து விடுதலை. ஆரோக்கியத்தில் அனுகூலம், நினைவாற்றல் கூடுதல், வேலையில் பதவி உயர்வு, வழக்குகளில் வெற்றி, இழந்த பொருட்கள் திரும்ப கிடைத்தல், இவ்வாறு நாளொருமேனி பொழுதொரு வண்ணம் முன்னேற்றம் அடைந்து எல்லா காரியம் வெற்றியுடன் நடந்து முடியும். இந்த அற்புத சித்த மோதிரம் தற்போது எங்களது ஆசிரம விசேஷ யாகத்தை முன்னிட்டு சில நாட்களுக்கு இலவசமாக அனுப்பி வைக்கப்படும். பெற விரும்புவோர் பெயர், விலாசம் மற்றும் ஒன்றிலிருந்து ஒன்பதுக்குள் ஓர் எண்ணையும் மறக்காமல் எழுதவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

N. SUBRAMANI THANTRIC
VENKATAPURAM, GUDIYATHAM (VELLORE) - 632 602.
PH : 04171 - 229015, CELL : 98653 71667

நிஜமாகவே வருந்துகிறேன். என்னை மன்னித்துவிடு மதுரா, உன்னை நிறையவே துன்புறுத்தி விட்டேன்... உண்மையான வருத்தம் தோய்ந்த குரலில் பேசினான்.

மதுரா பேசாமலிருக்க அவன் பக்கம் நெருங்கினான்.

சிலிர்த்து நின்றவளின் தோளில் மெல்ல கை வைத்தான்.

ச்சீ... தொடாதீர்கள்....

மேலும் சிலிர்த்து அவசரமாய் தட்டி விட்டாள் மதுரா.

சத்யனின் முகத்தில் குறுஞ்சிரிப்பு படர்ந்தது.

மறுநிமிடமே மதுரா சற்றும் எதிர்பாரா வண்ணம் அவளை தாவிப் பிடித்து இறுக அணைத்தான் சத்யன்.

விடுங்கள்... விடுங்கள்... என திமிறினாள் மதுரா. உங்கள் கை பட்டதும் கம்பளிப் பூச்சு ஊர்வது போல் இருக்கிறது விடுங்கள். என்று கோபமாய் சினந்தவளை மேலும் இறுக்கி மூச்சு முட்டுமளவுக்கு சத்யன் அணைத்தான்.

அணைத்தபடியே மெல்ல அவள் முகத்தை நிமிர்த்தி அவள் இதழ்களில் முத்தமிடவும் செய்தான்.

ச்சீ... உங்களுக்கு வெட்கமாயில்லை? என்று துடித்துச் சிவந்தவளிடம் சிரிப்பு மாறாமல் கன்னங்களை உரசியவன் இனி எதற்கும் வெட்கமில்லை எல்லாம் போயிற்று... என்றபடி கரங்களால் அவளது சின்ன இடையை மேலும் வளைத்தவன், உன்னை வார்த்தைகளால் ரொம்பவும் துன்புறுத்தி விட்டேன் அதற்கு சரியான மருந்து இதுதான்...! என்றபடி மீண்டும் அணைத்தான்.

நான் என்ன செய்யட்டும்? பின் சத்யன், சாந்தப்படுத்துவது போல் என் சூழ்நிலை அப்படி கண்மணி! என் அவன் காதுகளில் முணுமுணுத்தது அவளை ஆச்சரியப்படுத்தியது.

என்ன.... சூழ்நிலையா?

ஆமாம் உன்னை இன்னொரு ஆணுடன் பார்த்ததும் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எங்கே நீ கிடைக்காமல் போய் விடுவாயோ என்ற பயம் வேறு....

ஓ... அப்படி ஒரு பயம் கூட இருந்ததா? என மதுரா கேலி பொங்க வினவவும், பின் இருக்காதா இப்படியொரு பேரழகியை எந்த ஆணும் பார்த்துவிட்டால் சலனப்படாமல் விட்டு வைப்பானா..? என அவன் முடிப்பதற்குள், அதற்காகத்தான் நீங்களும் கசக்கியெறிய துடித்தீர்கள்... அப்படித்தானே? சினமாகக் கேட்டு முடித்தாள் மதுரா.

என்ன சொல்கிறாய் கண்மணி?

அதற்குள் மறந்து விட்டதா? அன்று என்ன சொன்னீர்கள்... மனம் என்ற ஒன்று இடிக்கிறது. இல்லாவிட்டால் உன்னை எப்போதோ கசக்கி எறிந்திருப்பேன்... என்று....

மதுரா ஞாபகப்படுத்தியதும் சத்யன் ஒருகணம் சங்கடமாய் நெளிந்தவன், சொன்னேன். ஆனால் ஒருபோதும் நான் அப்படிச் செய்ய மாட்டேன். உனக்குத் தெரியாதா கண்மணி? என்றான் புன்னகை மாறாமல்.

ஆனாலும் பர்ஸையெல்லாம் தூக்கி ஆசை காட்டினீர்களே? என்று மறுபடி அவனது செயலை அவள் ஞாபகப்படுத்தியதும், இன்னும் அதையெல்லாம் நினைவு வைத்துக் கொண்டிருக்கிறாயா? விட்டு விடு...! என்றபடி சத்யன் அவள் இதழ்களில் முத்தமிடப் போனான்.

மதுரா லேசில் விடுவதாயில்லை. சினந்து அவனை பார்த்தவள், என்னவெல்லாம் பேசினீர்கள்? வார்த்தைகளால் எப்படியெல்லாம் என்னை சாகடித்தீர்கள்? அதற்கெல்லாம் பதில் சொல்லுங்கள்? என்றாள் சீறியவளாய்.

சத்யன் அசட்டுப் புன்னகையுடன் தலை சாய்த்தவன்,

மன்னித்து விடு எல்லாம் ஆண்கள் புத்தி....! என்றான் சிரிப்பை பெரிதாக்கியபடி

இப்படி சொல்லிவிட்டால் போதுமா?



போதாதுதான். ஏதாவது தண்டனை கொடு. ஏற்கத்தயாராயிருக்கிறேன்....

தண்டனை...? ம்ம்.... கொடுக்கத்தான் வேண்டும்....? ஒரு கணம் யோசிப்பது போல் மதுரா புருவங்களை உயர்த்த.... அவள் காதுமடல்களை உரசி மறுபடியும் கன்னத்தில் இதழ்களைப் பதித்தவன், ரொம்பவும் யோசிக்காதே கண்மணி. உண்மையிலே அன்பு இல்லத்து அறிவாளி நீதான்... என்பது புரிந்து விட்டது...!

சொல்லியபடி அவன் நகைக்க முயலவும், என்ன மறுபடியும் கிண்டலா? என்று சினந்து குரல் உயர்த்தியவளிடம், கிண்டல் இல்லை. நிஜமாகவே! இல்லையெனில்.... இப்படி அணைத்துப் பிடித்து முத்தமிட்டதும் கொண்டிருந்த கோபமெல்லாம் நீரூற்றாய் மாற நீயும் என்னை அணைத்திருப்பாயா? என சத்யன் கேட்டதும்தான் தன்னையறியாமல் கரங்களால் தானும் அவனை அணைத்து தழுவியிருப்பதை உணர்ந்தாள் மதுரா.

குட்டு வெளிப்பட்டு விட்ட தவிப்போடு விலக முயன்றவளை அடக்கியவன் மேலும் இறுக்கி அவளது செவ்விதழ்களில் அழுந்த முத்தமிட்டான்.

அணைத்திருந்த அவள் கூந்தலை மெல்ல வருடினான். வருடிய கரங்களால் விடாதபடி,

இப்போது நான் ஒன்று செய்யப் போகிறேன்... என்றான் சத்யன் பீடிகை பொங்க.

மதுரா கண்களை ஆச்சரியமாய் விரித்துப் பார்த்தாள்.

உன் தலைமுடியைப் பிடித்து...

......

உன்னை தரதரவென ....இழுத்து....

என்ன....? என்ன....? என வெகுண்டு போய்

மதுரா கோபமாய் சிலிர்க்கவும் அவசரமாய் கட்டிலைக்காட்டிய சத்யன், அங்குதான் இழுத்துச் செல்லப் போகிறேன்... என சிரிப்புடன் முடிக்க, முகம் வந்து விலகப் போனாள் மதுரா.

விலகப் போனவளை மறுபடி இழுத்டது அணைத்டதவன் அப்படியே தன்னோடு ஐக்கியப்படுத்திக் கொண்டான்.

அவனது அணைப்பில் கட்டுண்டு தன் வசமிழந்தவளாய் வெட்கம் படர கண்களை மூடிக் கொண்டாள் மதுரா.




**நந்தினி** மாத நாவல்

மலர் : 1 இதழ் : 5

வெளியிடுபவர் - ஆசிரியர் :

**எம்.எஸ்.சித்ரா**

அக்ஷயா பப்ளிகேஷன்ஸ்

56/2, ஸ்ரீராம்பேட்டை தெரு, சி.ஐ.டி.நகர், நந்தனம், சென்னை-35.

போன். 044-24361734

கதையில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே, கதையை திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

**Akshaya Novel Monthly**

Owner, Publisher & Editor **M.S. Murugan,**

Published at :

New No. 56/2, Sri Rampet Street, C.I.T. Nagar, Nandanam, Chennai - 600 035.




